கல்கி

KALKI 30.5.93
ரூ. 3.00



விண்ணைச் சாடும் தனியார் விமானங்கள்

அபரிமிதமான சுவை, கட்டுக்கடங்காத மகிழ்ச்சி.





வெயிலின் கொடுமையில் வாடுகிறீர்கள். செய்வதறியாது திகைக்கிறீர்கள். மனமோ கொந்தளிக்கிறது. • உங்கள் வாழ்க்கைக்கு சுவையூட்டும் தருணம் இதுவே. நீங்கள் செய்ய வேண்டியது — உடனே வோல்ஃபார்ம் எடுத்து கோப்பையை நிரப்புங்கள். தெவிட்டாத சுவையை மகிழ்ச்சியுடன் பருகுங்கள். • ஒரு புத்துணர்வு, ஒரு புது தெம்பு, எதையும் சாதித்திடும் உத்வேகம். உணருகிறீர்கள் அல்லவா? • மற்றொரு பெரிய கோப்பை அளவைப் பருகவும். பறித்தெடுத்த ஆரஞ்சு, மாம்பழம் மற்றும் பைனாப்பிள் ஆகியவை கனியிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ஆகையால், அதிகம் பருகினால் அதிக மகிழ்ச்சியே. • ஒரு பாட்டிலிலிருந்து 32 கோப்பைகள் தயாரிக்கலாம். ஒரு பார்ட்டி நடத்த போதுமானது, இல்லையா?

Vôlfarm
JUICE CONCENTRATE

பா.ம.க.வின்

குழப்பம்

அ.தி.மு.க.வின்

அதிர்ஷ்டம்!

பாவம், பா.ம.க.

பரிதாப நிலையில் பா.ம.க.

காணாமல் போகும் பா.ம.க.

வாசகர்கள் தங்களுக்குப் பிடித்தமான வரியை 'டிக்' அடித்துக் கொள்ளலாம். மூன்றையுமே 'டிக்' அடித்தாலும் பொருந்தும்!

பா.ம.க.விலிருந்து பத்தாயிரம் தொண்டர்கள் பிரிந்து போய் அ.தி.மு.க.வில் சேர்ந்திருக்கிறார்கள் - புரட்சித் தலைவி முன்னிலையில். இதற்குச் சேப்பாக்கம் ஸ்டேடியமே தேவைப்பட்டிருக்கிறது. இதற்காக உழைத்த அமைச்சர் செல்வ கணபதி தட்டிக் கொடுக்கப்பட்டதுடன், அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்ட போது உள்ளாட்சித் துறையைப் பெற்று உயர்ந்திருக்கிறார்.

இப்படி பா.ம.க. விலிருந்து பல பேர் கட்சி மாறுவானேன் என்றால், 'ராமசாமி படையாச்சி மாவட்டம்' என்று பெயர் சூட்டியதில் ஏற்பட்ட மகிழ்ச்சி; 'மதம் மாறியுள்ள வன்னியருக்கும் கூடப் பிற்படுத்தப்பட்டோருக்கான சலுகைகள் உண்டு' என்று அறிவித்ததில் ஏற்பட்ட சந்தோஷம் என்று இரண்டு பாஸிடிவ் அம்சங்களைச் சொல்லலாம். ஆனால் இந்த லாபிபாப்புகள் தவிர, பா.ம.க. வுக்குள் ஏற்பட்டுள்ள அதிருப்தியான சூழ்நிலையே கட்சி கரைய முக்கியக் காரணம்.


"வன்னியர் சங்கத்தைப் பா.ம.க என்று பெயர் மாற்றி, அரசியலில் புகுந்த போது ராமதாஸ் ஐயா பலரையும் கருத்துக் கேட்டு விவாதித்து முடிவுகளை எடுப்பார். ஆனால் எப்படியோ நக்ஸலைட்டுகள் சிலரும் புலிகள் ஆதரவாளர்கள் சிலரும் கட்சிக்குள் ஊடுருவி விட்டனர். ஐயாவையும் தங்கள் எண்ணங்களுக்குச் சாதகமாகத் திருப்பி விட்டனர். இதனால் வந்த குழப்பங்கள்தான் இன்றைய ஆபத்து" என்றார் ஒரு பா.ம.க.வின் தீவிர ஆதரவாளர்.

"இலேசுப்பட்ட குழப்பங்களா அவை? காங்கிரஸைத் தீவிரமாக எதிர்த்து வந்த பா.ம.க., திடீரென்று இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது காங்கிரஸ் ஆதரவுக் கட்சியாக மாறியது ஏன்? வாழப்பாடி பேச்சைக் கேட்டுச் செயல்படப் போகக் கடைசியில் முகத்தில் கரியைப் பூசி அனுப்பி விட்டார்கள். இப்போ எங்கள் முகத்தை எங்கே கொண்டு போய் ஒளித்துக் கொள்ள?" என்று கேட்கிறார் அவர். "கட்சியில் உள்ள மிதவாதத் தலைவர் ஒருவர் செய்த வேலை இது. 'நாம் இப்படி ஒரு முடிவு எடுக்காவிட்டால் நம் கட்சியையே தடை செய்திருப்பார்கள்!' என்று இப்போது அவர் நொண்டிச் சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கிறார்!

"இதே போல்தான் பிரபாகரன் விஷயமும். கண்ணை மூடிக் கொண்டு புலிகளை ஆதரித்தது; ராஜீவ் காந்தி கொலையைக் கூட சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல் தன்னுரிமை மாநாடு கூட்டி தனுவின் புகழ் பாடியது எல்லாம் சமீப நிகழ்ச்சிகள். மறக்க முடியுமா? கடைசியில் காங்கிரஸை ஆதரிக்கப் போய்ப் பிரபாகரனைக் கழற்றி விட நேர்ந்தது. 'ராஜீவ் கொலை செய்யப்பட்ட போது புலிகளை அன்றே கண்டித்தோம்' என்று அறிக்கை விட்டு மேலும் குழப்பி... நிகரலாபம், கட்சியில் தீவிரவாத எண்ணம் கொண்டவர்கள், மிதவாதிகள் ஆகிய இரு சாராருமே அதிருப்தியுற்றிருக்கிறார்கள். கட்சி திக்கு திசை புரியாமல் நிற்கிறது. இந்தக் குழப்பத்தை 'ஜெ' சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டதில் வியப்பென்ன?"

இவ்வாறு மனம் நொந்து பேசிய அந்த பா.ம.க. ஆதரவாளர் திண்டிவனத்தில் கூடிய பொதுக் குழுவில் கட்சியின் செயல்பாடுகள் குறித்துக் காரசாரமான விவாதங்கள் நடந்ததையும், பண்ருட்டி உள்பட பல தலைகள் இதில் கலந்து கொள்ளவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்!

– ஸ்ரீநிவாசன்



பருவ மழையும்

'பருவமழை பெய்யுமா, அல்லது பொய்க்குமா' என்பது போன்ற அறிக்கைகளை இனி வானிலை ஆராய்ச்சி நிலையங்கள் வெளியிடக் கூடாது என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. காரணம், இதன் அடிப்படையில் உணவு தானிய வியாபாரிகள் தங்கள் பதுக்கல் வேலைகளையும் பிளாக் மார்க்கெட் திருவிளையாடல்களையும் ஆரம்பித்து விடுகிறார்களாம். அதனால் 'அடுத்த 48 மணி நேரத்தில் வானிலை எப்படி இருக்கும்' என்ற அறிவிப்போடு வானிலை ஆராய்ச்சி நிலையங்கள் திருப்தி கொள்ள வேண்டியது தான்!

★ ★ ★

'பாக்' விரும்பும் பான்

இந்தியாவிலிருந்து 'பாக்'குக்கு மிக அதிகமாகக் கடத்தப்படும் பொருள் எது தெரியுமோ? வெற்றிலைப் பாக்கு! இந்திய பான் பீடாவுக்குப் 'பாக்'கில் ஏக டிமாண்ட்! தில்லியில் கிலோ ரூ 15 முதல் ரூ 50 வரை தரம் வாரியாக வாங்கப்படும் பான், 'பாக்'கில் ரூ 200 முதல் ரூ 250 வரை விற்கப்படுகிறது!

★ ★ ★

ஹெக்டே எழுதுகிறார்!

ஹெக்டே என்ன செய்து கொண்டிருக்கிறார்? ஜனதா தளத்தையும் சமாஜவாடி ஜனதா தளத்தையும் (சந்திரசேகருடையது) இணைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். கர்நாடகத்தின் பிரபல பத்திரிகைகளில் அரசியல் எழுதுகிறார். இடையிடையே தமது அனுபவங்களைப் புத்தகமாக்குவதிலும் ஈடுபட்டிருக்கிறார்.

★ ★ ★

மூளைச் சலவை

டீவி பெட்டியினால் மூளைச் சலவை செய்யப்பட மேல்நாட்டவருடன் போட்டி போட்டுக் கொண்டு நாம் தயாராகி வருகிறோம். 1985ல் இந்தியாவில் 100 கேபிள் டீவி நிறுவனங்கள். இன்று 13000! இன்னும் இரு ஆண்டுகளில் ஒரு கோடி இல்லங்களில் கேபிள் டீவி இயங்கும் என ஒரு கணிப்பு. ஸ்டார் டீவிக்கு இந்தியா நல்ல தீனி போடுகிறது. அதில் வரும் விளம்பரங்களில் 60 சதம் இந்தியாவிலிருந்துதான்!

★ ★ ★

வித்தியாச ஊர்வலம்

பெங்களூரில் ஒரு வித்தியாச ஊர்வலம். அத்தனை பேரும் சிறுவர் சிறுமியர். பிளாட்ஃபாரம்வாசிகள். ஆதரவற்ற சிறுவர் சிறுமியருக்கான நல்வாழ்வுச் சங்கம் இந்த ஆயிரம் பேர் ஊர்வலத்தை நடத்தியது - மக்களின், அரசின் கவனத்தை ஈர்க்க.

பிளாட்ஃபாரம் சிறுவர் சிறுமியர் பெங்களூரில் மட்டும் 50,000 இருக்கிறார்கள். கர்நாடகம் முழுமைக்குமாக 10 லட்சம் தேறும். 'இவர்களுக்காகக் கர்நாடகத்தின் எல்லா மாவட்டங்களிலும் பாலமந்திர்கள் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்' என்கிறார் அமைச்சர். மாநில அரசு 2 கோடி செலவு செய்ய, மத்திய அரசை 5 கோடி மானியம் கேட்டுள்ளது.

★ ★ ★

ஹைஜாக்கர் ஜாக்கிரதை!

ஹைஜாக் அதிகமாகி விட்டதால் பயணிகளின் முழு உடலையும் எக்ஸ்ரே சோதனை செய்யும் ஸ்கானர்களை இந்திய அரசு இறக்குமதி செய்கிறது. 10 கோடி செலவில் தருவிக்



"உண்ணாவிரதத்தை முடிச்சு வைக்கிறப்ப தலைவர் ரொம்பவும் கவலைப்படுத்திட்டார்!"

"என்ன விஷயம்?"

"ஆரஞ்சு ஜூஸ் குடுத்து முடிச்சு வைக்காம ஜீரணத்துக்கு இஞ்சி சாறு குடுத்துட்டார்!"

- அம்பை தேவா

கப்படும் 50 ஸ்கானர்கள், சிறு கத்தி, துப்பாக்கி, வெடிமருந்து ஆகியவற்றோடு, போதைப் பொருள்களையும் காட்டிக் கொடுத்து விடுமாம்!

* * *

"அந்த நபர் தான் 'மப்டி'யில் இருப்பதாச் சொல்றார்... ஆனா, அவரை நான் போலீஸ்காரர்னே நம்பத் தயாராயில்லே..."

"ஏன்...?"

"தொப்பை இல்லையே?"

- ஆர். வசந்தகுமார்



19 வருஷ வெயிட்!

குருவாயூரில் ரொம்பப் பிரசித்தி உதயாஸ்தமன பூஜை. செலவு ரூ 10,000! இந்தத் தொகை இன்று கட்டினால் 2010ம் ஆண்டு வரை வெயிட்டில் காத்திருக்க வேண்டும். இந்தப் பூஜைக்கு அவ்வளவு டிமாண்ட்! 'அது சரி, இன்றைய பத்தாயிரம் 2010ம் ஆண்டில் கட்டுப்படியாகுமா? விலைவாசிகள் உயர்கிறதே?' என்றால் தேவஸ்தானத்தின் பதில்: 'பணத்தை வைப்புநிதியாகப் போட்டு விடுகிறோம். கூட்டு வட்டி ஏறிக் கொண்டே போக, விலைவாசி உயர்வுக்கு ஈடுகட்டி விடும்.'

* * *

மலையாள கின்னஸ்!

கின்னஸ் புத்தகம் இப்போது மலையாளத்திலும் ஹிந்தியிலும் ரெடி. உபயம் ஹிந்த் பாக்கெட் புக்ஸ் நிறுவனம். கொசுறு: இந்தியர்கள் புரிந்த சாதனைகள் தனியே இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

* * *

கிர்மானி கிளீன் பௌல்ட்!

1983-ல் உலகக் கோப்பையை வென்று வந்த இந்திய கிரிக்கெட் அணியினர் அனைவருக்கும் 'இலவச வீட்டு மனைகள் ஒதுக்கப்படும்' என்று மத்திய அரசு அறிவித்தது. அதன்படி வெவ்வேறு மாநில அரசுகளும் டீமில் இடம்பெற்ற அம் மாநில ஆட்டக்காரர்களுக்கு வீட்டு மனைகள் ஒதுக்கி விட்டன - கர்நாடகா தவிர! 'நாலு முதலமைச்சர்கள் மாறி விட்டனர்; பத்து வருடங்களாகப் போராடுகிறேன்' என்கிறார் கிர்மானி. 'மோதிப் பார்த்து வெறுத்து விட்டது; நான் நம்பிக்கை இழந்து விட்டேன்' என்கிறார் பின்னி.

* * *

கழிப்பறை இயக்கம்!

பொது இடங்களில் மலஜலம் கழிக்கும் பழக்கம் ஒழிய வேண்டும் என்பதற்காக ஓர் இயக்கமே நடத்துகிறது 'சுலப் இன்டர்நேஷனல்'. இந்த அமைப்பு இந்தியாவின் பெருநகரங்களில் பொதுக் குளியலறைகளையும் கழிப்பறைகளையும் கட்டிப் பராமரித்து வருகிறது. பொது இடங்களில் அசுத்தம் செய்பவர்களைப் பார்த்தால் போலீஸ் புகார் கொடுக்கிறது. மிகச் சிறந்த நோக்கம் கொண்ட சமூக சேவை அமைப்புதான். ஆனால் பிரச்னை தீர இதை ஓர் ஆரம்பமாகத்தான் கருத முடியும். முடிவு, நல்ல கல்வியிலும் தாராள தண்ணீர் வசதியுடன் கூடிய சுகாதாரமான கழிப்பறை வசதிகளிலும்தான் இருக்கிறது.

* * *

சிறையில் கல்லூரி!

இந்திரா காந்தி திறந்தவெளி பல்கலைக்கழகம் கல்லூரி வகுப்புக்களை, பெங்களூர் மத்திய சிறைச் சாலையிலும் தொடங்கியிருக்கிறது. வகுப்பில் சேருவதற்கான தகுதி நிலைப் பரீட்சைகளை 25 கைதிகள் எழுதித் தேறியுள்ளனர்!

பெங்களூரிலிருந்து :
ஃபெர்னாண்டஸ்
டில்லியிலிருந்து :
ராஜீவி நரசிம்மன்
திருவனந்தபுரத்திலிருந்து :
எஸ்.எஸ். மணி

பதுக்கல் வேலையும்!



* ஔரங்காபாத் விபத்து
படம் உதவி : தினமலர்

இந்தியன் ஏர்லைன்ஸ்: சரியும் இமேஜை நிமிர்த்த முடியுமா?

இந்தியன் ஏர்லைன்ஸ் சேர்மன் – மானேஜிங் டைரக்டராக இருந்த எல். வாசுதேவ் கடந்த மே ஏழாம் தேதி அப் பதவியிலிருந்து ராஜினாமா செய்தார். மறுநாள் டெல்லி அசோகா ஹோட்டல் அறையில் அவரைச் சந்தித்துப் பேட்டி கண்டோம். அன்றிரவு தமிழ்நாடு எக்ஸ்பிரஸில் சென்னைக்குத் திரும்ப இருந்த அவருடைய தாய்மொழி துளு என்றாலும் தமிழ் நன்றாகப் பேசுகிறார்.

கேள்வி : இந்தியன் ஏர்லைன்ஸின் தலைமைப் பதவியைத் தாங்களாகவே ராஜினாமா செய்தீர்களா? அல்லது தங்களை ராஜினாமா செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதா?

வாசுதேவ் : நானாகவேதான் ராஜினாமா செய்தேன்.

கேள்வி : காரணம் என்ன என்று சொல்ல முடியுமா?

வாசுதேவ் : பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் கூட்டம் மே எட்டாம் தேதி சனிக்கிழமையன்று நடக்கவிருந்தது. அந்தக் கூட்டத்தின் முன்பு, சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கையை நான் ஏற்கெனவே எழுதி முடித்திருந்தேன். அத்துடன், நான் ஏற்கெனவே மேற்கொண்டிருந்த சில ஆராய்ச்சிகளின் (studies) அடிப்படையில், ஸ்லைடுகள் தயாரித்து, குழுவின் முன்பு வழங்குவதாக இருந்தேன். வியாழக் கிழமையன்று காலை அமைச்சரகத்தின் காரிய தரிசியிடம், ஸ்லைடுகள் இன்னும் தயாராகவில்லை என்றும், வெள்ளிக் கிழமை மாலை ஏழு மணிக்குள் தயாராகி விடும் என்றும் சொன்னேன். ஆனால் அவரோ, மாலை ஏழு மணி வரை காத்திருக்க முடியாது. காலை பதினோரு மணிக்குள் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். இவையெல்லாம் நானாகவே செய்ய வேண்டிய வேலையாதலால், வேலையைத் தொடர்ந்தேன். வெள்ளிக் கிழமை மாலை நான்கு மணியளவில் தயாராகிய வரையில், எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அமைச்சரகத்திற்குச் சென்றேன். அமைச்சர், காரியதரிசி எல்லோரும் இருந்தார்கள். எங்களுடைய மீட்டிங் மாலைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. மறுபடியும் மாலை ஏழே கால் மணிக்குச் சந்தித்த பொழுது, தயாராகியிருந்த 12, 13 ஸ்லைடுகளைக் கொடுத்தேன். மற்றவை இரவிற்குள் தயாராகி விடும் என்றேன். அமைச்சருக்கு ரொம்ப கோபம் வந்து விட்டது. இத்தனை அவகாசம் கிடைத்தும், ஏன் இன்னும் வேலையை முடிக்கவில்லை என்று கூச்சல் போட்டார். 'நான், ஔரங்காபாத் விபத்து சம்பந்தமாக பல அலுவல்களில் ஈடுபட்டிருந்தேன் என்று தங்களுக்குத் தெரியுமே, அதனால் என்னால் இதைவிட வேகமாக வேலையை முடிக்க இயலவில்லை' என்பதை அவருக்கு எடுத்துச் சொன்னேன். 'என்னால் இயன்ற வரை வேலை செய்தும், தங்களுக்குத் திருப்தியளிக்கவில்லையெனில், நான் விலகுவதைத் தவிர வேறு வழியில்லை' என்று சொன்னவுடன், அமைச்சர் ''அவர்

போகட்டும், போகட்டும் (Let him go, let him go) என்று கோபத்துடன் சொன்னார். காரிய தரிசியிடம், நான் என் ராஜினாமாவைச் சமர்ப்பிப்பதாகச் சொல்லி விட்டு வந்து விட்டேன்.

கேள்வி : போதிய அவகாசம் அளித்தும், தாங்கள் அறிக்கையை உரிய நேரத்தில் தயாரிக்கவில்லை என்று புகார் சொல்லப்பட்டிருக்கிறதே?

வாசுதேவ் : அது சரியில்லை. அறிக்கையை எழுதி முடித்து ஏற்கெனவே அனுப்பிவிட்டேன். ஸ்லைடுகளும் கூட முதல் நாள் இரவு 10:30 மணிக்குத் தயாராகிவிட்டன. துணைச் செயலர் முதல் நாள் இரவு தொலைபேசியில், மறுநாள் காலை ஆலோசனைக் கமிட்டியின் முன்பு என்னை அறிக்கையை சமர்ப்பிக்கும்படி சொன்னார். ஏற்கெனவே நான் பதவியை ராஜினாமா செய்து விட்டேன் என்றும், எனக்குப் பதில்

- இந்தியன் ஏர்லைன்ஸ் முன்னாள் தலைவர் வாசுதேவ் பேட்டி



* வாசுதேவ்

இந்தியன் ஏர்லைன்ஸின் மூத்த டைரக்டரான கேப்டன் கக்கர் அறிக்கையைச் சமர்ப்பிப்பார் என்றும் பதில் சொன்னேன்.

மறுநாள் காலையில் என் சகாக்கள் பாராளுமன்றத்திற்குச் சென்ற பொழுது, ஆலோசனைக் கமிட்டியின் முன்பு அவர்கள் ஆஜராக வேண்டிய அவசியமில்லை என்று திருப்பி அனுப்பப்பட்டார்கள். அவர்கள் பாராளுமன்றத்திற்குள் அனுமதிக்கப்பட வில்லை. அறிக்கை, ஸ்லைடுகள் எல்லாம் தயாரான பிறகு, அமைச்சரகம் அவற்றைக் கமிட்டியின் முன்பு சமர்ப்பிக்க ஏன் அனுமதிக்கவில்லை என்பதைப் பாராளுமன்ற ஆலோசனைக் கமிட்டிதான் விசாரிக்க வேண்டும்.

கேள்வி : இதற்கெல்லாம் என்ன உள் நோக்கம் இருந்திருக்கும் என்று தாங்கள் நினைக்கிறீர்கள்?

வாசுதேவ் : அமைச்சர் அன்று நடந்து கொண்ட விதத்திலிருந்து, அவர் ஏற்கெனவே நான் பதவியை விட்டு விலக வேண்டும் என்ற தீர்மானத்தில் இருந்தார் என்று தோன்றுகிறது.

கேள்வி : ஏன் அப்படி?

வாசுதேவ் : எனக்குத் தெரியாது. பைலட்டுகளின் அசோசியேஷன், நான் பதவியை விட்டு விலக வேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்ததாகக் கேள்விப்பட்டேன். இது எவ்வளவு தூரத்திற்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. இல்லையென்றால், அமைச்சருக்கே நான் இரண்டு மணி நேரம் அவகாசம் கேட்டதற்காகக் கூச்சல் போட்டதை எண்ணி தர்மசங்கடமான (embarrassing) ஒரு நிலை உண்டாகி இருக்கலாம். நான், வேலையை விட்டு விலகும்படியான ஒரு நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டேன். அமைச்சர் மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொண்டார். ஆலோசனைக் கமிட்டியும் அவர் பேச்சைத்தான் நம்பியது. நான் எந்தக் கமிட்டியின் முன்பும் ஆஜராகத் தயங்கியதில்லை. நான் ஒரு குற்றமும் இழைக்கவில்லை. எனக்கு யாரிடமும் எதையும் மறைக்கத் தேவையுமில்லை.

கேள்வி : தங்களுக்கு இந்தியன் ஏர்லைன்ஸிலிருந்து விலகுவதில் வருத்தம் ஏதாவது உண்டா?

வாசுதேவ் : வருத்தம் என்று ஒன்றும் இல்லை. இந்தக் கார்ப்பரேஷனுக்கு ஒரு மாற்றம், திருப்பம் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் சேர்ந்தேன். இப் பதவிக்கான பேட்டிக்கு வரும் பொழுது, பல பிரச்னைகள் அலசப்பட்டன. என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதும் பேசப்பட்டது. ஒழுக்கமின்மையை முறியடிக்க, கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று எல்லோராலும் ஒருமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஏனெனில் ஒழுக்கமின்மை பாதுகாப்பைப் பாதிக்கும். அமைச்சர் மாதவராவ் சிந்தியா இருந்த வரையில் நிறைய முன்னேற்றத்தைக் கண்டோம். துரதிர்ஷ்டவசமாக அவர் பதவியை விட்டு விலகினார். புதிய அமைச்சர் வந்தார். அவருடைய எண்ணங்கள் மிகவும் மாறுபட்டிருந்தன. பிரச்னைகளை அவர் புரிந்து கொண்ட விதமும் வேறுபட்டிருந்தது. சூழ்நிலை மிகவும் கஷ்டமாகப் போய் விட்டது. இருப்பினும் என் கடமைகளை நிறைவேற்றுவதில் வெற்றி கண்டிருக்

கிறேன்.

கேள்வி : சுமார் ஒராண்டு காலத்திற்கு முன், ஏர்மார்ஷல் ராம்தாசகம், இந்தியன் ஏர் லைன்ஸின் தலைமைப் பதவியிலிருந்து ராஜி னாமா செய்தார். அதற்கும், தாங்கள் இப் பொழுது ராஜினாமா செய்திருப்பதற்கும் ஏதாவது ஒற்றுமை இருக்கிறதா?

வாசுதேவ் : நான் அரசியல்வாதியல்ல; தொழில்ரீதியான அணுகுமுறை உடை யவன். என்னைப் போல்தான் ராம்தாசகம் என்பதால் அவருக்கும் இங்கு வேலை செய் வது கடினமாகப் போய் விட்டது.

கேள்வி : அமைச்சர் குலாம் நபி ஆசாத், சமீபத்தில் தூர்தர்ஷனுக்கு அளித்த பேட்டி யில், இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் ஏர் இந்தியா கார்ப்பரேஷன் நிர்வாகிகளுக்கு அந் நிறுவனங்களை நடத்துவதற்கும், ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கும் முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். இவ் விஷயத்தில் தங்க ளுடைய அனுபவம் எப்படியோ?

வாசுதேவ் : நான்கு போயிங் விமானங் களைப் பறக்க விடாமல் நிறுத்தியதற்கான (grounding) உத்தரவை யார் வழங்கினார்கள் என்று அமைச்சரைப் போய்க் கேளுங்கள்! நான் ஔரங்காபாதில் இருந்த பொழுது, தூர்தர்ஷன் வாயிலாக நான்கு போயிங் விமானங்களுக்குத் தடை உத்தரவு பிறப்பிக் கப்பட்டிருப்பதன் விவரம் கேள்வியுற் றேன்.

கேள்வி : அப்படியானால், அமைச்சர் தங்களை கலந்தாலோசிக்காமல் முடிவுகள் எடுத்திருக்கிறார் என்று சொல்கிறீர்கள்.

வாசுதேவ் : ஆமாம். பார்க்கப் போனால், இந்த அமைச்சர் பதவியேற்றதி லிருந்து, எனக்கும் அவருக்குமிடையே அதிகமாக ஆலோசனைக் கூட்டங்களே நடைபெறவில்லை எனலாம்.

கேள்வி : சமீபத்திய பைலட்களின் வேலை நிறுத்தத்தின் போது இந்தியன் ஏர் லைன்ஸின் நிர்வாகிகளைக் கலந்தாலோசிக் காமலே, விமான ஓட்டிகளின் அசோசியேஷனுடன் அரசு சமா தான ஒப்பந்தம் செய்து கொண்டது என்று நாங்கள் கேள்விப்பட்டது உண்மையா?

வாசுதேவ் : அமைச்சரகம் பைலட் அசோசியேஷனுடன் தனி மையில் பேச்சு வார்த்தை நடத்தி யது. அவர்களுக்குள் என்ன பேச்சு வார்த்தை நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது. கடைசி யில், பைலட்களுக்கு 1991 ஆம் ஆண்டிலிருந்து உணவுப்படி (Meals allowance) கொடுக்கும்படி ஆயிற்று. இந்த உணவுப் படி தான் வேலை நிறுத்தத்தின் முக்கியக் காரணமே! (Bone of contention)

கேள்வி : நிர்வாகம் மிகவும் இறங்கி வர வேண்டியிருந்தது என்று சொல்லுங்கள்.

வாசுதேவ் : நிச்சயமாக! கொள்கை யையே தலைகீழாக மாற்றிக் கொண்டது அரசு.

கேள்வி : தற்பொழுது நமது நாட்டில் எல்லா தொழில்களிலும், தனியார் துறையை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறோம். இந்திய விமானத் துறையிலும் ஏற்கெனவே பத்து தனியார் நிறுவனங்கள் இயங்கி வருகின் றன. இப்படிப்பட்ட தனியார் நிறுவனங் களை மேலும் அரசு ஊக்குவிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா அல்லது இந்தியன் ஏர்லைன்ஸின் பிரத்தியேக உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கிறீர் களா?

வாசுதேவ் : ஏர்லைன்ஸ்களிடையே போட்டி இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நான் இந்தியன் ஏர்லைன் ஸில் சேருவதற்கு முன்பே கூறிய விஷயம் இது. திறமைசாலியான யாரையும் போட்டி அழித்து விடாது. போட்டியைச் சமாளிப் பது இந்தியன் ஏர்லைன்ஸின் திறமையைப் பொறுத்திருக்கிறது.

ஆனால் அதே சமயத்தில், சும்மா விமானங்களை மட்டும் வைத்துக் கொண்டோ அல்லது மற்ற ஏர்லைன்ஸ்களி லிருந்து பைலட்டுகளை எடுத்துக் கொண்டோ, ஒரு ஏர்லைன்ஸை நடத்தி விட முடியாது. பயிற்சி அளிப்பதற்கான வசதிகள், கம்ப்யூட்டர் ரிசர்வேஷன், பரா மரிப்பு வசதிகள், தகவல் தொடர்பு போன்ற பல அடிப்படை அமைப்புகள் தேவை. இந்த அடிப்படை அமைப்புகளை உரு வாக்குவதற்கு ஏகப்பட்ட செலவாகும்...

கேள்வி : அமைச்சர் மாதவ் ராவ் சிந்தியாவின் காலத்தில் தனியார் துறைக்கு நல்ல ஊக்கம் அளிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது, தனியார் துறை ஏர்லைன்ஸ் களின் மீது பலவிதமான கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன...

வாசுதேவ் : சில நிபந்தனைகள் நியாயமானவைதான். உதாரண மாக, தனியார் ஏர்லைன்ஸ்களுக் குக் குறைந்தபட்ச (விமான) பரா மரிப்பு வசதியாவது இருக்க வேண்டும். இல்லையென்றால், அது விமானங்களின் நம்பகத்தன் மையைப் பாதிக்கும்.

கேள்வி : இந்தியன் ஏர் லைன்ஸ் பைலட்டுகளைத் தனி யார் ஏர்லைன்ஸ்கள் திருட்டுத்



பைலட்கள் விதிகளைச் சரிவரக் கடைப்பிடிக்காத காரணத்தினாலேயே விபத்துக்கள் நேர்ந்தன.



GX/47/213/TML R2

தனமாக வேட்டையாடுவதாகக் குற்றச்சாட்டு இருக்கிறதே?

வாகதேவ் : இதை, இந்தியன் ஏர்லைன்ஸ் முன்பே எதிர்பார்த்திருக்க வேண்டும்.

கேள்வி : பைலட்டுகளின் வருமானத்தில் தனியார் ஏர் லைன்ஸ்களுக்கும், இந்தியன் ஏர்லைன்ஸிற்கும் அதிகம் வித்தியாசம் உள்ளதோ?

வாகதேவ் : வருமானத்தை மட்டும் தனியாகப் பார்த்தால், வித்தியாசம் உண்டு. ஆனால் ஒரு மணி நேரம் விமானம் ஓட்டுவதற்கான சராசரி சம்பளம் என்ன என்று பார்த்தால், இந்தியன் ஏர்லைன்ஸ் அதிகம் சம்பளம் வழங்குகிறது என்று சொல்லலாம்.

கேள்வி : பொதுவாக இந்தியன் ஏர் லைன்ஸின் செயல்பாட்டின் மீது பலவிதமான புகார்கள் உள்ளன. தாங்கள் CMD ஆக இருந்த சுமார் ஓராண்டு காலத்தில் அவற்றை நீக்க அதிகமாக ஒன்றும் செய்யவில்லை என்று கூறப்படுகிறதே?

வாகதேவ் : நான் பதவியேற்றவுடன், எல்லாத் தொழிலாளர் சங்கங்களையும், ஆறு மாத காலத்திற்குப் போராட்டம், வேலை நிறுத்தம் போன்ற தொல்லைகள் ஏதும் கொடுக்காமல் இருங்கள், நாம் நிறுவனத்திற்குப் புத்துயிர் அளிப்போம் என்று வேண்டுகோள் விடுத்தேன். எல்லா சங்கங்களும் ஒத்துழைத்தன. ஆனால் ICPA (Indian Commercial Pilots Association) மூன்று மாதத்திற்குள் தங்கள் போராட்டத்தை ஆரம்பித்து விட்டது. இருப்பினும் நான் சேர்ந்த சில மாதங்களில் இந்தியன் ஏர்லைன்ஸின் செயல்பாடு ஒரு புதிய ரிகார்டைத் தொட்டது - அதன் செயல்திறன் 82% ஆக உயர்ந்தது. இது இந்தியன் ஏர்லைன்ஸ் இது வரை எட்டாத உயரம். சிங்கப்பூர் ஏர் லைன்ஸ், பிரிட்டிஷ் ஏர்வேஸ்களின் செயல்திறன் (performance) கூட சராசரி 72லிருந்து 78 சதம்தான். செலவுகள் கூட பட்ஜெட்டில் மதிப்பிட்டிருந்ததை விடப் பாதியாகக் குறைந்தது. பயணிகளிடம் ஊழியர்கள் காட்டிய அணுகுமுறையிலும் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன... எந்த விதமான முன்னேற்றமும் இல்லை என்று சொல்வது தவறு.

கேள்வி : ஆனால், தற்சமயம் இந்தியன் ஏர்லைன்ஸின் இமேஜ், ஔரங்காபாத் விபத்தின் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதுவும் ரன்வேயின் அருகில் ஓடிக் கொண்டிருந்த லாரி விபத்திற்குக் காரணம் என்பது நம்மைத் திடுக்கிட வைக்கிறது.

நாம் நவீன விமானங்களை வாங்குகிறோம். ஆனால் அவற்றுக்குத் தேவையான விமான நிலைய வசதிகளைக் கூட்டுவதில்லை.



வாகதேவ் : விபத்திற்கான உண்மைக் காரணம் என்ன என்பதை நேர்மையுடன் நோக்க வேண்டும். ரன்வேயின் அருகில் போய்க் கொண்டிருந்த லாரி, விமான விபத்திற்குக் காரணம் என்று சொல்வது சுத்த அபத்தம். சமீப காலத்தில் நடந்த விபத்துக்களை எடுத்துக் கொண்டால், அவை இஞ்சின் கோளாறினாலோ அல்லது விமானக் கோளாறினாலோ உண்டானவை அல்ல. பைலட்கள் விதிகளைச் சரிவரக் கடைப் பிடிக்காத காரணத்தினாலேயே விபத்துக்கள் நேர்ந்தன. நமது நாட்டில் விமான நிலைய வசதிகளுக்காக அதிகம் பணம் செலவழிக்கப்படுவதில்லை என்பதும் உண்மை. நாம் நவீன விமானங்களை வாங்குகிறோம். ஆனால் அவற்றுக்குத் தேவையான விமான நிலைய வசதிகளைக் கூட்டுவதில்லை.

கேள்வி : சமீப காலத்தில் பயங்கரவாதிகள், விமானங்களைக் கடத்துவது மிகவும் சகஜமாகிக் கொண்டிருக்கிறது. அமைச்சர் குலாம் நபி ஆசாத், ரயில்வே பாதுகாப்புப் படை என்று இருப்பது போல், விமானங்களுக்குத் தனியாகப் பாதுகாப்புப் படை இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். இதைப் பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?

வாகதேவ் : அமைச்சர் சொல்வது சரிதான். தற்சமயம் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்ள பல்வேறு துறைகள். பாதுகாப்பு தொடர்பான முடிவுகள் எடுக்கவும் ஆணைகள் பிறப்பிக்கவும் ஒருமுனைத் தலைமை தான் சிறந்தது. இந்தியன் ஏர்லைன்ஸின் பாதுகாப்பாளர்கள், விமானங்களில் ஏற்றப்படும் சாமான்களை எக்ஸ்ரே இயந்திரத்தின் மூலம் சோதிக்கிறார்கள். போலீஸ், பயணிகளைச் சோதனை போடுகிறது. இந்த போலீஸ் மீது Airport Authority of India விற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. Bureau of Civil Aviation Security என்பது பாதுகாப்பு சம்பந்தப்பட்ட கொள்கைகளை உருவாக்கும் அமைப்பு; இது பாதுகாப்புப் பணியில் நேரிடையாக ஈடுபடுவதில்லை. இப்படியாகப் பல்வேறு விதமான பிரதிநிதிகள், ஸ்தாபனங்கள் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்கின்றன. இதனால் எங்கு குறை இருக்கிறது, தவறு ஏற்படுகிறது என்பது தெரிய வருவதில்லை.

பேட்டி : ரமாமணி சுந்தர்

படங்கள் : செந்தில் ஆர். கணேஷ்



செய்து கொள்வோம். சிறு குறைபாடுகள் இருந்தாலும் அந்த நாய் 'பணியிலிருந்து நீக்கப்படும்!' இப்படிப்பட்ட நாய்கள் துணை ஆணையாளர் முன்னிலையில் ஏலம் விடப்படும். ஏலத் தேதி முன்னதே அறிவிக்கப்படும்...''

ப்ரியா ஏலம் விடப்படுவதை நேரில்

ப்ரியாவுக்குப் பிரியா விடை!

அரக்கோணத்தில் ஒரு பூக்காரர் பயங்கரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டார். கொலை செய்தவர் யார் என்பதைக் கண்டறிய வேறு தடயங்களே இல்லை... ஆனால் தனது மோப்ப சக்தியைக் கொண்டே குற்றவாளியை அடையாளம் காண்பித்து விட்டது ப்ரியா. கும்மிடிப் பூண்டியில் ஒரு மார்வாடிக் கடை கொள்ளையடிக்கப்பட்ட போதும் மிக விரைவாகச் செயல்பட்டு குற்றவாளியைக் கண்டு பிடிக்க உதவியது ப்ரியாதான். சுமார் 250 வழக்குகளில் பணியாற்றிய ப்ரியாவினால் 150 வழக்குகளில் மிக உபயோகமான தகவல்கள் கிடைத்தனவாம்.

இப்படிப்பட்ட ப்ரியாவை, காவல் துறையினர் ஏலம் விடுகிறார்கள் என்ற போது, 'ஒரு நல்ல ஊழியனை அவர்கள் இழக்கிறார்களே...?' என்ற கேள்வி மனத்துள் எழுந்தது.

காவல் துறையின் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் கே.எஸ். ரமணி இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார்.

''காவல் துறை நாய்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவரிடம் காண்பித்து, அவற்றின் கண் பார்வை, உடல் நலம், திறமை போன்றவை எப்படி உள்ளன என்பதைப் பதிவு



சென்று பார்த்தோம்.

''7.9.85 அன்று பிறந்த ப்ரியா கடந்த ஏழு வருடங்களாகத் துப்பறியும் பணியைச் செய்து வருகிறது. மாநில அளவில் நான்கு வெள்ளிப் பதக்கங்களையும் ஒரு தங்கப் பதக்கத்தையும் கூட பெற்றுள்ளது. கீழ்ப்படிதலுக்காகவும் பல முறை பரிசுகள் பெற்றுள்ளது ப்ரியா...'' என அந்த அழகான கறுப்பு 'டாபர்மன்' நாயை அறிமுகப் படுத்தினார் சப்-இன்ஸ்பெக்டர் ரமணி.

ஏலம் தொடங்கியது. அடிமட்ட விலை நூறு ரூபாய்! கடைசியில் ப்ரியாவை ஏலம் எடுத்தவர் முத்துக் குமார். இவர் கேட்ட தொகை 3600 ரூபாய்!

கடந்த ஏழு வருடங்களாகப் ப்ரியாவுக்குப் பயிற்சியாளராக விளங்கி அதனைக் கவனித்து வந்த கயம்பு என்பவர், ப்ரியாவுக்குப் பிரியா விடை கொடுத்தார்.

''இது வரை என்னிடம் மட்டுமே அடங்கி, பழகி வந்ததுங்க... நான் உணவு கொடுத்தால்தான் சாப்பிடும்... இனி புதிய இடத்தில் போய்ப் பழகக் கொஞ்ச நாள் ஆகும். புது உரிமையாளர் விரும்பினால் நான் போய்ப் பழக்க உதவி செய்துட்டு வருவேன்....'' என்றார்.

துப்பறியும் நாய்களுள் திறமையை வெளிப்படுத்துவதில் ஆண்-பெண் என்ற வித்தியாசமே கிடையாதாம். அதன் மூடுக்குத் தகுந்தபடிதான் பயிற்சி அளிப்பார்களாம்.

'காவல் துறையின் பணிகளுக்காகப் பழக்கப்படும் நாய் முரட்டுத் தனமாக நடந்துகொள்ளாதா....? அதை எப்படி வீட்டில் வளர்க்க முடியும்....?'

''அதை வீட்டு உபயோகத்துக்கு ஏற்ற மாதிரி பழக்கிடலாமுங்க... மேலும் வயசானாலே அதோட முரட்டுத்தனம் குறைஞ்சு போகும்...'' என்றார் ரமணி.


அது சரி, ப்ரியாவை ஏலத்தில் எடுத்த முத்துக்குமார் யார்....?

அவர் நடிகர் விஜய்காந்தின் உதவியாளர்.

''அவர் கிட்டே ஏற்கெனவே இரண்டு அல்சேஷன் இருக்குங்க... ப்ரியாவோட சாதனையை அவர் பேப்பர்ல 'ஃபாலோ' பண்ணுவாரு. ஏல அறிவிப்பு வந்ததும் வாங்க விரும்பினார். 'முத்தண்ணா' என்ற கன்னடப் படத்தில் நடிக்க ஒரு நாய் தேவைப்படுறது. அதற்குப் ப்ரியா பொருத்தமாக அமையும்...'' என்றார் முத்துக்குமார்.

- பானுமதி ராமச்சந்திரன்

படங்கள் : கோபிநாத்



உங்கள் மழலைச் செல்வம் அவனது மென்மையான மிருதுவான உலகம்.



அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல் திட உணவும் அவனைப் போலவே மிருதுவாக இருக்கட்டும்.

உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.

ஆம், நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.

பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு விரும்பும் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சக்திகளும் கிடைக்கின்றன.

உங்கள் செல்ல மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை ருசியை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.



லேபிளில் குறிப்பிட்டுள்ள விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.


இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25,
புதுடில்லி-110016

நெஸ்டம்

எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.

TS McCann/NESTUM/1492 TM

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் குழந்தைக்கு தானிய உணவும் கொடுங்கள்



என்னங்க, அந்த அம்மாவோட வீராணத் திட்டத்தை வரவேற்றுப் பேசிட்டீங்க?
இருக்கட்டும்! திட்டம் வெற்றி அடைஞ்சிருச்சின்னா, 'நாம ஆரம்பிச்ச திட்டம்'னு பெருமை அடிச்சுக்கலாம்... தோல்வி அடைஞ்சிருச்சின்னா, 'காரியத்தைக் கெடுத்திட்டாங்க'ன்னு அந்தம்மா மேல பழியைப் போட்டுடலாம்!...
பதவி இழக்கும் காலத்தில் வீரப்பன் எப்படி, எப்படி நடந்துகிட்டாரு...
எங்கெங்கே போனாரு, என்னென்ன செய்தாரு...
எப்படிப் பேசினாரு...
HINDU
புடிச்சுக் கூண்டில அடைச்சாச்சு... வெளியில ஒண்ணும் கூடக் கிடையாது!



கல்கி



1993
மே 30
மலர் : 51
இதழ் : 44
ஸ்ரீமுக
வைகாசி 17

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. – பாரதியார்.

'ஜெ'யின் ஜம்போ அமைச்சரவை!

முதல்வர் ஜெயலலிதாவின் செயல்களுக்குக் காரண காரியங்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதே அர்த்தமற்றதாகி விட்டபோதிலும் வீட்டுக்கு அனுப்பப்பட்ட மூன்று அமைச்சர்களும் ஏன் அவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பதற்குப் பலவிதமான கருத்துக்கள் அடிபடுகின்றன. சிங்கக் குட்டியை வண்டலூர் மிருகக் காட்சி சாலையிலிருந்து கொண்டு வந்து 'ஜெ'க்குப் பரிசளித்த கோமாளித்தனம் விசுவநாதனின் கல்தாவுக்குக் காரணமாயிற்று என்றும் அவர் காங்கிரஸுடன் உறவு முறியக் கூடாது என்று கருதினார் என்றும் பேசப்படுகிறது. ஆனால் சிங்கக் குட்டி பரிசளிக்கப்பட்ட போது ஜெ மகிழ்ந்து பாராட்டியது ஏன்? இதுபோன்ற பரிசுகளால் தம்மை மகிழ்வித்துவிட முடியாது என்று அப்போதே காண்பித்துக் கொண்டிருக்கலாமே என்றால் பதில் இல்லை.

அரங்கநாயகம் கதை நீதிமன்றத் தீர்ப்போடு முடிக்கப் போடப்படுகிறது. ஆனால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி அளித்த விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பு வெளியான போது இதே ஜெயலலிதா, 'ராஜினாமா என்ற பேச்சுக்கே இடமில்லை; உயர்நீதிமன்றத் தீர்ப்பு தவறானது, அதை எதிர்த்து உச்சநீதி மன்றம் செல்வோம்' என்று கூறியதைத் தமிழகம் இதற்குள் மறந்திருக்க முடியாது.

தமிழகத்தின் குடி நீர் பற்றாக்குறைப் பிரச்னையை ஒரு யுத்த காலமுனைப்போடு சந்தித்துக் கூடியவரை திறம்படவே சமாளித்து வந்திருக்கிறார் அழகு திருநாவுக்கரசு. அவர் அழகற்ற முறையில் வெளியேற்றப்பட்டதன் காரணம் பெரிய மர்மம்! ஒருவேளை ஜெயின் போயஸ் தோட்டத்து வீட்டுக் குழாயில் தண்ணீர் வரவில்லையோ என்னவோ!

மந்திரி சபையை மாற்றி அமைக்கவும் சிலரை நீக்கி வேறு சிலரைச் சேர்க்கவும் முதல்வருக்குப் பூரண உரிமை உண்டு; அதற்கான காரணங்களை வெளியிட அவசியம் இல்லை என்பது மெய்தான். ஆனால் காரணங்களை வெளிப்படையாகக் கூற முதல்வர் தயங்கும் போது பலவிதமான வதந்திகள் உருவாவதையும் அவரால் தடுக்க முடியாது.

வரலாறு காணாத ஜம்போ அளவினதாக மந்திரி சபையை விரிவுபடுத்தியதன் மூலம் இதுவரை சாதிக்காத எதை இந்தப் புதிய, பெரிய அமைச்சரவை சாதிக்கப் போகிறது? ஒன்றுமில்லை. புதிய மந்திரிகளின் பலவித வசதிகள் கருதி, வீடு-வாசல், ஆள்-படை, ஃபோன்-கார், கட்டில்-சோபா என்று பலவற்றுக்கும் மக்களின் வரிப்பணம் கூடுதலாகச் செலவாகப் போவதுதான் மிச்சம்!

ஜெ இன்றி அ.தி.மு.க. இல்லை; மக்களிடம் செல்வாக்குப் பெற்றவர் அவர் ஒருவரே என்னும் போது, அவருக்கு இவ்வளவு பெரிய மந்திரிசபை தேவையே இல்லை. அமைச்சரவை அடக்கமாக இருந்தால்தான் அனைவரையும் கண்காணிப்பது எளிது. இப்போது 27 (அதிர்ஷ்ட எண்?) பேருடைய செயல்பாடுகளை மேற்பார்வையிட்டுக் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டுமெனில் தலைவலி அதிகரிக்குமே தவிர குறையாது. ஒட்டுமொத்தமாக நிர்வாகத் திறனும் நலியுமே தவிர மேம்பாடு அடையாது. இது ஜெ அறியாதது அல்ல. அவ்வாறிருந்தும் மந்திரி சபையை விரிவுபடுத்தியிருக்கிறார் எனில், கட்சிக்குள் அவரது பிடிமானம் தளர்ந்து வருவதாகத்தான் அர்த்தம். பதவி தந்து பலரையும் திருப்திப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை உணர்கிறார் என்று பொருள். எம்.எல்.ஏக்களை வீட்டுக்கு அழைத்துப் பெட்டி பெட்டியாகப் பரிசு அளித்தவர், இப்போது அவர்களில் பலருக்கு மந்திரி பதவியும் வழங்கியிருக்கிறார். இது, 'அதிருப்தி எம்.எல்.ஏக்கள் அ.தி.மு.கவை விட்டு வெளியேற, தமிழகத்தில் ஆட்சி மாறும்' என்ற சு. சுவாமியின் சில தினங்களுக்கு முற்பட்ட அறிக்கையை நியாயப்படுத்துகிறது.

எம்.எல்.ஏக்களிடம் ஏன் அதிருப்தி ஏற்படுகிறது? பதவி என்பது சேவையுடன் சம்பந்தப்பட்டதாக இராமல், பணம் பண்ண ஒரு வசதி என்ற நிலை இன்று உருவாகி விட்டதுதான் காரணம். உயர் பதவியிலுள்ள சிலரைப் பார்த்து மற்ற பலருக்குப் பொறாமை உண்டாகிறது.

'என்னுடைய விசுவாசத்துக்குக் கிடைத்த பரிசு' என்றும் 'பிச்சை' என்றும் கூறி, முதல்வரின் காலில் விழுந்து வணங்கி, மகா அடக்கத்துடன் பதவி பெற்றுக் கொண்டவர்கள், நாற்காலியில் அமர்ந்ததும் அதிகாரபலம் தலைக்கேற ஆணவத்துடன் நடந்து கொள்ளாமலிருந்தால், சேவை உணர்வோடு செயல்பட்டால், இந்த மந்திரி சபை விரிவாக்கம் அர்த்தமுடையதாகும். அல்லாது போனால் ஆபத்துத்தான் – தமிழகத்துக்கு மட்டுமல்ல; அ.தி.மு.க. ஆட்சிக்கும் கூட.



வரலாறு காணாத வட்டி விகிதங்கள்!

இருபத்தி நான்கு மாநில அரசுகளுக்குப் பத்தாண்டுக் கடன் பத்திரங்கள் வழங்க அனுமதி கிடைத்திருக்கிறது. வட்டி 13.5 சதம். பொது மக்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் மத்திய, மாநில அரசுகள் கடன் பெறுவது சகஜம்தான். ஆனால் இந்தத் தடவை விசேஷம் என்னவென்றால் வரலாறு காணாத வட்டி விகிதம் : 13½ சதம். இதற்கு ரிசர்வ் வங்கியும் ஒப்புதல் அளித்திருப்பது ஆச்சரியம்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் அரசுக் கடன் பத்திரங்களுக்கு அளிக்கப்பட்ட வட்டி 10.5% மட்டுமே. படிப்படியாக உயர்ந்து இன்று 13.5%க்கு வந்து விட்டது. இவ்வாறு அதிக வட்டி தருவதில் பிரதி கூலங்கள் மிகுதி!

அரசு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வட்டி தர வேண்டும். ஒரு தவணை தவறினாலும் திவாலா நிலை என்றாகி விடும். பத்து வருடக் கடனுக்கு 13.5 சதம் வட்டி எனில் அசலை விட 1⅓ மடங்கு வட்டி மட்டுமே செலுத்தியதாகும். தவிர, அசலையும் பத்தாண்டுகளுக்குப் பிறகு திருப்பித் தந்தாக வேண்டும். சிரமமின்றி இந்த உயர் வட்டியையும் அசலையும் திருப்பித் தர வேண்டுமென்றால் வாங்கப்படும் கடன், அதற்கேற்ப லாபகரமாக முதலீடு செய்யப்பட வேண்டும். ஆனால் அரசு இவ்வாறு செய்வதில்லை; செய்வது சாத்தியமுமில்லை.

வாங்கப்படும் கடனில் பெரும் பகுதி பழைய கடனையும் வட்டியையும் திருப்பித் தரவே செலவாகி விடுகிறது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிஞ்சுவது அற்ப சொற்பமே. அரசு முதலீடு செய்யும் இனங்கள் மிகக் குறைந்த அளவே லாபம் தரக் கூடியவையாக உள்ளன. அரசு நிறுவனங்கள் பலவும் நஷ்டத்தில் நடக்கின்றன. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் கூட 2% அல்லது 3% லாபம்தான் காண்கின்றன. நீர்ப்பாசனம், மின் உற்பத்தி, புதிய சாலைகள், தொலைபேசித் தொடர்பு, கல்வி போன்ற இனங்களில் செய்யப்படும் முதலீடு சிறிதளவே வருவாய் பெற்றுத் தரும் - அதுவும் நீண்ட கால நோக்கில்தான்.

தொழில் துறைக்கு வங்கிகள் வழங்கும் கடன்கள் மீதான வட்டி விகிதம் குறைவாக இருக்க வேண்டும்; அப்போதுதான் உற்பத்தியாகும் பண்டங்களின் விலையும் குறைவாக இருக்கும். இதை அரசு உணர்ந்திருக்கிறது. அதனால்தான் வங்கி வட்டி விகிதத்தைக் குறைக்க முற்பட்டிருப்பதுடன் டெபாசிட்கள் மீது வங்கிகள் தரும் வட்டியையும் அதிகபட்சம் 11% என்பதாகக் குறைத்து விட்டிருக்கிறது. அதே சமயம், தான் வழங்கும் கடன் பத்திரத்துக்கு 13.5% என்று வட்டி விகிதம் நிர்ணயித்துள்ளது! இது முரண்பாடு அல்லவா?

இன்னொரு பக்கம் IDBI, ICICI போன்ற சில நிதி நிறுவனங்கள் 16 சதம் வட்டிக்குக் கடன் பத்திரங்கள் வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. கூடவே சக்தி, சுந்தரம் ஃபைனான்ஸ் போன்ற பல தனியார் நிதி நிறுவனங்கள் 14%க்கு மேல் வட்டி தரக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்துள்ளது. (15% என்பது சமீபத்தில் 14% ஆகக் குறைக்கப்பட்டது.) ஆக மொத்தத்தில், வட்டி விகித நிர்ணயக் கொள்கையில் அரசின் - ரிசர்வ் வங்கியின் சிந்தனை ஒரே குழப்பமாக உள்ளது.

அரசின் கடன் பத்திரங்களை வாங்குவது பெரும்பாலும் வங்கிகளும் நிதி நிறுவனங்களுமே. வங்கி வட்டி விகிதங்களை விடக் குறைந்த வட்டிக்குத்தான் அரசு கடன் பத்திரங்களை வழங்கும் என்பது உலக முழுவதும் எல்லா நாடுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு நிதிக் கொள்கை. ஆனால் இந்தியாவில் மட்டும்தான் வங்கி வட்டி விகிதத்தை விடக் கூடுதல் வட்டி தந்து அரசு கடன் பெறுகிறது!

அரசும் ரிசர்வ் வங்கியும் திட்டவட்டமான ஒரு நிதிக் கொள்கை இன்றி அடிக்கடி வட்டி விகிதங்களைக் கூட்டுவதும் குறைப்பதுமாக நிதி நிர்வாகத்தில் விளையாடிக் கொண்டிருக்கின்றன. இதனால் பாதிக்கப்படும் தனி மனிதர்கள், நிறுவனங்கள் உள்ளடங்கிய சமுதாயம் பற்றிய சிந்தனையே அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை!

- வி. கோபாலன்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

வெள்ளி விழா கண்ட மனோன்மணி


கர்நாடகம்

கல்கி மே 20, 1943

“மனோன்மணி” என்ற படம் இருபத்தைந்து வாரத்துக்குமேல் சென்னையில் விடாமல் ஓடிக் கொண்டிருக்கவே, அதைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

டாக்கியிலுள்ள முக்கியமான குறை என்னவென்றால், நடிகர்கள் இன்னும் கொஞ்சம் பொருத்தமாகவும் நடிப்பு இன்னும் கொஞ்சம் வாய்ப்பாகவும் இருந்திருக்கலாமென்பதுதான்.

ஆண் நடிகர்களில் சிலர் - ஒவ்வொருவரே தனித் தனியாகத் திரையை அடைத்து விடக்கூடியவர்களாயிருக்கிறார்கள்! இரண்டு பேர் வந்துவிட்டால் திரை



யில் இடநெருக்கடிதான்!

கதாநாயகன் புருஷோத்தமனாக நடித்திருக்கும் ஸ்ரீ சின்னப்பா கொஞ்சம் 'பெரியப்பா' வாகவே இந்தப் படத்தில் காட்சியளிக்கிறார். ஆவேசம் வரும்போது காலில் 'ஸ்பிரிங்' உள்ளவரைப்போல் அவர் குதித்து குதித்து (சென்னைத் தமிழில் 'எகிரி எகிரி')ப் பேசுவது எதிர்பாராத ஹாஸ்யமாகிறது. 'அப்பா' என்ற பெயர் முடிவு உள்ளவர்களின் பாட்டெல்லாம் எப்படியோ ஒரே பாணியில் அமைந்து விடுகிறது. பிர்க்காக்கள் ஒரே சங்கதி - கிங்கதி மயமாயிருக்கின்றன.

ஆனால், ஸ்ரீ சின்னப்பாவும் சரி, மற்ற ஆண் நடிகர்களும் சரி, இந்தப் படத்தில் தெளிவாகவும், கூடிய வரையில் உணர்ச்சியுடனும் நன்றாய்ப் பேசியிருக்கிறார்கள் - நன்றாய் நடித்துமிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

கதாநாயகி “மனோன்மணி”யாக நடித்திருக்கும் ஸ்ரீமதி டி.ஆர். ராஜகுமாரி, வாயைத் திறக்காமல் சித்திரப் பதுமையாக நடிக்க வேண்டிய இடங்களிலெல்லாம் அபாரமாய் நடித்திருக்கிறார். மற்றப்படி அவருடைய நடிப்பானது, பரத நாட்டியத்தில் 'அலாரி'ப்பில் கழுத்தை யசைப்பது போல் அசைப்பதுடன் முடிந்துவிடுகிறது. ஸ்ரீமதி ராஜகுமாரி கொஞ்சம் பாடியிருக்கிறார்; சற்றே அழுதிருக்கிறார். ஒரு சமயம் பாட்டையும் அழுகையையும் கலந்து, எது பாட்டு, எது அழுகை என்று கண்டு பிடிக்க முடியாமல் நம்மைத் திணற அடித்து விடுகிறார்!

மனோன்மணி காவியத்தில், நம்முடைய மனதைப் பெரிதும் கவரும் பாத்திரம் மனோன்மணியின் தோழியாகிய வாணி. படத்தில் இந்தப் பாத்திரமாக நடிப்பவர் குருகுருவென்று இருக்கிறார். சுமாராய் நடிக்கிறார். ஓரிடத்தில் அதிகப்படியாக அழுது விரஸப்படுத்தி விடுகிறார்.

“மனோன்மணி” படத்தில் ரொம்ப நன்றாய் நடித்திருப்பவர்கள் யார் என்று கேட்டால் - கேட்பானேன்? - என்.எஸ். கிருஷ்ணனும், டி.ஏ. மதுரமுந்தான். தொட்டதையெல்லாம் துலங்க வைக்கும் சக்தி ஸ்ரீ என்.எஸ். கிருஷ்ணனிடம் இருக்கிறது. ஹாஸ்ய நடிப்பிற்குப் புதிது புதிதான விஷயங்களும் இவருக்கு எப்படியோ கிடைத்துக் கொண்டிருக்கின்றன. “சகுந்தலை” படத்திலிருந்து இந்தத் தம்பதிகளுடைய 'காமிக்' எல்லாம் - பாமரர்களுடன் படித்தவர்களும் ரஸிக்கும்படியாக - உயர்தரமாயமைந்து வருகின்றன. இன்னொரு முக்கிய விஷயம் சமீபத்திலேதான் எனக்குத் தெரிய வந்தது. எந்தப் படத்தில் இந்தத் தம்பதிகள் நடித்தாலும் இவர்களுடைய பகுதி சம்பந்தப்பட்ட வரையில்,

கதை : என். எஸ். கிருஷ்ணன்
வசனம் : என். எஸ். கிருஷ்ணன்
பாட்டு : என். எஸ். கிருஷ்ணன்
டைரக்ஷன் : என். எஸ். கிருஷ்ணன்
என்று போட வேண்டியதுதானாம்.

அமெரிக்காவில் சார்லி சாப்ளின் எந்த ஸ்தானத்தை வகிக்கிறாரோ, ஏறக்குறைய அந்த ஸ்தானத்தைத் தமிழ் நாட்டில் ஸ்ரீ என்.எஸ். கிருஷ்ணன் கூடிய சீக்கிரம் அடையக் கூடும் என்று கருதுகிறேன்.

(விமர்சனத்தின் ஒரு பகுதி.)

மாயக்



“உனக்குத் தெரிஞ்ச உண்மைகளைச் சொல்லிடு. அப்பத்தான் உன்னைக் காப்பாத்த வசதியா இருக்கும். நாளைக்கு ஹியரிங்ல திடீர்னு 'எவிடன்ஸ் ஸப்மிட் பண்ணு'னுவாங்க. திருதிருன்னு முழிப்போம்.'' - மீண்டும் எச்சரித்தான் ரங்கா.

''அய்யா, புரியலீங்களே...!''

''துரை, எதையும் மறைக்காதே. அந்தக் குதிரையை நீ ஏதாவது செஞ்சியா?''

''ஐயா'' என்றான் அதிர்ச்சியாக.

''பயப்படாதே! ஏதாவது செஞ்சிருந்தா சொல்லிடு. அதுக்குத் தகுந்தாப்ல வாதாடி கேஸ் ஜெயிச்சிடலாம். இல்லைன்னா கஷ்டம். இதோ இந்தப் பத்திரிகையைப் படிச்சியா?''

''இல்லைங்க. என்ன விசயம்ங்க? எனக்கு அவ்வளவா படிக்க வராதே?''

''சூர்யா ரசிகர் மன்றத் தலைவர் அறிக்கை விட்டுருக்காரு. உன் மேலேயே சந்தேகம் இருக்குதாம். இதைச் சும்மா விடப் போறதில்லைன்னு சொல்லியிருக்காரு...''

''ஐய்யய்யோ! சாமி!''

''துரை, எங்ககிட்டே சொன்னா விஷயம் எதுவும் வெளியே போகாது. எங்களுக்கு வேண்டியது ஃபீசு. அவ்வளவுதான். நான் கேக்கற கேள்விக்கெல்லாம் ஒழுங்கா பதில் சொல்லு. பொய் கூடாது... அப்புறம் பின்னால சிக்கலாயிடும். முதல் கேள்வி, எங்களுக்கு ஃபீஸ் கொடுக்க உனக்கு ஏது பணம்?'' என்றான் ரங்கா.

''ஐயா, பூடான் லாட்டரியில இருபதாயிரம் அடிச்சதுங்க. பத்தாயிரம் ரூபாய் கடனை அடைச்சேன். இன்னும் எட்டாயிரம் வைச்சிருக்கேன். ரெண்டாயிரம் செலவழிஞ்சு போச்சு! அப்புறம், கிராமத்துல நிலம் இருக்குதுங்க. நஞ்சை நிலம்...''

''எவ்வளவு?''

''இருவது செண்ட்டு. தேவைன்னா அதையும் விக்கலாம்னு இருக்கேன்.''

''எப்ப வாங்கின நிலம்?''

''பூர்வீகங்க...''

''புதுசா வாங்கினது இல்லையே?''

''ஐயோ! இல்லைங்க.''

''சரி. சூர்யாவுக்கு எடுத்து வந்தியே குதிரை? அது எங்கேயிருந்து எடுத்து வந்தே?''

''சொந்தக் குதிரைங்க. ரெண்டு வருசம் முன்னால ஒரு பாய்கிட்டே வாங்கினேன்.''

''குதிரைக்கு நோய் இருக்குதுன்னு உனக்கு எப்பத் தெரியும்?''

''திடீர்னு ஒரு நாள் கால் தடுமாறி, கீழே விழுந்திருச்சுங்க. உடம்பு வலிப்பு வந்தாப்ல தூக்கித் தூக்கிப் போடுது. பயந்து போய் டாக்டராண்டை எடுத்துப் போனேன். ஒண்ணும் பிரயோசனமில்லைன்னுட்டாரு...''

''சூர்யாவுக்குப் பயிற்சி கொடுத்த நேரம் போக குதிரையை என்ன செய்வ?''

கிருஷ்ணா டாவின்ஸி

''சும்மாத்தாங்க இருக்கும். சில சமயம் கோல்ஃப் கிரவுண்ட் கூட்டிப் போவேன். மிலிட்டரி ஆளுங்க ரவுண்ட் அடிச்சிட்டுத் துட்டு தருவாங்க.''

''நல்லா யோசிச்சு சொல்லு. வேற யார்கிட்டேயாவது குதிரையை ரெண்டு மூணு நாளுக்குக் கொடுத்திருந்தியா?''

''இல்லீங்க.''

''நிச்சயமாத் தெரியுமா? இல்லை, மறந்து போச்சா?''

துரை சட்டென்று, ''பாபு அண்ணன் டிரெய்னிங் எடுத்தாருங்க - நாலு நாளு...'' என்றான்.

''அது யாரு பாபு?''

''கே.கே. நகர்ல என் வீடு இருந்திச்சு இல்லை? அது பக்கத்துல மாடியில இருந்தாரு. அவருதான் ஒருநாள் என்னைக் கூப்பிட்டு, தினமும் சாயங்காலம் ஏழு மணிக்குக் குதிரை பயிற்சி செய்யணும்னாரு.''

''செஞ்சாரா?''

''ஆமா. நாலு நாளு செஞ்சுட்டுப் போதும்னுட்டாரு.''

''அப்ப குதிரை நல்லா இருந்துதா?''

''ஆமாங்க.''

''துரை, அந்தாள் பேரு என்ன?''

''பாபுங்க!''

''என்ன வேலை செய்யறாரு?''

''தெரியலீங்க.''

''இப்பவும் அங்கேதான் இருக்காரா?''

''தெரியலீங்க.''

''சரி. வேற யாராவது குதிரையைக் கேட்டாங்களா?''

''இல்லைங்க.''

''உன் வீட்டுக்கு யாராவது வருவாங்களா?''

''ம்ஹூம். யாரும் வர மாட்டாங்க.''

''ராத்திரியில யாரும் தங்கினது இல்லை?''

''கிடையாதுங்க.''

''சரி. துரை என் கூட உடனே கிளம்பு.''

''எங்கே எஜமான்?''

''அந்த கே.கே. நகர் வீட்டுக்கு. சில விஷயங்களைக் கவனிக்கணும். வா!'' என்றான் ரங்கா.

குதிரை

கே. கே. நகர் வீட்டினுள் நுழைந்த போது எல்லாரும் விநோதமாக நின்று துரையைக் குற்றவாளியைப் போல் பார்த்தார்கள். துரை வீட்டுக்காரரிடம் சென்று பணிவாக, ''ஐயா! இவரு என் வக்கீலு. வீட்டைப் பார்க்கணும்வாரு'' என்றான்.

''பாத்துக்கச் சொல்லு! என்ன துரை! பேப்பர்ல போடுறதெல்லாம் நிஜமா? குதிரைக்கு நோய் இருக்கிறது தெரிஞ்சுமா சூர்யா கூடப் பழக விட்ட?''

''ஐயா, எல்லாம் பொய்ங்க. எனக்கு ஏதும் தெரியாதுங்க!''

ரங்கா, வீட்டின் பின்புறம் லாயமாக உபயோ



கப்பட்ட அறையைப் பார்த்தான். நன்றாக நான்கு புறமும் சுவர்களால் சூழப்பட்டிருந்தது. துரை ஜன்னல் வழியாக சற்று தூரத்திலிருந்து ஒரு மாடியைக் காண்பித்து, ''அதாங்க பாபுவோட ரூமு'' என்றான். அந்த அறையின் திறந்திருந்த ஜன்னல் கம்பிகளில் ரோஸ் நிறத் திரைச்சீலை படபடத்தது.

ரங்கா வீட்டைச் சம்பிரதாயமாகப் பார்த்து விட்டு, வெளியே வந்து, ''துரை! நீ இங்கேயே இரு. அந்த நிமிஷத்துல வர்றேன்'' என்றான். வலதுபுறம் திரும்பி அந்த மாடியறையை நோக்கி நடந்தான். அருகே சென்றதும் பார்வையில் அறைக் கதவின் பூட்டு தெரிந்தது. ரங்கா நிதானமாகப் படியேறி, அங்கே யாரும் இல்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு அந்த அறையின் முன்னால் வந்து நின்றான்.

வாசலில் கதவுக்கு அருகில் நீலநிற பிளாஸ்டிக் போர்டில் வெள்ளை எழுத்துக்கள் பளிச்சிட்டன.

''ராஜேந்திர பாபு. B.Sc.
- லாப் அஸிஸ்டண்ட்
மாநில நோய்த் தடுப்பு மையம்.''

மேஜர் கதாகர் அவன் சொன்னதையெல்லாம் கேட்டு ஆச்சர்யமாக முகவாயைத் தேய்த்தார்.

''என்ன ரங்கா, புதுக புதுசா கதை கிளம்புது? அப்ப துரை இன்னசென்ட்டா?''

''அப்படித்தான் இருக்கணும். சகலமும் ஆடிப் போச்சு எனக்கு. உடனே ஓடி வர்றேன். கதா, மாநில நோய்த் தடுப்பு மையத்துல என்ன செய்வாங்க?''

''ஆராய்ச்சி.''

''முக்கியமான வைரஸ் எல்லாம் அங்கே இருக்கும் இல்லையா?''

''ரங்கா, சொல்லாதே! அப்படியும் இருக்குமா?''

''ரீஸனபிள் கதா. இப்ப என்ன பண்ணலாம்?''

''இரு- இரு- எதையும் தீர்மானிக்காதே! அவன் பேரு ராஜேந்திரபாபு. பி.எஸ்.ஸி. அப்புறம்?''

'' 'ஸிடிஸி' யில வேலை செய்யறான்.''

''லாப் அஸிஸ்டெண்ட்.''

''அவன் இன்ஸ்டிடியூட்ல ரேபீஸ் வைரஸ் இருக்கும்.''

''அதை அவன் எடுத்திருக்கான்.''

''குதிரையோட உடம்புல அதைச் செலுத்தி...''

''எதுக்கு? வாட் இஸ் தி மோடிவ்?''

''அவன் மதன்ராஜோட ரசிகன்.''

''அப்படியா?''

''இல்லை. அப்படி வைச்சுக்கலாம்.''

''ம். சொல்லு...''

''ரசிகன், இல்லைன்னா வெறியன். அவனுக்கு அப்படி ஒரு யோசனை தோணுது... யாருக்கும் சந்தேகம் வராது. அருமையான திட்டம்...''

''சூர்யாவோட குதிரைப் பயிற்சி அவனுக்கு எப்படித் தெரியும்?''

''துரை பெருமையாச் சொல்லியிருக்கலாம்.''

''சரி. பாபுவும் அந்தக் குதிரையைப் பயிற்சிக்காகக் கேக்கறான்.''

''நாளு நாள். நாலே நாள்.''

''வேலையைக் கச்சிதமா செஞ்சு முடிக்கிறான். ராத்திரி ஏழு மணிக்கு வசதியா பயிற்சி. துரையை ஏதாவது காரணம் சொல்லி வெளியே அனுப்பிச்சிட்டு ஊசி மூலமா ரேபீஸைக் குதிரை உடம்புல செலுத்தி...

''இஸ் இட் பாஸிபிள்?''

''டாக்டரைக் கேட்டுடலாம்.''

''குதிரைக்கு ரேபீஸ் வந்ததுன்னா சூர்யாவுக்கும் அது பரவும்னு என்ன நிச்சயம்?''

''ஆன்ஸெட் ஸ்டேஜ்ல ஒன் ஆஃப் த ஸிம்ப்டம்ஸ்: பைட்டிங் டெண்டன்ஸி. அந்த மிருகத்துக்குக் கடிக்கிற வெறி வந்தே தீரும்...''

''சூர்யா விஷயத்துல எதிர்பாராதது நடந்திருக்கு. கை காயத்தின் வழியா அதோட எச்சில் போயிருக்கு... அது போதும்.''

''எல்லாமே யூகங்கள். 'மே பி' அண்ட் நாட் 'மஸ்ட் பி'... பொறு. டாக்டர்கிட்டே அந்த சந்தேகத்தைக் கேட்டுடறேன்'' என்றார் மேஜர் கதாகர்.

கேட்டார். சந்தேகம் நிவர்த்தியானது.

''ரங்கா! இன்னைக்கு நீயும் நானும் அந்த ராஜேந்திரபாபுவைச் சந்திக்கிறோம்.''

''வேண்டாம் கதா. போலீஸ்கிட்டே சொல்லிடலாம்.''

''தேவையில்லை. நான் துப்பாக்கியை எடுத்துக்கறேன். அவன் வாயால எல்லாத்தையும் ஒப்புக்க வைக்கலாம். அப்புறமா போலீஸை வரவழைக்கலாம்.''

''ரொம்ப ரிஸ்க் கதா.''

''ரிஸ்க் எடுக்கலாம், வா!''

இரவு எட்டு மணிக்கு அந்தப் பகுதி அமைதியாக இருந்தது. மாடி அறையில் விளக்கு எரிந்ததைப் பார்த்தார்கள். மேஜர் கதாகர் தன் இடுப்பிலிருந்த ரிவால்வரைத் தொட்டுப் பார்த்தார். மெதுவாக நடந்து, படியேறினார்கள். மாடி அறையை அடைந்ததும், கதாகர் ரங்காவை ஒருமுறை பார்த்துவிட்டுக் கதவைத் தட்டினார். காத்திருந்தார்கள். மறுபடி தட்டினார். பதிலில்லை. இம்முறை இன்னும் பலமாகத் தட்டினார்.

''ரங்கா! யாரும் இல்லையா உள்ளே?''

''பூட்டைக் காணோமே? உள்ளே தாழ்ப்பாள் போட்டிருக்குது...''

ரங்கா மெதுவாக நகர்ந்து ஜன்னலருகே சென்று ரோஸ் நிறத் திரைச்சீலையை விலக்கிப் பார்த்தான். பார்த்தவன் கண்களில் அதிர்ச்சி தெரிந்தது.

(தொடரும்)



''டாக்டர்கிட்டே எதையுமே மறைக்காம உண்மையைச் சொல்லணும்...''
''நிஜமாவே... என்கிட்டே உங்களுக்குக் குடுக்கிறதுக்கு 'ஃபீஸ்' கிடையாது டாக்டர்!''
- டிசம்பர் பூ





பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகைகளை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பொருளும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் - ரூ. 265/-
2. யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதா - 7 காண்டங்கள் - விலை ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - க்ரந்தாக்ஷரம் - 2 பாகங்கள்
(முதல் பாகம் - ரூ. 165/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்டாப்ராஹ்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள்
(முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 65/-)
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - க்ரந்தாக்ஷரம் - ரூ. 80/-
6. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - விலை ரூ. 170/-
(1ம் பாகம் ரூ. 85/- 2ம் பாகம் ரூ. 85) (க்ரந்தாக்ஷரம்)

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III நாகராக்ஷரம்

1. [illegible] - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருத மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருதமூலம் - தமிழ் பதவுரை)
3. [illegible] - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வடமொழிச் சொற்கடல் - ஸம்ஸ்க்ருதம் தமிழ் Dictionary 2 முதல் 8 தரங்கங்கள் வரை, முதல் தரங்கம் நீங்கலாக - ரூ. 70/-)
5. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
6. [illegible] - நாகராக்ஷரம் - விலை ரூ. 25/-

V.P.P. யில் அனுப்ப முடியவில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. ஸமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கன்வீனர் - ராஜா வேதகாவ்ய பாடசாலை, பாடசாலை தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.

மயிலாப்பூரில் மாடி வீடு. அலறும் வானி, குரைக்கும் நாய், சிணுங்கும் டெலிபோன். கூப்பிடும் குக்கர். இடையே அமைதியாய் சுஜாதா. பக்கத்தில், படிக்காத இந்தியன் எக்ஸ்பிரஸ். சுவரில் ரத்னகிரி சுவாமிகள். குட்டி டேபிளில் சில்லறை சாமான்கள். பெங்களூர் 'பெல்' நிறுவனத்தில் தனது 25 வருஷ விஞ்ஞானப் பணியிலிருந்து கடந்த ஏப்ரல் 30 அன்று ரிடையராகி, விரைவில் மெட்ராஸிலேயே செட்டில் ஆகப் போகிறார். முன்னதாகச் சிலபல பணிகளுக்காக நான்கு நாள் விஸிட்டாகச் சென்னை வந்திருந்தவரைச் சந்தித்துப் பேசிய பொழுது:

நீங்கள் இஞ்சினியராகவும், எழுத்தாளராகவும் ஆவது ஏறக்குறைய ஒரே காலத்தில்,

“என்னால, என்னோட கம்ப்யூட்டர் துறை கான்டாக்ட்டை அத்தனை லேசில் விட முடியாது. சந்தேகமில்லாம, எழுத்தை விடவும் அது சுவாரஸ்யம் வாய்ந்தது.”

இல்லையா?

1954-55 லேர்ந்து 70 வரைக்கும் சென்ட்ரல் கவர்மென்ட்ல வேலை பார்த்தேன். அப்புறம் ஸெவன்ட்டிலதான் 'பெல்'லுக்கு வந்தேன். எழுத ஆரம்பிச்சது 1963.

முப்பது வருஷமா எழுதறீங்க. உங்க எழுத்தில் உங்களுக்கே ஏதாவது வளர்ச்சி தெரிகிறதா?

அதை வளர்ச்சின்னு சொல்ல முடியும்னு தோணலை. வேணும்னா மாற்றம்னு சொல்லலாம். நான் மாற மாற என் எழுத்தும் மாறிட்டே வந்திருக்கு.

ஆரம்ப காலத்துல ஒரு துள்ளல், வேகம் இருந்தது, உங்க ரைட்டிங்ல. இப்ப கொஞ்சம் 'காம்' ஆகி விட்டாற்போலத் தெரியல்லியா? அதை உங்களாலேயே உணர முடிகிறதா?


அதைத்தான் நான் மாற்றம்னு சொல்றேன்.

ஒருவேளை உங்களுக்கு வயசானதால இந்த பிராப்ளம்...

ஏன், படிக்கிற உங்களுக்கும்தான் வயசாகிட்டு வருது. எப்பவும் ஒரே மாதிரியா கவா இருக்க முடியும்? இந்த மாற்றம் தவிர்க்க முடியாததுன்னு நான் நினைக்கறேன். ஆனா சிந்தனைங்கறது எப்பவும், எத்தனை வயசானாலும் ஒண்ணுதான்! என் அளவில் - அதில் ஒரு மாற்றமும் தெரியல்லே!

எழுத்துல இப்படி ஒரு 'இடத்'தைப் பிடிக்க உங்கள் விஞ்ஞானப் பணி எந்த வகையில் உதவியா இருந்திருக்கு? அல்லது அதனால் உங்கள் எழுத்துக்கு ஏதாவது இடைஞ்சல் இருந்திருக்கிறதாக எப்பவாவது ஃபீல் பண்ணியிருக்கீங்களா?

நெவர்! என்னோட ரைட்டிங் சக்ஸஸ்ஃபுல்லா வர்றதுக்கு என் ப்ரொஃபஷன்தான் காரணம்னு சொல்வேன். நான் வொர்க் பண்ணினது - எலக்ட்ரானிக்ஸ் - கம்ப்யூட்டர் ஃபீல்டுல விஞ்ஞானியாக. இன்னிக்கு என்னால சுமாரா சைன்ஸ் ஃபிக்ஷன் எழுத முடியறதுன்னா அதுக்கு வேறென்ன காரணம் இருக்க முடியும்? மேலும் இந்த ஃபீல்டுல இருக்கிறதுனால எனக்குக் கிடைக்கிற தொடர்புகள் அதன் மூலமாகத் தெரிய



வருகிற செய்திகள், நாளைய டெக்னாலஜி பற்றின முன்கூட்டின தகவல்கள் இதெல்லாம்தான் என் எழுத்து சுவாரஸ்யத்துக்குக் காரணம்னு நினைக்கிறேன்.

நடிகைகளின் மேனி அழகு ரகசியம் மாதிரி - உங்கள் எழுத்தின் Freshnessக்கு என்ன காரணம்?

நான்னு இல்லே. யாராயிருந்தாலும் சரி; நிறையப் படிக்கணும். அப்ப ஆட்டமேட்டிக்கா குவாலிட்டி கூடும். நம்ம ரைட்டர்ஸ் பல பேர் அவங்க எழுத்துக்களை மட்டும்தான் படிக்கறாங்க. அது ரொம்ப தப்பு. எத்தனைக்கெத்தனை நம்ம படிப்பு எல்

லையை விரிவுபடுத்த றோமோ அவ்வளவும் எழுத்துக்கு நல்லது! இன்ன துதான் படிக்கணும்னு இல்லே. கிடைக்கறது எல் லாத்தையும் படிக்கலாம். கிடைக்காததைத் தேடிப் பிடிச் சிப் படிக்கணும்.

ஒரு பொறுப்பான உத்தி யோகத்துல இருந்துட்டு படிக்கிற துக்கும், எழுதுவதற்கும் உங்க ளுக்கு நேரம் எப்படி கிடைக்குது?

எழுதறதுங்கறது எனக்கு எப்ப வுமே பெரிய விஷயமா இருந்தது இல்லே - நான் மெக்கானிக்கல் ஒர்க் கைச் சொல்றேன் - ஆனா எழுத்துக்கு அடிப்படையான திங்கிங் - அது எப்பவும் இருந்துக்கிட்டே இருக்க ணும். நான் பண்ற ஒரே விஷயம் - என் கண்களையும் காதுகளையும் எப்பவும் திறந்தே வெச்சிருக்கறதுதான்! Entering into the skin of each character... அதான் முக்கியம். விஷயம் இன்னதுன்னு டிஸைட் ஆயாச்சுன்னா நேரம் கிடைக்கற



ரிடையராகிறார் சுஜாதா!

தெல்லாம் ஒரு பெரிய பிரச்னையே இல்லே. தவிர, இப்பவெல்லாம் ஒரு சிறுகதை கேக்க றாங்கன்னா - இத்தனாந் தேதிக்குள்ள குடுத் துடுங்க சார்னு 'டெட் லைன்' வெச்சிட றாங்க. அந்த நெருக்கடி வரும் போது 'டைம்'தானா கிடைக்கும்!

சயன்ஸ் பிக்ஷன் நிறைய எழுதுகி றீர்கள். அந்தக் கதைகளினால் ஏதாவது உப யோகம் உண்டா?

வேறு எந்தக் கதைகளினால் என்ன உபயோகம் வாய்த்திருக்கிறது? சாதாரண சமூகக் கதைகளில் இனிமேல் புதுசாகச் சொல்ல ஒன்றும் விஷயம் பாக்கி இல்லை. ஒரு ஸ்டேஜுக்கு மேல் அது போரடிக்க ஆரம்பித்து விடும். உதாரணமாக ஃபோட்டோகிராஃபி வந்த பிறகு அச்சடித் தாற்போல் வரைகிற படங்களுக்கு அர்த் தமே இல்லாமல் போய் விட்டது. அதே மாதிரி தான் இதுவும்.

என்னைப் பொறுத்த வரை சயன்ஸ் ஃபிக் ஷனை மாடர்ன் ஆர்ட்டு டன் ஒப்பிடுவேன். கொஞ்சம் யோசிப்புக்கு வேலை கொடுத்தால் தப்பில்லை. நாளைக்கு நம் நாடு இப்படியாக இருக் கும்னு கற்பனைல பார்த்துச் சொல்றது அத்தனை ஈஸி இல்லே. அதுக்கும் நிறைய படிக்கணும். ஸ்ட்ரெயின் அதிகம் தேவை.

இப்படி கஷ்டப்பட்டுப் பண்ணாலும் அவை முழுசா ரீச் ஆகிறதா ஜனங்களுக் கு? கீழ்மட்டத்தில் இருக்கிறவர்களுக்குப் போய்ச் சேருகிறதா?

ஏன் ஆகாமல்? என் இனிய இயந்திரா டீவியில் வந்த போது மக்கள் பரவலாக அதை ரசித்தார்கள். அதற்கு, வந்த கடிதங் களே சான்று. புரிந்து கொள்ளாமல் ரசிக்க முடியாது.

ரீச் ஆக வேண்டுமென்ற காரணத்திற் காக டீவியில் அந்தக் கதை வரும் போது

கொஞ்சம் 'டைல்யூட்' பண்ணினாற்போலத் தெரிந்ததே. இதில் உங்களுக்கு உடன்பாடா?

அதில் ஒண்ணும் தப்பே இல்லை. ரீச் ஆகக் கூடாதுங்கற எண்ணத்தில் யாரும் எழுத மாட்டாங்க. படம் எடுக்க மாட்டாங்க.

ஒரிஜினாலிட்டி போனால் பரவாயில்லையா?

விஷுவல் மீடியான்னு வரும் போது சில காம்ப்ரமைஸ் அவசியம் தேவைப்படுது. அதுல தப்பு ஒண்ணும் இல்ல. இன்னிக்குத் தமிழ்நாட்டுல - அநேகமா அத்தனை பேருக்கும் கொஞ்சமாவது மூப்பனார் மாணம்னா என்னன்னாவது தெரிஞ்சிருக்கும். இதுவே வெற்றி இல்லையா?

ஓ.கே. சினிமால உங்களோட பல கதைகள் வெற்றிகரமா ஃபெய்லியர் ஆகியிருக்கு. ஏன் உங்களால அந்த மீடியாவில 'அச்சீவ்' பண்ண முடியலை?

ஒரே காரணம்தான். எனக்கு எழுத்து புரிஞ்ச அளவுக்குச் சினிமா புரியலை. தவிர, நான் சினிமாவுக்கு ரொம்ப நெருக்கமானவனும் இல்லை. நண்பர்களுக்காகத்தான் என் கதைகளைச் சினிமாவுக்குத் தர்றேன். ஸ்கிரீன் பிளே பண்ணிப் பார்க்கிறேன். எனக்குப் புரிஞ்சது என்னன்னா, அதனோட பரிமாணங்கள் வேற. தூர நின்னு - என்னை மாதிரி பார்க்கிறவங்களுக்குச் சரிப்படாது. அதுலயே இன்வால்வ் ஆனாலொழிய தேற முடியாது.

இப்ப ரிடையராயிட்டீங்க. கிட்ட வந்து ட்ரை பண்ணிப் பார்க்கற ஐடியா இருக்கா?

நிச்சயமா இல்லே.

ஏன்?

பேருக்குத்தான் ரிடையர் ஆனேனே தவிர வேலைல இருந்ததை விடவும் இப்போ கமிட்மெண்ட்ஸ் அதிகமா இருக்கு. என்னால, என்னோட கம்ப்யூட்டர் துறை காண்டாக்ட்டை அத்தனை லேசில் விட முடியாது. சந்தேகமில்லாம, எழுத்தை விடவும் அது சுவாரஸ்யம் வாய்ந்தது. முதல் கட்டமா Micro Computer Design பற்றி Text-Book ஒண்ணு எழுதப் போறேன். அப்புறம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், சுந்தரனார் பல்கலைக் கழகம் தவிர பெங்களூர்ல சில பல்கலைக் கழகங்களில் லெக்சர் குடுக்க கூப்பிட்டிருக்காங்க. கம்ப்யூட்டர் டெக்னாலஜியில் சில Advanced topic களில் அங்கெல்லாம் பாடம் நடத்த உத்தேசம்.

ரிடையர் ஆனதுக்கப்புறமாவது ஃபுல் டைம் ரைட்டரா இருக்கிற ஐடியாவே இல்லையா?

சான்ஸே இல்லை. அப்படி கொஞ்ச நாள் இருந்தேன்னா... அவ்ளோதான். திகட்டிப் போயிடும். ஜானகிராமன் சொல்வார், எழுதறவனுக்கு ஊற்று சுரந்துக்கிட்டே இருக்கணும்னு. எழுத்து தொழிலாப் போச்சுன்னா அந்த 'ஊற்று' இல்லாம போயிடும்! இப்போ என்ன எழுதிக்கிட்டிருக்கேனோ அதையேதான் கன்டினியூ பண்ணப் போறேன். சொல்லப் போனா, இதிலேயே சயன்ஸ் சமாசாரம் இன்னும் கொஞ்சம் அதிகமா எழுதலாம்னு பார்க்கறேன்! ஏதாவது பத்திரிகைக்கு ஆசிரியரா இருக்கக் கூப்பிட்டா சம்மதிப்பீங்களா? சத்தியமா மாட்டேன்!

சந்திப்பு : பா. ராகவன்

புகைப்படங்கள் : கோபிநாத்

அருள்வாக்கு

சாதாரணமாக, மாதா-பிதாக்களின் வார்த்தைக்குப் புத்திரர்கள் மாறு சொல்லவே கூடாதுதான். அப்படிச் சொல்லும்படி நான் புத்திரர்களுக்கு உபதேசம் செய்யக் கூடாதுதான். ஏற்கெனவே முன்நாளைப் போல பிள்ளைகள் அப்பா, அம்மாவுக்குக் கட்டுப்படாத இக் காலத்தில் நானும் அவர்களைச் சீற்படியாமலிருப்பதில் ஊக்கக் கூடாதுதான். இதெல்லாம் எனக்குத் தெரிந்தாலும், விவாஹ விஷயத்தைப் பண ஸம்பந்தமுள்ளதாகப் பண்ணிப் பிராசீனமான நம் ஸ்திரீ தர்மத்துக்கு உண்டாக்குகிற பெரிய ஹானியைப் பார்க்கிற போது, இந்த ஒரு விஷயத்தில் மட்டும், பிள்ளைகள் எனக்கு ஆதரவாக அப்பா, அம்மாவிடம் வாதம் பண்ணி, "வரதக்ஷிணையும், சீரும் கேட்காவிட்டால் தான் கல்யாணம் செய்து கொள்வேன்" என்று ஸத்யாக்ரஹம் பண்ண வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது. நிஜமான ஸத்யாக்ரஹமாக இருக்க வேண்டும். பெற்றோர் கேட்கவில்லை என்பதற்காகப் பிள்ளை அவர்களை ஒதுக்கி விட்டுக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அது ஸத்யாக்ரஹம் இல்லை. ஸத்யாக்ரஹம் என்றால் அதிலே தியாகம் இருக்க வேண்டும். அதனால், 'வரதக்ஷிணை இல்லாமல் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டீர்களா? சரி, அப்படியானால் நான் கல்யாணமே பண்ணிக் கொள்ளாமல் பிரம்மசாரியாக இருந்து விடுகிறேன்' என்று திடமாக எதிர்ப்பு செய்தால்தான் ஸத்யாக்ரஹம். இப்படிப் பண்ணினால் எந்தத் தாயார் - தகப்பனார் மனசும் மாறாமல் போகாது. இதுதான் இப்போது இளைஞர்கள் செய்ய வேண்டிய பெரிய சீர்திருத்தம்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

மதுமதி

● 'பழைய வாசனை கும்!'

● 'ஃபெவிகால் போட்டாலும் ஒட்டவில்லை!'

● 'சாட்சாத் அமெச்சூர் ட்ராமா!'

● 'நெளியாமல் உட்கார முடிவது வியப்பு!'

ஐம்பது வருஷங்களுக்கு முந்தின சமாசாரங்களெல்லாம் திரும்ப வருவது தற்கால சினிமாவில் ஒரு மகத்தான ஃபேஷன். இப் படத்திலும் டைட்டில், கதை, இசை என்று சகல பிரதானங்க ளிலும் பழைய வாசனை 'கும்.'

அந்த ஆரம்ப செஞ்சிக் கோட்டைக் காட்சிகள் ஃபெவிக்'கால் போட்டாலும் சப்ஜெக்டோடு ஒட்டவில்லை. (இதற்காக ரொம்பக் கஷ்டப்பட்டு பர்மிஷனெல்லாம் வாங்கினதாகக் கேள்வி.)

வழக்கமான லவ் ஸ்டோரி என்பதால் காதல் உருவாகிற, இடையே கவர் விழுகிற, முடிவில் சுபமாகிற விஷயங்களெல்லாம் அவ்வப்போது ஏழெட்டு ஸீன்கள் முன்னதாகவே யூகித்துவிட முடி கிறது. இருந்தாலும் நெளியாமல் உட்கார முடிவதுதான் மகத்தான வியப்பு!

ஃபுட்பாலில் தகவல் பரிமாற்றம், தமது குப்பத்தின் முதல் காதலனின், காதலியை வரவேற்கும் விழாக்கோலம், பூட்டின வீட்டிற்குள்ளிருந்து வெளியேற, கார்ட்டனைக் கொளுத்திவிட்டு, ஃபயர் இஞ்சினுக்கு போன் பண்ணும் நூதனம் இப்படியாகச் சிற் சில வைரங்கள்.

ஹீரோயின் அசப்பில் 50% குஷ்பு. அழுகிற சீனில் சிரிப்பதும், சிரிக்கிற சீனில் அழுவதும் மட்டுமே சொல்லும்படியான விஷயம்.



ஹீரோவும் புதுசு. குருவி தலையில் பனங்காயை அல்ல - பலாக்காயை வைத்திருக்கிறபடியால் - நசுங்கின நிலையில் குருவி.

ஆர். சுந்தரராஜன், நல்லெண்ணெய் சித்ரா வருவது நகைச் சுவைக் காட்சிகள் என்று சொல்கிறார்கள். நம்பித்தானாக வேண் டும் என்று அவசியம் இல்லை. அப்புறம் அந்த கிளைமாக்ஸ்.

சாட்சாத் அமெச்சூர் ட்ராமா!

- ஆர். பி. ஆர்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-1993



முதல் பரிசு ரூ. 1,500
இரண்டாவது பரிசு ரூ. 1,000
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 500 வீதம்) ரூ 1,000

ஆக மொத்தம் ரூ. 3,500 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு, ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி : ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்டு 1 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

- ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



20. சவ்ய சாசி

பெரும் கதவு ஒன்று மதிலின் நடுவே இருந்ததையும் அதை நோக்கி நடக்க முற்பட்டதும் தோன்றிய நான்கு வீரர்களையும் அவர்களது உருவிய வாட்களையும் நிழலுடன் விளையாடிய தீப்பந்தங்களின் ஒளியில் கண்ட அரையனின் கரம், தன் நீண்ட வாளின் பிடியில் அமர்ந்தது.

அதை உருவுமுன் கண்ணிமைக்கும் நேரமே தன் பார்வையை ஜெயந்தனை நோக்கிச் செலுத்திய அரையன், கச்சையில் அதுவரை மறைந்து கிடந்த குறுவாட்களில் கைக்கு இரண்டாக வைத்தபடி ஜெயந்தன் நின்றதைக் கவனித்தான். நிலாக் கீற்று பட்டு மின்னின அவற்றின் கூர்முனைகள். அடுத்த நொடியில் தட் தட்டென்ற சப்தத்துடன் அந்த நால்வரும் விழுந்ததைத்தான் அரையன் கண்டான்.

அந்தனை துரிதமாகக் குறுவாட்களை எடுத்து எறிய முடியும் என்றோ, அதுவும் கைக்கு இரண்டாக இரு கைகளாலும் ஜெயந்தன் எறிவானென்றோ கற்பனை கூட செய்து பார்த்திராத அரையன், அவன் திறமையைக் கண்டு உண்மையிலேயே பிரமித்தான்.

''ஜெயந்தா, இப்படி குறுவாளெறிய எங்கு கற்றாய்?'' அரையனின் வியப்பு குரலிலும் நன்றாகத் தெரிந்தது.

ஜெயந்தனது பதில் மிக அடக்கத்துடன் வந்தது, ''கவி நாராயணபட்டரிடம் பிரபு.''

''நானும்தான் அவரிடம் கற்றேன்.''

''உங்களுக்குப் பயிற்சி அந்த நீண்ட வாளில், எனக்கு இந்தக் குறுவாட்களில்.''

''இப்படி இரு கைகளாலும் ஆயுதங்களைக் கையாளும் வீரனுக்கு என்ன பெயர் தெரியுமா ஜெயந்தா?'' அரையன் வினவினான்.

''தெரியாது பிரபு.''

''சவ்ய சாசி என்று பெயர்'' என்ற அரையன், ''சரி ஜெயந்தா, இவர்களை அப்புறப் படுத்துவோம்'' என்றான்.

பாண்டியன் மகள்

ஜீஷ்உக்கேசனன்

நால்வரையும் ஆற்றில் இழுத்துக் கொண்டு போய் விட்டுத் திரும்பிய ஜெயந்தன் கரத்தில் பெரிய துறவுகோல் ஒன்று இருந்தது. அதைக் கொண்டு கோட்டைக் கதவின் திட்டிவாசலைத் திறந்தான்.

உள்ளே நோக்கிய இருவரும் பிரமித்து நின்றனர். இங்கொன்றும் அங்கொன்றுமாய் எரிந்த தீப்பந்தங்களின் மங்கிய ஒளியில் காதுகளையும் துதிக்கைகளையும் உடலையும் அசைத்தபடி வரிசையாக நின்றிருந்த சுமார் ஆயிரம் யானைகளைப் பார்க்க முடிந்தது! சில நல்ல உயரமாகவும், நீண்ட நாட்கள் போரிலும், அரச பவனிகளிலும் பங்கேற்றதால் பெரும் தழும்புகளுடனும் காணப்பட்டன. மேலே போர்த்திய அழகிய விரிப்புக்களுடன் சில நின்றன. நீண்ட மெல்லிய சங்கிலிகளில் தொங்கிக் கொண்டிருந்த மணிகள், யானைகளின் மெதுவான அசைவினால் லேசாக ஒலித்தன. பயிற்சி முடிவடையாத யானைகள் கால்களில் கனமான இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டு நின்றன. ஓரமாக இரண்டொரு வீரர்கள் நல்ல பாதுகாப்பிருக்கும் தைரியத்தில் உறங்கிக் கொண்டிருந்தனர்.

அரையன் மௌனமாக நின்றிருந்தான். அவன் விழிகளில் ஏதோ நினைவுகள் படர்ந்து ஆழ்ந்த சிந்தனையைக் காட்டின. சற்று நேரம் கழித்து ஒலித்த அவன் குரல் அவன் ஏதோ தீர்மானத்திற்கு வந்து விட்டதை உணர்த்தியது.

''ஜெயந்தா!''

''என்ன பிரபு?''

''நீ இனி நமது பாசறைக்குப் புறப்படலாம்.''

''நீங்கள்?''

அவன் குரலில் திகைப்பு இருந்தது.

''நான் இந்த யானைகளுடன் இருக்கப் போகிறேன்.''

''இவை பெரும்பாலும் பயிற்சி முடிவடையாத யானைகள் பிரபு.''

அரையன் கேட்டான் : ''என் தந்தையைத் தெரியுமா உனக்கு?''

''தெரியாது பிரபு.''

''என் தந்தையின் பெயர் முறைமழூர் செழியன்.''

ஜெயந்தன் அயர்ந்து நின்றான். கங்கை கொண்ட ராஜேந்திர சோழன் காலத்திலிருந்து அவன் மகன் முதலாம் ராஜாதிராஜன் காலம் வரை சோழர்களின் யானைப் படைத் தலைவராக இருந்து கொப்பத்துப் போரில் உயிர் துறந்த முறைமழூர் செழியனை யார்தான் அறிய மாட்டார்கள்? அவர் மகனா இவர்?

''நீ நம் படைத்தலைவரைக் கண்டு அனைத்தையும் கூறு. வெள்ளி முளைக்கும் நேரத்தில் நமது படை கோட்டை வாயிலைத் தாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டதாகத் தெரிவி. இப்போது நாம் வந்த வழியில் நமது யானைப் படையின் ஒரு பிரிவை அழைத்து வா. மற்றவற்றை நான் கவனித்துக் கொள்கிறேன்.''

''உத்தரவு பிரபு'' என்று வணங்கித் திரும்பிய ஜெயந்தனை அரையனின் குரல் தடுத்தது. ''ஜெயந்தா, உன் குறுவாட்களில் எனக்கும் சில கொடுத்து விட்டுப் போ'' என்றான் அரையன்.

அளத்தி கோட்டையின் எதிரே அதனைத் தாக்கச் சித்தமான நிலையில் தண்டு இறங்கியிருந்தது சோழர் படை. கோட்டையை நோக்கிப் பாயப் போவது போல் படபடத்துக் கொண்டிருந்த பெரும் புலிக் கொடியையும், வரிசையாக அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களையும், கையில் ஏந்திய வேல்களுடன் உலவிய வீரர்களையும் நிலவொளியிலும் ஒருசில பந்தங்களின் ஒளியிலும் நிழலுருவாகப் பார்த்தபடி கூடாரத்தின் வாயிலில் நின்று கொண்டிருந்தான் சோழர் படையின் பிரதான படைத் தலைவன் காலிங்கராயன்.

வடநாட்டிலும், வேணாட்டிலும் பிறகு மலைநாட்டிலும் நடந்த போர்களில் சோழர்களின் பெரு வெற்றிக்குக் காரணமானவனும், போர்த் திட்டங்கள் வகுப்பதிலும், படை நடத்துவதிலும் நிகரற்றவன் என்று பாராட்டப்பட்டவனுமான காலிங்கராயன், நள்ளிரவையும் கடந்து விட்ட அந்த நேரத்தில் தனது கூடாரத்தின் வாயிலில் நின்றபடி ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். அவன் விழிகள் வேங்கையின் விழிகளைப் போல் பளபளத்து இருளை ஊடுருவிக் கொண்டிருந்தன.

திதானத்தை என்றும் கைவிடாதவன் என்றும், எந்த சிக்கலான சூழ்நிலையிலும் பதற்றமின்றித் திட்டங்கள் வகுப்பவன் என்றும் பெயரெடுத்திருந்த சோழர் படைத் தலைவனது மனம் இப்போது கவலையில்

ஆழ்ந்திருந்தது என்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது.

நீண்ட காலமாகத் தொடர்ந்து நடந்த போர்களில் சோழப் படையின் வேகத்திற்கும், வீரத்திற்கும் ஈடுகொடுக்க இயலாத சாளுக்கிய விக்கிரமாதித்தனும் அவனுக்கு மூத்தவனான சோமேஸ்வரனும் பின்வாங்கிக் கொண்டிருந்தாலும், அளத்தியைத் தவிர துங்கபத்திரா நதியின் கரையில் நவிலையிலும் ஆயிரம் போர் யானைகளுடன் படையொன்றைத் தயார் செய்து இறுதியாக ஒரு முயற்சி மேற்கொள்ளத் திட்டம் வகுத்திருக்கிறார்கள் என்று கிடைத்த செய்தியைப் பற்றிக் கூட அவன் அத்தனை கவலைப் படவில்லை.

ஆனால் செய்தி கிடைத்ததும் சொற்ப வீரர்களுடன் தானே வேவு பார்த்து வருவதாகக் கூறிச் சென்ற சோழ இளவல் ராஜராஜன் இன்னும் திரும்பாததைக் குறித்து, காரணம் புரியாததால் அவன் மனம் சற்று கவலை கொள்ள ஆரம்பித்திருந்தது.

''தலைவரே... உங்களுக்குப் பொன்னாடை போர்த்தி ரொம்ப நாளாகுதோ?''

''எப்படிங்கள கண்டுபிடிச்சே?''

''பொன்னாடையைக் கிட்ட கொண்டு வர்றதுக் குள்ள உங்க உடம்பெல்லாம் சிலிர்த்துக்குதே!''

- அம்பை தேவா



சற்றுத் தொலைவில் புலிக்கொடி பறந்த கூடாரத்தை நோக்கி அடியெடுத்து வைத்தவன், மன்னர் இப்போதுதான் சற்று உறங்கச் சென்றிருப்பார் என்ற எண்ணம் தோன்றியதால் தயங்கி நின்றான்.

இருளில் சற்றுத் தொலைவிலிருந்து தன் உபதலைவர் ஸ்ரீ வல்லபர் வேகமாகத் தம் பெரும் சரீரத்தைத் தூக்கிக் கொண்டு வருவதையும் உடன் மற்றொருவனும் புரவியை நடத்தியபடி வருவதையும் கவனித்தான்.

ஸ்ரீ வல்லபருடன் வந்து தன்னை வணங்கி நிமிர்ந்த ஜெயந்தனைக் கண்ட காலிங்கராயன் முகத்தில் வியப்பு படர்ந்தது.

''ஜெயந்தா, நீ எப்போது வந்தாய்?''

''வந்து கொண்டேயிருக்கிறேன் படைத் தலைவரே. உள்ளே சென்று பேசுவோம். முக்கியமான, ஆபத்தான செய்தியுடன் வந்திருக்கிறேன்'' என்றான் ஜெயந்தன்.

ஜெயந்தனைப் பற்றிப் பூரணமாக அறிந்திருந்த படைத்தலைவன் உடனே இருவரையும் அழைத்தபடி கூடாரத்தினுள் நுழைந்தான்.

''படைத்தலைவரே, கவலை தரும் செய்தி. இளவல் ராஜராஜர் இப்போது நவிலைக் கோட்டையில் சிறையிருக்கிறார்'' என்றான் ஜெயந்தன்.

''என்ன?'' என்று காலிங்கராயன் பரபரப்புடன் கேட்க, ''இளவரசருடன் சென்ற வீரர்கள் என்ன ஆனார்கள்?'' என்று ஸ்ரீவல்லபர் வினவினார்.

''ஒருவரைக் கூட உயிருடன் விடவில்லை ஜெயதுங்கன். மறைந்து நின்று தாக்கியிருக்கிறான். நானும் அரையன் மதுராந்தகரும் சண்டை நடந்த இடத்தைக் கண்ட போது கடைசி வீரனும் எங்களிடம் விஷயத்தைக் கூறி விட்டு உயிர் விட்டான்.''

காலிங்கராயன் முகத்தில் கடுமை சற்றுக் குறைந்தது.

''யார்? மேலைமங்கலத்துப் போரில் பாண்டியனை வென்றவனா?''

''ஆம் படைத்தலைவரே.''

''அவன் எங்கே? உன்னோடு வரவில்லையா?''

''இல்லை தலைவரே, அவர் இப்போது நவிலைக் கோட்டைக்குள் புகுந்திருக்கிறார்!''

ஜெயந்தனுக்கு ஏதும் சித்தப் பிரமையாயிருக்குமோ என்று எண்ணினான் படைத்தலைவன். ''என்ன உளறுகிறாய் ஜெயந்தா?'' என்று கேட்கவும் செய்தான்.

நடந்த நிகழ்ச்சிகளை விவரித்த ஜெயந்தன், இறுதியில் அரையன் மதுராந்தகன் கொப்பத்துப் போரில் உயிர்துறந்த முழையூர் செழியனின் மகன் என்பதையும் தெரிவித்தான்.

''அந்த மகாவீரனின் மகனா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்ட காலிங்கராயனுக்கு, அவன் துணிவைப் பற்றிய சந்தேகம் பின்னர் எழவில்லை.

அரையன் சொல்லியனுப்பியிருந்த விவரங்களிலிருந்து உள்ள நிலையை சரியாகப் புரிந்து கொண்ட காலிங்கராயன், அரையனின் யோசனையையும் ஏற்றுத் தன் திட்டத்தை அப்போதே வகுத்தான். மன்னர் துயிலெழுந்ததும் அவர் காலையில் அளத்தியைத் தாக்கத் தொடங்கலாம் என்று தெரிவிக்குமாறும், தான் இப்போதே ஒரு படைப் பிரிவுடன் நவிலை நோக்கிச் செல்வதாகவும், அதனை வெற்றி கொண்டபின் மன்னருக்குத் துணையாகத் திரும்பி வந்து சேர்ந்து கொள்வதாகவும் அந்தரங்கத்துக்குப் பாத்திரமான திருமந்திர ஓலை நாயகரிடம் தெரிவித்து விட்டுக் கிளம்பினான். இருளோடு இருளாக நவிலையை நோக்கி நகர ஆரம்பித்தது சோழர் படை. அதன் நடமாட்டம்

எதிரே இருந்த அளந்தி கோட்டையின் காவல் வீரர்களுக்குத் தெரிய வராதபடி நிசப்த நிழல் நாடகமாக அரங்கேறியது.

ஜெயதுங்கனின் மனம் குழம்பியிருந்தது. விடிந்ததும் இளவரசனைத் துங்கபத்திராவின் அக்கரையிலிருக்கும் கல்யாணபுரக் கோட்டைக்கு அனுப்பி விடுவது என்று தீர்மானித்தான். எதற்கும் ஒருமுறை சென்று இளவரசனைப் பார்த்து விட்டு, காவலர்களையும் எச்சரித்து வரவேண்டும் என்று தீர்மானித்த ஜெயதுங்கன் தன் அகலமான பட்டாக் கத்தியைத் தரித்துக் கொண்டு மதுக் குப்பியை எடுத்து ஒரு மிடறு அருந்தி விட்டுக் கிளம்பினான்.

மேல்தளத்தை அடைந்தவன் தூரத்தில் மதிலின் மீது உலவிக் கொண்டிருந்த வீரர்களையும், மூலையிலிருந்த அறையின் வாசலில் கைகளில் வேல்களுடன் நின்றிருந்த காவலரையும் கண்டு திருப்தியுடன் கதவைத் திறக்குமாறு உத்தரவிட்டான். வளைந்து சென்ற படிகளில் இறங்கினான்.

சாளரத்தின் வழியே வெளியே பார்த்தபடி நின்றிருந்த சோழ இளவல், காலடிச் சப்தம் கேட்டுத் திரும்பினான். ராஜராஜன் முகத்தில் பகைவனின் கோட்டையில் சிறைப்பட்டிருந்த அந்த நேரத்திலும் அலட்சிய முறுவலொன்றே பரவிக் கிடந்தது. அது ஜெயதுங்கன் கோபத்தைக் கிளறவே, சற்று எரிச்சலுடனேயே கேட்டான் : ''சோழ இளவல் எந்தக் கோட்டையைப் பிடிக்க சிந்தனையிலிறங்கியிருக்கிறார்?''

பதில் பரம நிதானமாக வந்தது இளவலிடமிருந்து :

''இந்தக் கோட்டையைத்தான்!''

''சிறைக்குள் இருந்து கொண்டா?''

''ஆம். இயலாது என நினைக்கிறாயா?''

''இளவரசர் நாளை கல்யாணபுரக் கோட்டைக்குச் சென்றபின் அதைப் பற்றிச் சிந்திக்கலாம்'' என்றான் ஜெயதுங்கன்.

பதிலுக்குக் கடகடவென்று நகைத்தான் ராஜராஜன்.

''ஏன் நகைக்கிறாய்?'' இரைந்தான் ஜெயதுங்கன்.

''உன் நிலையை எண்ணித்தான்.''

''என் நிலைக்கென்ன? இந்தக் கோட்டையில் நான் தலைவன். சோழ இளவல் என் சிறையில் பிணைக்கைதி. உன் தந்தையை நான் சோழ நாட்டுக்கு விரட்டும் நாள் அதிக தூரத்தில் இல்லை.''

''யார் யாரைத் துரத்துகிறார்கள் என்று காலம் பதில் சொல்லும்!''

''சிறையிலிருப்பவன் பேச வேண்டிய பேச்சில்லை இது.''

''என் பேச்சுக்கென்ன?''

''ஆணவம் தொனிக்கிறது.''

''ஆணவமல்ல. தன்னம்பிக்கை.''

''உன்னை இங்கேயே நான் கொன்று விட்டால்?'' ஜெயதுங்கனின் குரல் உயர்ந்தது.

ராஜராஜன் விழிகளில் விபரீத ஒளியொன்று தோன்றியது. அவன் முகத்தில் நிலவிய முறுவல் இன்னும் விரிந்தது.

''மறைந்திருந்து தாக்குவதும், நிராயுதபாணியாகச் சிறையிருப்பவனைக் கொல்வதும் உனக்குச் சகஜம்தான். ஆனால்...'' இழுத்தான் ராஜராஜன்.

''ஆனால் என்ன?''

''என்னைக் கொல்வது அத்தனை எளிதல்ல.''

''ஏன்? என்னைத் தடுக்க யாரால் இப்போது முடியும்?'' என்ற ஜெயதுங்கன் தன் பெரும் பட்டாக்கத்தியை உருவினான்.

ராஜராஜன் குரலில் எச்சரிக்கை ஒலித்தது. ''ஜெயதுங்கா, நெருப்புடன் விளையாடாதே!'' என்றான். அவன் கால்கள் அகன்று உறுதியாகத் தரையில் பதிந்தன. அவன் விழிகள் ஜொலித்தன.

ஜெயதுங்கன் எந்த எச்சரிக்கையையும் ஏற்கும் நிலையில் இல்லை. சோழ இளவலை அங்கேயே கொன்று விடுவது என்ற முடிவுக்கு வந்தவன் முகத்தில் வெறியும், ஆத்திரமுமே நிறைந்தன. வாளை ஓங்கினான். அதே கணத்தில் அந்த அறையில் கணீரென்று மூன்றாவதாக ஒரு குரல் ஒலித்தது.

''ஜெயதுங்கா, நில்'' என்ற சொற்களைக் கேட்டு உருவிய வாளுடன் திரும்பிய ஜெயதுங்கன், வாயிலில் ஒரு வாலிபன் வெகு அலட்சியமாகச் சாய்ந்து நிற்பதைக் கண்டான்.

அசாத்திய உயரமாக இருந்த அந்த வாலிபனின் இடையிலிருந்த வாளும் அசாத்திய நீளமாயிருந்தது.

(தொடரும்)

''எனக்கு இந்த உலகத்திலே, ஒரு விஷயம் மட்டும் புரியவே இல்லையடி...''
''என்னது?''
''லேடீஸ் சீட்ல உட்கார்ந்தபடியே இந்த ஆம்பிளைகளுக்கு எப்படித்தான் இந்த அசரத் தூக்கம் வருதுன்னு...!''



ஆர். வசந்தகுமார்

சிங்கப்பூர் போகும் சென்னை மாலைகள்!

''குண்டு வெடிக்க ஆரம்பிச்சப் புறம் அரசியல்வாதிங்க பூ மாலைன்னாலே மிரண்டு போறாங்க...''
வெடிகுண்டு கலாசாரம் பூமாலைத் தொழிலை வெகுவாக பாதித்து விட்டிருக்கிறது. எப்படி சமாளிக்கிறார்கள்?



பல்லவனுக்காகக் காத்துக் கிடக்கும் நேரத்தில் பரபரக்கும் பூக்கடைக் கரங்களைப் பார்ப்பது சுவாரஸ்யம். சென்னை நகரத்தில் 'பூக்கடை' என்று பிரபலமாகி விட்ட நெரிசல் மிகுந்த நேதாஜி சுபாஷ் போஸ் சாலைப் பகுதியில் நூறுக்கு மேற்பட்ட கடைகள். சைதை, மாம்பலம், பாண்டிபஜார், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி என்று ஆங்காங்கே பத்தும் இருபதுமாகப் பூக்கடைகள்.

வண்ண வண்ணமாக ரோஜா, மல்லிகை, சம்பங்கி, சாமந்தி என்று மலர் மாலைகளை அற்புதமான கலை நுட்பத்தோடு செய்கிற ஆற்றலில் முதலிடம் பாண்டிபஜார்க் கடைகளுக்குத்தான்.

ரோஜாவில் இரண்டு விதம். சாதாரண ரகம் காலை ஆறு மணிக்கு வாங்கி வந்தால் பத்து மணிக்கெல்லாம் உதிரத் தொடங்கி விடும். நல்ல ரகம் சாயங்காலம் வரை கட்டுக் குலையாமல் அப்படியே இருக்கும். நூல் சுற்றிக் கட்டி விட்டால் மறுநாள் வரை கூடத் தாக்குப் பிடிக்கும். விருப்பப்பட்டால் சரிகை இழை சுற்றி மினுமினுக்கப் பண்ணித் தருவார்கள்.

தேவையான ரோஜா மலர்கள் சென்னையிலேயே வண்டலூர் வட்டாரத்தில் உற்பத்தியாகின்றன. சாதாரணமாக மாலை கட்டப் பயன்படும் 'ரெட் ரோஸ்' ரகங்கள் நூறு பத்து ரூபாய் முதல் இருபது ரூபாய் வரை கூட விலை இருக்கும். நல்ல சீசனில் - மழை நாட்களில்



ஐந்நூறு ரூபாய்க்கு விலை குறையும். வெயில் காலத்து ரோஜா சிறுத்துப் போய் விடும்.

மல்லிகைப் பூக்கள் பெரும்பாலும் மதுரையிலிருந்தே வருகின்றன. மதுரை சுற்று வட்டாரத்தில் அருப்புக் கோட்டை போன்று முப்பது நாற்பது கிலோ மீட்டர் தொலைவிலிருந்து கூட அரும்புகள் வந்து, விமானத்தில் சென்னைக்குப் பறப்பது தனிக் கதை.

இப்போதெல்லாம் மாலையின் கழுத்துப் பக்கத்தில் நிறையப் பச்சை இலைகள் சேர்த்துக் கட்டுகிற வழக்கம் அதிகமாகி விட்டது. இந்த இலைகளுக்குக் கூட விலை உண்டு. சாதாரணமாய் வேலியோரங்களில் கிடைக்கும் பாலை இலைதான் இவை. அழகாய் வெற்றிலைக் கற்றை மாதிரி பறித்து அடுக்கி விற்கிறார்கள். கட்டு இருபத்தைந்து காசு!

"எங்க தாத்தா பூக் கட்டினாரு. அப்பா பூமாலை கட்டினாரு. இப்ப நான் பதினைஞ்சு வருஷமா இதுதான்..." என்று கூறும் ஏழுமலை, ஆர்டர்களின் பேரில் கட்டுகிற மாலைகள் சிங்கப்பூருக்கும் ஸ்ரீலங்காவுக்கும் கூட விமானத்தில் போகின்றன.

"இந்த விமான ஆர்டர்களுக்கு முதலும் நிறையப் போட வேண்டும். நிறைய வேலையும் பிடிக்கும். அதற்கேற்ப நல்ல விலையும் கிடைக்கும்" என்கிறார் ஏழுமலை.

முழுவதும் ரோஜாவால் கட்டிய பெரிய மாலை என்றால் ஐந்நூறு ரூபாய் ஆகுமாம். மூவாயிரம் பூக்கள் வேண்டியிருக்கும். வெளிநாட்டு,

* வீட்டுப் பூஜைக்கும் மாலை....





* சென்னையிலுள்ள திருப்பதி தேவஸ்தான பெருமாளுக்கு ஸ்பெஷல் மாலை

வெளிமாநில ஆர்டர்களுக்கு விலையுயர்ந்த மாலைகள் போகும் போது மல்லிகை, சம்பங்கி எல்லாம் சேர்த்து அழகான வேலைப்பாடுகளோடு செய்து தருவார்கள்.

காலையில் ஆர்டர் கிடைத்தால் மூன்று மணி நேரத்தில் மாலை தயாராகி விடுமாம். தேவையான பூக்கள் மொத்த வியாபாரிகளிடம் கிடைக்கும். தொலைபேசியில் சொல்லி உடனே வடசென்னை பூக்கடையிலிருந்து வரவழைத்து விடுவார்கள். ஐந்தாறு பேர்களின் கைகள் பரபரக்கும். விமானப் பாக்கிங் செய்வது கூடத் தனிக்கலை! வாழை இலையில் சுற்றி, ஓலைப் பாயில் வைத்து, அப்புறம் அட்டைப் பெட்டியில் பத்திரமாக வைத்து, பரிசுப் பொருள்களை அனுப்புகிற 'கிஃப்ட் பாக்' மாதிரி ஜோடித்து அனுப்ப வேண்டும். ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள மாலையை அனுப்ப பாக்கிங் செலவு மட்டும் ஐம்பது ரூபாய்!

ஏழுமலைக்குக் கட்சி சார்பு எல்லாம் கிடையாது. இருந்தாலும் ''தி.மு.க.காரங்கதான் ஒரு எம்.எல்.ஏ.ன்னாக் கூட நிறைய மாலை போட்டு அமர்க்களம் பண்ணுவாங்க. பூக் கடைங்களுக்கு அவங்க ஆட்சியிலே நிறைய வருமானம் கெடச்சுது. மத்த கட்சிக்காரங்க பூமாலை விஷயத்திலே சிக்கனம்தான். அதுவும் குண்டு வெடிக்க ஆரம்பிச்சப்புறம் அரசியல்வாதிங்க பூமாலைன்னாலே மிரண்டு போறாங்க'' என்று சொல்கிற போது இந்தத் தொழிலுக்கு இப்படி ஒரு சோதனையா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது.

வெடி குண்டுக் கலாசாரம் பூமாலைத் தொழிலை வெகுவாகப் பாதித்து விட்டிருக்கிறது. அண்மையில் இலங்கை அதிபர் படுகொலை ஆன போது விமானத்தில் போக வேண்டிய மாலை பார்சல், அதிகாரிகளால் தடுக்கப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டதில் ஆயிரம் ரூபாய் நஷ்டம் என்கிறார் ஏழுமலை. அது மட்டுமில்லாமல் நான்கைந்து நாட்கள் தொடர்ந்து கிடைத்திருக்கக்கூடிய விமான ஆர்டர்களும் போய் விட்டனவாம்.

பொதுவாகவே அரசியல் கூட்டங்களுக்குப் பூமாலைகள் கேட்பது இப்போது வெகுவாய்க் குறைந்து விட்டதாம். திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகள் கோவில் திருவிழாக்கள் - இவற்றை மட்டுமே நம்பியாக

* நடுவில் நண்டுவை.. நார், சுற்றிலும் முத்துக் கோர்த்த மல்லிகை...





* சரிகை சுற்றினால் மாலை வரை உதிராது

வேண்டியிருக்கிறது. ஆடி மாசம் வந்து விட்டால் மட்டும் வாரம் ஒருநாள்தான் - வெள்ளிக் கிழமை - பூமாலைகள் தேவைப்படும். மற்ற மாதங்களில் பரவலாக நல்ல டிமாண்ட் உண்டு.

பூக் கட்டித் தருகிறவர்களுக்கு ஒருநாளைக்கு ஐம்பது அறுபது என்று சம்பளம் கிடைக்கும். வேலையையும், வரும் ஆர்டர்களையும் பொறுத்து, கூலி வேறுபடும். பெரும்பாலும் கிராமங்களை விட்டு வந்து சென்னையில் குடியேறிய இளைஞர்களையே இத் தொழிலில் காண முடிகிறது. ஒரு ஜவுளிக் கடையில் நாளொன்றுக்கு ஐந்து ரூபாய்க்கும் குறைவாகக் கூலி பெற்று வந்த கோபி, இப்போது பூக்கடையில் தினக்கூலி இருபது ரூபாய் பெறுகிறான். இவனைப் போன்ற சிறுவர்களுக்கு இது பிடித்தமான தொழிலாக இருக்கிறது. பூ தொடுக்கும் பெண்கள் மாலை கட்டும் வேலைக்கு வருவதில்லை. ஏன்...?

''அவங்களால இப்படி கடுமையா வேலை செய்ய முடியாதுங்க'' என்று பதில் வருகிறது இளைஞர்களிடமிருந்து. ஆண்கள் சாம்ராஜ்யத்தில் குறுக்கிட வேண்டாம் என்று விலகி இருக்கிறார்களோ...?

- பாலன் பூங்குழலி


வண்ணப்படங்கள், புகைப்படங்கள் : கோபிநாத்

கொஞ்சம் கசக்குங்கள் மூளையை!

1) 6, 2, 8, 7, 5........ இந்த வரிசையில் அடுத்த இரண்டு எண்களைக் கண்டு பிடியுங்களேன்.

2) ஒரு எண்ணெய் வியாபாரி, தம் மூன்று பிள்ளைகளுக்காக, ஏழு முழு டின் எண்ணெய், ஏழு பாதி எண்ணெய் நிரம்பிய டின்கள், ஏழு காலி டின்களைக் கொடுத்து, எண்ணெயையும் டின்களையும் சமமாகப் பிரித்து எடுத்துக் கொள்ளச் சொன்னார். பிள்ளைகள் எப்படிப் பிரித்துக் கொள்ளுவார்கள்? அவர்களிடம் வேறு பாத்திரங்கள் இல்லை.


3) பங்களாவைச் சுற்றி பத்து அடி அகல அகழி. ஒன்பதரை அடி அகல பலகைகள் இரண்டைக் கொண்டு, அகழியைக் கடப்பது எப்படி?



4) இந்த பிறந்த நாள் கேக்கை மூன்று தடவை வெட்டி, எட்டு துண்டுகளாக்குங்களேன்.



5) இந்தப் படத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?



விடைகள் 48 - ஆம் பக்கம்

இருட்டில் கறுப்பு ஸில்க் போல அசைந்து கொண்டிருந்த கடலைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். கண்கள் லேசாகக் கலங்கின. எவ்வளவு காலமாயிற்று இந்தக் காற்றை சுவாசித்து! இராமேஸ்வரத்தின் காற்று கூட அலாதியானது. லோடியம் வெளிச்சத்தில் மனித ஆற்றலைப் பறை சாற்றிக் கொண்டு கம்பீரமாக நின்ற பாலத்தைப் பார்த்தேன். இதெல்லாம் அப்பொழுது கிடையாது. எல்லாவற்றுக்கும் ரயில்தான். அதோ தெரிகிறதே ரயில்பாதை. அதுதான் தொடர்பு. காய்கறி, பூ, மீன் எல்லாம் அதில்தான் வரும்.

''சார் போலாமா?'' என்ற டிரைவரின் குரல் கேட்டுத் திரும்பினேன். மெள்ள நடந்து காரில் அமர்ந்தேன். என் மேலதிகாரியின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

''ராம்! ஆர் யூ க்ரேஸி? - ராமநாதபுரம்ல ஒரு காலேஜ் லெக்சரர் வேலைக்காக இந்த வேலையை ரிஸைன் பண்ணப்போறயா? ஏன்?''

''உங்களுக்குச் சொன்னா புரியாது. எனக்கு எங்க ஊர் மேல இருக்கற தீவிரமான காதல், பக்தி இதெல்லாம்... எனக்கு இந்த வெற்றிக்கெல்லாம் அப்பாற்பட்டு, 'ஐ டோண்ட் பிலாங் ஹியர்'னு ஒரு உறுத்தல்.... இப்படியே எத்தனை நாள் ஓட்ட முடியும்? எங்க ஊருக்கே திரும்பிப் போயிட்டேன்னா எல்லாம் சரியாயிடும்.''

''ராம், நான் சொல்லறதக் கேளு - வீண்ல போ, கொஞ்ச நாளைக்கு. உன்னோட பிரமாதமான எதிர்காலத்தைக் கெடுத்துக்காதே!''

''இல்ல, எங்க ஊருக்குப் போகணும். அமைதியும் அழகும் ததும்பற எங்க ஊர், அந்தக் கடல், கோவில்....''

''நீ ஒரு செண்டிமெண்டல் ஃபூல். உனக்கு என் டாட்டர்தான் சரி....''

மீரா. அழகான பெண். டில்லியின் நவநாகரிக அலையில் சிக்கிக் கொள்ளாமல் இன்னமும் மழையையும், மேகத்தையும், ரசிக்கும் பெண். இதற்கெல்லாம் கூட நேரம் ஒதுக்கும் என்னைப் போன்ற மற்றுமொரு செண்டிமெண்டல் ஃபூல். 'அவளைத் திருமணம் செய்து கொண்டிருந்தால்...?'

கார் நிதானித்து நின்றது. மணி 11.30. எனக்கு அந்த இடம் நினைவில் இல்லை. அடையாளம் தெரியவில்லை. 'இருட்டு! - அதுதான் தெரியவில்லை' என்று சமாதானப்படுத்திக் கொண்டேன். எனக்கு ராமேஸ்வரத்தின் ஒவ்வொரு கல்லும் புல்லும் அத்துப்படியாயிற்றே! எப்படி அடையாளம் தெரியாமல் போகும்!

மணி 11.40 இப்பொழுது அக்கா வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டுவதை விட ஹோட்டலுக்குச் செல்வது மேல் என்று தோன்றியது.

'**ஏ**ம்மா, நம்ம பக்கத்தாத்துல வரவாளுக்கு எல்லாம் சாப்பாடு போட்டுப் பணம் வாங்கிக்கறாளே எதுக்கு?' - சிறு வயதில் அம்மாவிடம் கேட்டது நினைவு வருகிறது.

'ராமு, யாத்திரீகாள்ளாம் இராமலிங்க சுவாமியைத் தரிசனம் பண்ணணும்னு வரா. அவாளுக்கெல்லாம் பசிக்காதோ? இருக்கற மடங்கள்ளயும், சிலர் ஆத்துலயும் இந்த மாதிரி சாப்பாடு போடுவா. கைங்கரியத்துக்குக் கைங்கரியம். வியாபாரத்துக்கு வியாபாரம்.''

''ஏம்மா நம்மாத்துல பண்ணல?''

''உங்கப்பா இருக்கற வரைக்கும் பண்ணிண்டுதான் இருந்தேன். இப்பல்லாம் எனக்குத் தள்ளல. உனக்கு வர்த்தினியைக் கல்யாணம் பண்ணிவதுக்கப்புறம் வேணா திருப்பியும் அந்த மாதிரி பண்ணலாம்.''

வர்த்தினி! அப்போது அவளுக்கு ஐந்து வயது கூட இருக்காது. அவளைப் பற்றி இப்போது எதுவும் நினைவுக்கு வரவில்லை. அப்பா இறந்து போய்ச் சில காலம் சென்று மாமாவுடன் நான் கிளம்பி விட்டேன்.

காலம் கரைத்த கனவுகள்

அமெரிக்கா மாமா! திடீரென ''என்னுடன் வருகிறாயா'' என்று கூப்பிட்டார். அதன் பிறகு.... வாழ்வே அடியோடு மாறிப் போனது. இப்பொழுது முற்றுப் பெறும் வட்டம் போல மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்து விட்டேன்.

உலகம் முழுவதும் எத்தனையோ கடற்கரைகள், எவ்வளவோ சூரியோதயங்கள் பார்த்தா

யிற்று. ஆனாலும் எங்கள் ஊர் போல வருமோ? சூரியனுக்குக் கூட எங்கள் ஊரின் மேல் தனிப் பிரியம்.

வேகமாக சைக்கிளை மிதித்துச் சென்ற நாட்கள் நினைவுக்கு வந்தன. எனக்கு மட்டும் தெரிந்த அந்த ரகசிய இடத்தை அடைந்து, மூச்சை இழுத்து தியானம் செய்வேன். பறவைகள் ஒலியும், கடற் காற்றும் மட்டும் கேட்க, தென்னை மர இலைகள் மெள்ள அசைய, ஆயிரம் வர்ணம் காட்டும் ஆகாயத்தில் சூரியன் எழ, கை கூப்பி ஆதித்ய ஹ்ருதயம் சொல்வேன்.

ஆனால் இப்போது... சூரியோதய நேரத்தில் கடலில் குளிக்கும் பலர் ஓவென்று கத்தி, தண்ணீரை வாரி இறைத்து அந்த அமைதியை அவமதிப்பது போல இருந்தது. அங்கேயே பல் தேய்த்து, அங்கேயே துப்பி, தலைவாரி, கடலுக்கு அருகே கரையை அசுத்தம் செய்தது அதிர்ச்சியை அளித்தது.

சங்கரமடத்தில் இரு பக்கமும் நெடுக அமர்ந்திருந்த பிச்சைக்காரர்களைப் பார்த்தது அடுத்த அதிர்ச்சி. ·முன்பும் உண்டு. ஆனால் இப்படி 100, 125 பேரா? வரிசையாக, வழி நெடுக.... சீக்கிரமே அந்த இடத்தை விட்டு விலகினேன்.

நீண்ட நேரம் தேடினேன். ஆனாலும் என் ரகசிய இடத்தைக் காணவில்லை. வரிசையாக ஹோட்டல்கள், வீடுகள், கடைகள் இவற்றைத்தான் பார்த்தேன். இருபது வருடங்களுக்கு முன்பு இருந்த ஓர் இடம் அப்படியே இருக்கும் என்று நினைத்துத் தேடுவதன் அபத்தம் எனக்குத் தாமதமாய்ப் புரிந்தது. சோர்வுடன் திரும்பி நடந்தேன்.


அக்கா வீடு, நல்ல வேளை அவ்வளவாக மாறவில்லை.

கோலம் போட்டுக் கொண்டிருந்த பெண் நிமிர்ந்து என்னைப் புருவம் சுருங்கப் பார்த்தாள்.

''வர்த்தினிதானே? அப்பா இருக்காரா?'' என்றேன். அதற்குள் சரோஜா அக்கா ஓடி வந்து கண்ணில் கண்ணீருடன் அணைத்துக் கொண்டு, ''வாடா, வா.... வா... எப்படிடா இருக்கே? போட்டோவுல பார்த்த மாதிரியே இருக்கியே....'' என்றாள்.

வழக்கமான விசாரிப்புகளுக்குப் பிறகு நடுக்கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஏஸிக்குப் பழக்கப்பட்ட உடல் வியர்த்துக் கொட்ட ஆரம்பித்தது. அக்கா ஸ்டவ் வைத்துச் சமைப்பதும் ஏதோ நூதனமாக இருந்ததே தவிர ஒட்டவில்லை.

''சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதேடா ராமு. எங்கேயோ இருக்கே. அம்மாக்கும், அப்பாக்கும் ஒழுங்கா ச்ரார்த்தம் பண்ண முடியறதில்லை உனக்கு. சங்கர மடத்து மாமா கிட்டே சொல்றேன். போய் இன்னிக்குப் பிராயச்சித்த ச்ரார்த்தம் பண்



ணேன்'' என்றாள்.

சங்கரமடம் அப்படியே இருந்தது. காற்று, அமைதி. ''நாப்பது முழுக்கு போட்டுட்டு வாங்கோ'' என்று கடலுக்கு அனுப்பி வைத்தார் அந்த வயதானவர். கரையில் கால் வைக்கவே கூசியது. கடலுக்கு உள்ளே நெடுந்தூரம் சென்றேன்.

மீண்டும் சங்கர மடத்துக்குத் தண்ணீர் சொட்டச் சொட்ட வந்து சேர்ந்தேன்.

''மாத்ரு சாபே, பித்ரு சாபே, நதீ சாபே...''

முன்பெல்லாம் எவ்வளவு மந்திரங்கள், சுலோகங்கள் சொல்லுவேன்! இப்பொழுது ''சுக்லாம் பரதரம் விஷ்ணும்...'' அதற்கு மேல் தடுமாற்றம்!

ஸ்வாமி தரிசனம் முடிந்து சாப்பிட வந்தேன்.

''வர்த்தினி, நீயும் உட்காரேன், சேர்ந்து சாப்பிடலாம்.''

''நன்னாருக்கு மாமா! புருஷாள்ளாம் சாப்பிட்டதுக்கப்புறம் சாப்பிடறதுதான் பொம்மனாட்டிகளுக்கு அழகு'' என்று அவள் நீட்டி முழக்கியது ஏதோ நாடகம் பார்ப்பது போன்ற ஓர் உணர்வைத் தந்தது.

''போர் அடிக்காதா உனக்கு? பிளஸ் டூ முடிச்சிட்டு ஏன் மேல படிக்கல?''

''மேல படிக்க ராமநாதபுரம் போகணும். அதான் நிறுத்திட்டேன்.''

'இவ்வளவு ஹோட்டல்கள் வந்திருக்கின்றன, ஒரு கல்லூரி இல்லையா?'

ராமநாதபுரம் கல்லூரி முதல்வருக்கு ஃபோன் செய்வதற்காக போஸ்ட் ஆஃபிஸுக்கு வர்த்தினியை அழைத்துப் போகச் சொன்னேன். அவள் அம்மாவின் முகத்தைப் பார்க்க, சரோ அக்கா, சற்று தயங்கி, ''போய்ட்டு வா'' என்ற பிற்பாடே வந்தாள்.

''ரொம்ப நாளைக்கப்புறம் போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு ஒரு நல்ல பட்டிமன்றத் தலைப்பு கிடைச்சிருக்கு.''

''என்ன தலைப்பு?''

'''ஜெ' வீடு மீது விடுதலைப் புலிகளின் விமானம் பறந்ததா, இல்லையா!''

- ஜெயாப்ரியன்



அவள் என்னை விட்டு இரண்டடி தள்ளி நடந்து வந்தது தமாஷாக இருந்தது. சங்கடமாகவும் தான். ஏனோ திடீரென கம்பீரமான டில்லிச் சூழலில் மீராவின் ஞாபகம் வந்தது. 'எவ்வளவு இனிமையான பெண்.'

நடக்க, நடக்க ஒரு பயம் பிடிக்க ஆரம்பித்தது. புகை, இரைச்சல், பிச்சைக்காரர்கள் வரிசை, இங்கா? இங்கா இருக்கப் போகிறேன்?

ஃபோன் பேச லைன் கிடைக்காமல் திரும்பி வந்தோம். திரும்பி வரும் பொழுதும், வர்த்தினி ஒன்றும் பேசாமல் தலை குனிந்து, அகலமான இடைவெளி விட்டு நடந்து வந்தது எரிச்சலைத் தந்தது.

அக்கா வீட்டுத் தரையில் படுக்க முடியவில்லை. என் மேலேயே எனக்குக் கோபம் வந்தது. இங்கு எப்படி இருப்பது! 'இது என் ஊர் இல்லை' என்று கத்த வேண்டும் போல் இருந்தது. இருபது வருடத்திற்கு முந்தைய இராமேஸ்வரம் எங்கே? அந்த மனிதர்கள், அந்தப் பழக்கங்கள்... எங்கே போயின? என் நினைவுகளில் சிறைப்பட்டு இருந்த அந்த ஊர்....

என மனத்தில் ஊதி ஊதி நான் பெரிதாக்கிக் கொண்டிருந்த என் ஊரின் மீதான காதல் ஆவியாகப் போயிற்று. அப்பப்பா! காலத்திற்குத் தான் எவ்வளவு சக்தி. ஊரில் எனக்குப் பிடித்தது மாறிவிட்டது. மாறாதது எனக்குப் பிடிக்கவில்லை. எனக்கும் இன்றைய இராமேஸ்வரத்திற்கும் இடையில் என்ன பாக்கி இருக்கிறது?

''**ரா**மு, வர்த்தினிக்கு மாப்பிள்ளை பார்க்கறேன்டா! வைரத்தோடு கேக்கறா. அந்நிம்போர் சம்பளத்தில் எங்கடா போறது!''

''நான் பண்ணிப் போடறேனக்கா'' என்றேன் தெளிவாக.

''அம்மா கூட சொல்லுவா. உனக்கு வர்த்தினிய கொடுக்கணும்னு. இப்ப அம்மா இருந்திருந்தா வேண்டாம்னுருப்பா! அதெல்லாம் ஒத்து வராது!''

'அக்கா! எவ்வளவு இயல்பாகச் சொல்லி விட்டாய்! ஒத்து வராது! என் உடலும் மனமும் பலவற்றைப் பழகிக் கொண்டு விட்டன. எண்ணங்கள் மாறி விட்டன. எனக்கு இனி இங்கு என்ன இருக்கிறது?'

அன்றிரவே திரும்பக் கிளம்பி விட்டேன். இனி எப்பொழுதாவது வரலாம். ஹோட்டல்களில் தங்கிவிட்டு, ஃபோட்டோ எடுத்துக் கொண்டு திரும்பிச் செல்லலாம். பாம்பன் பாலத்தைக் கடக்கையில் எனக்குள் இருந்த ஏக்கங்கள் மறைந்து போயிருந்தன.


கல்கி
13-6-93
கர்நாடகச் சிறப்பிதழில்
நளினி சாஸ்திரி
எழுதும்
ஆத்மாவுக்கு ஆபத்து
பொன்விழா
நாவல் போட்டியில்
பரிசு பெற்ற
விஞ்ஞானத் தொடர்கதை

சிக்கரியும்

சிக்கரி என்பது ஒரு உலர்ந்த வேர். காஃபிக்குப் பதிலான ஒரு எளிய மாற்றாக உலகப்போரின் சமயத்தில் புழக்கத்தில் வந்தது. விரைவில் ஒரு பழக்கமாகி விட்டது. சிக்கரி காஃபிக்கு இணையல்ல.

தோற்றத்தில், மணத்தில், சுவையில் எதிலுமே காஃபிக்கு எள்ளளவும் இணையல்ல.
காஃபி அருந்தியபின் உங்கள் நாவில் சிக்கரியின் சுவை பின்தங்கினால், அது ஒரு சாதாரண காஃபி

காஃபியும்

என்று நீங்கள் அறிந்து கொள்ளுவீர்.
அப்படியானால் காஃபியுடன் சிக்கரியை சேர்க்கக் காரணம்? அசல் காஃபியின் அருமையான சுவையை கை விடுவானேன்?

அதன் மலிவான விலையினாலா? அல்லது கலப்படமற்ற காஃபியின் அருமையான சுவையை ருசிக்க உங்களுக்கு இது நாள்வரை வாய்ப்பு இல்லாததாலா?

ஒன்றல்ல.

அறிமுகம்

ஆசியாவின் மிகப்பெரியதும், மிகச் சிறந்ததுமான, டாடாவின் குடகு மலைச்சாரல் தோட்டத்திலிருந்து வழங்கும் "கூர்க்". தேர்ந்தெடுத்த காஃபி கொட்டைகளை வறுத்துப் பொடித்து, புத்துணர்ச்சி நறுமணம் குறையாத வண்ணம் உடனடியாக பாக் செய்து அளிக்கப்படுகிறது "கூர்க்". நூற்றுக்கு நூறு கலப்படமற்ற ஃபில்டர் காஃபி. சுவையில் ஒப்பற்றது.

கலப்படமற்ற

நிறமோ ஆதவனின் உதய நேரச் செம்பொன். சூடாய்ச் சுவைக்கச் சுவைக்கக் கிறங்க வைக்கும் அசல் காஃபிச் சுவை. இந்த அரிய அனுபவத்தை விவரிக்க ஒரே சொல் பொருந்தும்–ஆத்ம திருப்தி.

ஆம். நம் முன்னோர்கள் அசல் காஃபியை அருந்திப் பெற்ற ஆத்ம திருப்தி. இப்போது உங்களுக்கு மீண்டும் அளிக்க வந்துள்ளது டாடாவின் கூர்க் காஃபி.

காஃபி



டாடாவின் "கூர்க்" காஃபி–அன்றாடம் காலையில் ஆத்ம திருப்தி.

Mudra:CCL:622:93:TAM

வெற்றிக்கான படிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டவை அல்ல; அதை நாமாகத்தான் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு, பாஸ்கர் என்ற முப்பது வயது இளைஞர் மிகச் சிறந்ததோர் உதாரணம்.

உம்பிடியார் குரூப்பினால் பாரி முனையில் அமைக்கப்பட்ட 'உம்பிடியார் எக்ஸிகியூடிவ் சென்டர்' ஆரம்பிக்கப்பட்ட ஓராண்டு காலத்திற்கு உறுப்பினர்களே இல்லாமல் சிரமப்பட்டது. அதில் வேலைக்குச் சேர்ந்திருந்த பாஸ்கர், அதற்கான காரணத்தை யோசிக்க ஆரம்பித்தார்.

சென்னையிலேயே மிகவும் பிஸியான இடம் பாரிமுனை. அதில் ஓர் இடத்தை வாடகைக்குப் பிடித்துத் தங்கள் வியாபாரத்திற்கான அலுவலகத்தை அமைத்துக் கொள்ள வேண்டுமானால் பகடியாகவே லட்சக் கணக்கில் கொடுக்க வேண்டும்; வாடகையும் ஆயிரக் கணக்கில் இருக்கும்.

சாதனையின் அடிப்படை: சிந்தனை

இது எவ்வளவு பேருக்குக் கட்டுப்படியாகும்!?

இந்த நிலையில் ஏ.ஸி. செய்யப்பட்ட ஓர் இடத்தில், டெலக்ஸ், டெலிபோன், எலக்ட்ரானிக் டைப்ரட்டர், அலுவலக உதவியாளர்கள் என்று சகல வசதிகளுடனும் கூடிய சிறு சிறு கேபின்களைப் பகடி ஏதுமில்லாமல் நியாயமான வாடகைக்குக் கொடுக்க உம்பிடியார் எக்ஸிகியூடிவ் சென்டர் தயாராயிருந்தும் வியாபாரிகள் ஏன் வரவில்லை என்று யோசித்ததில் பாஸ்கருக்குக் காரணம் புலப்பட்டது.

பம்பாயிலுள்ள இது போன்ற சென்டர்களோடு ஒப்பிடுகையில் இங்கு வாடகை அதிகம். அதோடு, இந்த சென்டர் பற்றிக் கொடுக்கப்பட்ட நாளிதழ் விளம்பரங்கள் ரொம்பவும் ஆடம்பரமாக இருந்ததால், சிறு வியாபாரிகள் இது தங்களுக்குக் கட்டுப்படியாகாத இடம் என்று நினைத்து ஒதுங்கி விட்டார்கள்! பெரிய வியாபாரிகளிடம் பணப் புழக்கம் அதிகம் என்பதால், அவர்கள் இது போன்ற சென்டர்களை நாட வேண்டிய அவசியமே இல்லையல்லவா!

எனவே, பாஸ்கர் ஒரு முடிவுக்கு வந்தார். முதலில் வாடகையைக் குறைக்க வேண்டும். அடுத்ததாகத் தங்கள் சென்டர் பற்றிய விளம்பரங்கள், சிறு வியாபாரிகளை ஈர்க்கக் கூடிய மாதிரி, வரி விளம்பரப் பகுதிகளில்தான் வர வேண்டும். அதுவும் அடிக்கடி வரவேண்டும்.

''எனது முடிவை முதலாளியிடம் சொன்ன போது, என்னையே அந்த நிறுவனத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்கச் சொல்லி விட்டார். உடனே செயலில் இறங்கினேன். நான் எதிர்பார்த்தபடியே உறுப்பினர்கள் வர ஆரம்பித்தார்கள். அவர்களுடைய கணக்கு வழக்குகளைப் பார்ப்பதற்குக் கம்ப்யூட்டர் வசதிகளையும் செய்து கொடுத்தேன். பல வியாபாரிகள் வந்து வியாபாரம் செய்கிற இடத்தில் ஒருவருடைய விஷயம் மற்றவருக்குத் தெரியாமல் ரகசியமாக வைக்கப்படுமா என்கிற சந்தேகம் ஆரம்பத்தில் சிலருக்கு இருக்கத்தான் செய்தது. நிச்சயமாக முடியும் என்று அதையும் செயலில் காட்டினேன். இப்போது இங்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை நிரம்பி வழிகிறது!'' என்கிறார் பாஸ்கர்.

உம்பிடியார் நிறுவனத்திற்கே ஒரு கௌரவப் பிரச்னையாக இருந்த இந்த நிறுவனத்தை வெற்றிப் பாதையில் நடக்க வைத்த பெருமை மட்டும் போதுமா?

''இந்த சென்டரை வெற்றிகரமாக நடக்க வைப்பதோடு, நானும் எனது நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு வியாபாரம் தொடங்க ஆசைப்பட்டேன். என் தந்தையும் வியாபாரம் செய்தவர் என்பதால், நான் பள்ளிப் பருவத்திலிருந்தே அவரது வியா பாரத்திற்கு உதவியாக இருந்து, பல வியா பார விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். எனது வியாபார ஆர்வம் காரணமாகத்தான் எனது பள்ளிப் படிப்புக்குப் பிறகு, கல்லூரிக்குச் செல்லாமல், பி.காம். பட்டத்தைக் கூட அஞ்சல் வழிக் கல்வியில் பெற்றேன்.

நில், கவனி, வெற்றிகொள்!

''வியாபார ஆர்வம் இருந்தால் மட்டும் போதுமா? நாம் துவங்கும் வியாபாரம் காலத்துக்கும் தேவைக்கும் தகுந்த மாதிரி இருக்க வேண்டாமா? நண்பர்களோடு யோசித்ததில், உடனுக்குடன் தபால்களைப் பட்டுவாடா செய்யும் கொரியர் சர்வீஸ் ஆரம்பித்தால் என்ன என்று தோன்றியது. அதற்கு நாடு முழுவதும் நமக்கு 'நெட் வொர்க்' வேண்டுமே! என்ன செய்வது? யோசித்தோம்.

''ஆரம்பத்தில் சென்னை நகருக்குள் மட்டும் கொரியர் சர்வீஸை ஆரம்பித்துப் பார்க்கலாம்; இதற்கு நிறைய ஆட்களும் தேவைப்பட மாட்டார்கள் என்று முடிவு செய்து ஆரம்பித்தோம். எங்கள் நிறுவனக் கட்டடத்திலேயே உள்ள எல்.ஐ.சி. கிளையை அணுகி விவரத்தைச் சொன்னோம். அவர்களும் தங்கள் தபால்களை எங்களிடம் தரச் சம்மதித்தார்கள். அடுத்தது இந்தியன் வங்கிக் கிளை என்று பலருக்கு நாங்கள் இப்போது நம்பகமான தபால்காரர்களாகி விட்டோம்!'' என்று சந்தோஷத்தோடு கூறும் பாஸ்கரும் அவரது நண்பர்களும் இப்போது முயன்று கொண்டிருப்பது ஏற்றுமதி வியாபாரத்திற்காக.

''கம்ப்யூட்டர் படித்த நண்பர் ஜெயக்குமார், ஆரம்பத்தில் எங்கள் சென்டரில் வந்து உறுப்பினரானார். அவர் 'டேட்டா பேஸ்' செய்து கொடுப்பதற்கான வாடிக்கையாளர்கள் கிடைக்க நாங்கள் அவருக்கு உதவி செய்தோம். இப்போது அவர் ஹாங்காங் சென்று செட்டிலாகி விட்டார். நாங்கள் ஆரம்பத்தில் செய்த உதவியை மறக்காமல், இன்று எங்கள் ஏற்றுமதி வியாபாரத்திற்கு அவர்தான் அடித்தளமிட்டுக் கொண்டிருக்கிறார்!'' என்கிறார் பாஸ்கர்.

'ஆல் இண்டியா ஹேண்ட்லூம் அண்டு ஹேண்டிகிராப்ட்ஸ் போர்டு' உறுப்பினர்களில் பாஸ்கரும் ஒருவர். ரிலையன்ஸ் அம்பானியும் பாம்பே டையிங் நூஸ்லி வாடியாவும் உறுப்பினர்களாக உள்ள அந்த போர்டில் பாஸ்கரும் எப்படி உறுப்பினராக்கப்பட்டார்?

''எனக்குத் தெரிந்த முத்தையா என்ற கைவினைஞர் மிகவும் அற்புதமாகக் 'காகிதக் கூழ்' பொம்மைகள் செய்வார். அவரது திறமை உலகுக்கே தெரிய வேண்டும் என்று நான் அவரது பொம்மைகளை எடுத்துக் கொண்டு 'ஹேண்டிகிராப்ட்ஸ்' அமைச்சர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் போய்ச் சந்தித்து அந்த பொம்மைகளை விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யச்



சொல்லுவேன். வெளிநாட்டுத் தூதுவரகங்களையும் நான் விட்டு வைக்கவில்லை. எனது ஆர்வத்தைக் கண்ட அப்போதைய சந்திரசேகர் அரசுதான் என்னையும் ஓர் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டது!

''இதே மாதிரி ஒரு முறை ராஜேஷ் பைலட்டைச் சந்தித்த போது டெலிபோன் சந்தாதாரர்களுக்கிருக்கும் குறைகளை விவரமாக எடுத்துச் சொன்னேன். பிரமித்துப் போன அவர், என்னை டெலிபோன் அட்வைசரி போர்டிலும் ஓர் உறுப்பினராக்கி விட்டார்!'' என்று கூறும் பாஸ்கர், தமது முன்னேற்றத்தை மட்டுமே லட்சியமாகக் கொள்ளவில்லை. தமது நண்பர்களோடு சேர்ந்து, 'யூத் பெனிஃபேக்டர்ஸ் அசோசியேஷன்' என்ற பெயரில் ஒரு குழுவாக இயங்கி, ரத்ததான முகாம்கள், அனாதை இல்லங்களுக்கு உதவுதல் என்று சமூக சேவைகளையும் விடாமல் செய்து வருகிறார்.

– வெ. ஸ்ரீதர்

படம் : கோபிநாத்

பனிப் பாறை

9

நித்யாவும் பிரசன்னாவும் முதலில் சந்தித்ததே ஓர் இலக்கியக் கூட்டத்தில்தான். அவனுடைய படைப்புகள் சிலவற்றை அவள் படித்திருந்தாள். அவனுடைய எழுத்தின் பிரத்தியேகமான, வித்தியாசமான நடை அவளைக் கவர்ந்தது. அவன் அறிமுகம் கிடைத்த போது மிகவும் மகிழ்ந்தாள். இந்த நட்பு நீடித்தது. அவனுடைய வெளிப்படையான பேச்சு, போலித்தனமில்லாத சிநேகம், தூய்மையான பார்வை - எல்லாமே அவளைக் கவர்ந்தன. அவனைப் பற்றி அவள் மனத்தில் ஓர் உயர்ந்த அபிப்பிராயம் ஏற்பட்டது.

பழைய நினைவுகள் கலைந்து போக, சாயம் மங்கிப் பல்லிளித்துக் கொண்டிருந்த இரும்பு கேட்டின் கொக்கியை நீக்கிக் கதவைத் திறக்கையில் அது பெரிதாகக் கிரீச்சிட்டது. மூடும் போதும்தான்! தோட்டத்தைப் பார்த்தாள். செடிகளில் மலர்கள் பூத்துக் குலுங்கின. பந்தலை மூடிக் கொண்ட ஜாதிமல்லிகை, நித்யமல்லிகை மலர்கள். நாணிக் கொண்டு தலைகுனிந்த செம்பருத்தி மலர்கள் காற்றில் ஆடிக் கொண்டிருந்தன.

''யார் வேணும் அக்கா?''

வெடுக்கென்று வந்த குரலில் தலை நிமிர்ந்து பார்த்தாள் நித்யா.

நீல நிறத்தில் சீட்டிப் பாவாடை, மஞ்சள் ரவிக்கை. கைகள் நிறைய கண்ணாடி வளையல்கள். கால்களில் • வெள்ளிக் கொலுசு. இறுகப் பின்னிய இரட்டைப் பின்னல்கள். அழகான வட்டமான முகத்தில் அலைபாயும் கருமை நிறக் கண்கள். அந்தப் பத்து வயதுப் பெண் அவளைப் பார்த்து வெள்ளையாகச் சிரித்தாள்.

நித்யா சிநேகத்துடன் சிரித்து, ''மிஸ்டர் பிரசன்னா இருக்காரா?'' என்று கேட்டாள்.

''உள்ளே வாங்கோ''' - அழிக்கதவைத் திறந்து விட்டாள் அந்தச் சிறுமி.

பின்னால் சென்ற நித்யா தாழ்வாரத்தின் சுவரோரமாகச் செருப்புக்களைக் கழற்றி வைத்தாள்.

''அம்மா - நான் பாட்டுக் கிளாஸ் முடிஞ்சு வர்றப்போ இந்த அக்கா பூச் செடியெல்லாம் பார்த்துண்டு நின்னுண்டிருந்தா. சித்தப்பாவைப் பார்க்கணுமாம். சித்தப்பா இல்லைன்னு சொன்னா போயிடுவாரோன்னு பயந்துண்டு உள்ளே கூட்டிண்டு வந்தேன். சித்தப்பா இல்லையானா என்ன? நாங்கள்ளாம் மனுஷா இல்லை?''

''ஸ்... ஹரிணி! என்ன அதிகப்பிரசங்கித்தனம் இது?'' என்று கண்டித்த அந்தப் பெண்மணியைப் பார்த்துச் சிநேகமாகச் சிரித்தாள் நித்யா.

''வாங்கோ உட்காருங்கோ'' - பதிலுக்குச் சிநேகமாகச் சிரித்தாள் அவள்.

''நீங்க சித்தப்பா கூட 'வொர்க்' பண்ணறேளா?''

''இல்லைம்மா. நான் உன் சித்தப்பாவோட ஃபிரெண்டு.''

அந்தப் பெண்ணின் தாயும் நித்யாவின் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

''நான் பிரசன்னாவோட மன்னி. நீங்க எப்படி வந்தேள்? காரா? ஆட்டோவா?''



''பஸ்ஸுல வந்தேன்.''

''கிட்டக்கத்தான் இருக்கேளா?''

''இல்லை. பெஸண்ட் நகர்ல இருக்கேன். இங்கே பக்கத்துல ஒரு வேலை விஷயமா வந்தேன். சரி, உடம்பு சரியில்லைன்னு பிரசன்னாவோட கம்பெனில சொன்னாளே - பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்.''



''மழையில நனஞ்சுட்டு ரெண்டு நாளா ஜுரம்மா. இன்னமும் தலைக்கு ஜலம் விட்டுண்டாகலை. ஃபோன் வேற ரெண்டு நாளா அவுட் ஆஃப் ஆர்டர். யாரோ ஃபிரெண்டைப் போய்ப் பார்த்துட்டு வரேன்னு கிளம்பிப் போனான். நீங்க...?''

''நான் ஒரு சிவில் இன்ஜினீயர். சொந்தமாகக் கம்பெனி வெச்சிருக்கேன்.''

பிரசன்னாவின் மன்னி பிரமிப்புடன் அவளைப் பார்த்தாள். ''அம்மாடி! ஒண்டியாவா?''

நித்யா சிரித்தாள்.

''ஒண்டியா முடியுமா? கூடப் பெரியவர் ஒருத்தர் இருக்கார்.''

இதற்குள் ஹரிணி ஒரு சின்னத் தட்டில், வெல்லம் போட்டுக் கிளறிய அவலைக் கொண்டு வந்து வைத்தாள்.

''சாப்பிடுங்கோ'' - என்று பரிவுடன் கூறியவள், ''காப்பி குடிப்பேளா, இல்லை போர்ன்விடா கலக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

''காப்பியே போதும்.''

காப்பியைக் கலந்து கொண்டு வந்த பிரசன்னாவின் மன்னி அவளைப் பற்றி நிறையவே பேசினாள். அவள் இந்த வீட்டுக்குத் திருமணமாகி வந்த போது பிரசன்னா ஏழு வயதுச் சிறுவனாகவிருந்ததில் தொடங்கி இன்றைய வரையில் உள்ள சமாசாரங்கள் எல்லாவற்றையும் அலசினாள். அவனுக்கு அண்ணாவிடமும், தன்னிடமும் இருக்கும் பிரியத்தைப் பற்றி, அவனுடைய எழுத்தைப் பற்றிப் பேசினாள். நித்யா ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான் அந்தக் குரல் கேட்டது.

''ராஜி... ராஜி...''

நித்யா திடுக்கிட்டுத் திரும்பி, குரல் வந்த திசையில் பார்த்தாள். அடுத்த அறையில் சுவரோரமாகப் போடப்பட்டிருந்த கட்டில் ஒன்றில் வயதான மூதாட்டி உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

இளைத்த, குச்சி போன்ற உருவம். தலை தும்பைப் பூவாகப் பூத்திருந்தது. கண்கள் இடுங்கியிருந்தன. முகத்திலிருந்த கோடுகளும் சுருக்கங்களும் அவள் வயது 'யுகங்களுக்கப்பாலிருக்கும்' என்பதை உணர்த்துவதைப் போலிருந்தன. அவளைப் பார்க்கவே பரிதாபமாகவிருந்தது.

''எங்க மாமியார் , பிரசன்னாவோட அம்மா'' என்றாள் மன்னி. நித்யா

ஆபஸ்தம்பன்

அதிர்ந்து போனாள். ''எனக்குக் கல்யாணமாகி நான் இங்கே வர்றதுக்கு முன்னால பிரசன்னாவுக்குக் கீழே ஒரு பெண் குழந்தை பிறந்து செத்துப் போயிடுத்து. அதுலேருந்து சித்தப்பிரமை. ஆனா - பயப்படும்படியா ஒண்ணும் நடந்துக்க மாட்டார். வேளா வேளைக்குச் சாப்பிடுவார் - குழந்தைகள் சாப்பிடறாப்போல. ஹூம்... பிரசன்னாவுக்கு மனசில ரொம்ப வருத்தம்தான்.''

ராஜி எழுந்து அடுத்த அறைக்குச் சென்றாள். நித்யாவும் அவள் பின்னால் போனாள்.

''என்னம்மா? காப்பி கலக்கட்டுமா? இல்லை சாப்பாடே சாப்பிடறேளா?'' அவள் குரலில்தான் என்ன பரிவு!

பிரசன்னாவின் தாயிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை. போர்வையை விலக்கி, எதையோ எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

நித்யா வெறித்தாள்.

அது - மரத்திலாலான ஒரு கட்டை.

''ராஜி... கொழந்தை கமலி அழறது காதில் விழல்லை? கோரணத்தையும் பாலையும் எடுத்திண்டு வா. வயத்தக் கியத்த வலிக்கிறதோ என்னவோ! சித்த வசம்பையும் இழைச்சிண்டு வா.''

''நீங்க ஏம்மா சிரமப்படணும்? கமலியை என்கிட்டே தாங்கோ. நானே பாலைப் புகட்டி எடுத்துண்டு வர்றேனே!''

''இந்தா வாங்கிக்கோ. பாலை ஜாக்கிரதையாக் குடு. மூக்குல கீக்குல ஏத்திப்பிடாதே.''

''இல்லையம்மா'' என்றவாறே அதை வாங்கிக் கொண்டாள். இரண்டு மூன்று நிமிடங்களுக்குப் பிறகு அதை ஜாக்கிரதையாக மூதாட்டியின் அருகே கிடத்திவிட்டுப் போர்வையால் போர்த்தி விட்டாள்.

''குழந்தை தூங்கிட்டாள் அம்மா.''

கிழவி கண்களைத் திறந்து பார்த்தாள்.

''சரி. நீ போ. அப்புறமா ஒட்டுச் சட்டியில எண்ணெய் காய்ச்சி வை. கொழந்தைக்கு இன்னைக்குத் தலைக்கு ஊத்தணும். வளரவே இல்லை பாரு!''

அதற்கு மேல் நித்யாவால் அங்கு நிற்க முடியவில்லை. அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

மனத்தில் பாறையாக ஏதோ ஒன்று அழுத்தியது. ஏழு வயதிலிருந்து பிரசன்னாவால் எப்படி இதைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடிந்திருக்கிறது?

அந்த மன்னி!

ஒரு மனுஷிக்கு இத்தனை பொறுமையா? இவள் மனுஷியா இல்லை தெய்வமா?

பிரசன்னா எழுதிய 'பாலைவனங்களுக் கப்பால்' என்ற நாவல் நினைவில் வந்தது. அதில் வரும் கதாநாயகனின் மன்னியும் இவளைப் போலத்தான். பிரச்சன்னாவுக்கு அவன் மன்னி மேல் அதீதமான பிரியம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. அவன் மனத்தில் இந்த மன்னிக்கு மிக உயர்ந்த ஸ்தானம் இருக்க வேண்டும்! அவன் திருமணமே செய்து கொள்ளாமல் விருப்பதற்கு இதுதான் காரணமோ?

மன்னியைப் போன்ற பெண் ஒருத்தியைத் தேடுகிறானோ. மன்னிக்கு இனிமேல் விடுதலை அளிக்க வேண்டும் என்று, தன் தாயை ஒரு பிரச்னையாகக் கருதாமல், பரிவுடன் பார்த்துக் கொள்ளும் மனப்பான்மையுள்ள ஒரு பெண்ணைத் தேடுகிறானோ?

வாசல் கதவைத் திறந்து கொண்டு வீட்டின் உள்ளே நுழைகையில் தொலைபேசி ஒலித்தது. ஒருவித எதிர்பார்ப்புடன் கையில் எடுத்தாள்.

பிரசன்னா!

''என்ன நித்யா? ஆத்துக்கு வந்திருந்தியாமே? உன்னைப் பார்க்க முடியவில்லை! ஐ ஆம் ஸோ சாரி.''

இன்று அவன் குரலில் ஏதோ ஒரு புதுமை இருந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. வயிற்றினுள் இன்பமான உணர்ச்சி எழுந்தது. மனசு வெடிக்கும் போல தோன்றியது.

மெல்லிய குரலில் கூறினாள்.

''ஐ ஆம் நாட்.''

''ஏன் அப்படிச் சொல்றே நித்யா?''

''நீங்க அங்கே இல்லாததனால ஒரு உயர்ந்த உள்ளத்தைச் சந்திக்கப் பேச முடிந்தது. வாட் எ கிரேட் ஸோல்!''

அவன் ஒன்றும் பேசவில்லை. அவளே தொடர்ந்தாள், ''உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கோங்கோ.''

''யெஸ்... குட் நைட் நித்யா.''

அவன் தொலைபேசியின் இணைப்பைத் துண்டித்து முடித்த பிறகும் வெகு நேரம் வரையில் அதைக் காதில் வைத்துக் கொண்டு நின்றாள்.

(தொடரும்)

''வரவர எதுக்குத்தான் பாதுகாப்பு கேக்கறதுன்னே விவஸ்தை இல்லாமப் போயிடுச்சு.''

''ஏன், என்னாச்சு?''

''வீட்டு மேலே பருந்து பறந்துச்சாம். கோழிக்குஞ்சுகளுக்குப் பாதுகாப்பு வேணுமாம். பருந்து பறக்காத பிரதேசமா அறிவிக்கணுமாம்!''

- ஆர். விஜயகுமார்



தமிழினியன்

ஜி.டி. எக்ஸ்பிரஸ் புறப்பட இன்னும் ஒன்றரை மணி இருந்தது.

இந்த அவகாசம் போதும்.

கிளோக் ரூமில் லக்கேஜை தள்ளிவான். ஓடினான் கன்னாட் பிளேசுக்கு.

ராஜஸ்தான் எம்போரியம்.

கண்ணாடி மணியும், வண்ணக் கற்களும் பதித்த கைப்பை அழகாய் இருந்தது. 'இது ஜெயந்திக்குப் பிடிக்குமோ... என்னவோ?'

எம்ப்ராய்டரி டிசைன் செய்யப்பட்ட வளையல்... 'ஒப்புக் கொள்வாளா...?'

புடைவை பார்த்தான்.

வழுவழுக்கும் பட்டுத் துணிதான் வித்தியாசமாக இருந்ததே தவிர, 'ஷேட்' எதுவும் ஜெயந்திக்குப் பொருந்துவதாக இல்லை.

நேரம் ஆயிற்று.

ஒன்றும் வாங்காமல் புதுடில்லி ரயில் நிலையம் திரும்பினான்.

'கிராண்ட் டிரங்' இழுத்துக் கொண்டு ஓடியது.

கம்பெனியைச் சார்ந்த சைட்டுக்கு டியூட்டியில் வந்திருந்தான், நந்தகோபால். ஒரு மாத வேலை. முடிந்தது. இத்தனை நாள். இத்தனை தூரம்.

குடும்பத்தைப் பிரிந்து வந்தவன் வெறும் கையோடு போகலாமா? விக்னேஷுக்கு ஜீன்ஸ் செட். டீலக்ஸ் கான்வாஸ் ஷூ.

திவ்யாவுக்குச் சூரிதார், கான்பூர் சப்பல். காஷ்மீர் போர்வை, அப்பாவுக்கு. பனாரஸ், அம்மாவுக்கு. ஆனால், ஜெயந்திக்கு...

நஹி!

இள மனைவியை ஏதேனும் புதுமையாய் வாங்கி அசத்த வேண்டும் என்று நேற்றும் இன்றும் டில்லி முழுக்க அலசி...


கடைசியில் ஒன்றும் கடைத்தேறவில்லையே.

ஜான்சி, போபால், நாக்பூர்... இப்படி ரயில் நின்ற நிலையங்களில் எல்லாம் அங்கிருந்த ஷோகேஸ்களை ஆராய்ந்தான்.

'ஜெயந்தியின் மகிழ்ச்சிக்கு எதை வாங்கலாம்?'

காலை ஏழு மணி. சென்ட்ரல். மாலை மூணேகாலுக்குத்தான் பல்லவன். பாண்டிபஜார் ஓடினான்.





"அந்தப் பேச்சாளர், தலைவரைப் பற்றிப் பேச ஆரம்பிக்கும் போது, 'டாக்டர்... டாக்டர்... டாக்டர்... அவர்களேன்னு' சொன்னாரே அவருக்குத் திக்குவாயா?"

"ஊஹூம். தலைவருக்கு மூணு டாக்டர் பட்டம் கிடைச்சிருக்காம்; ஒண்ணு குறைஞ்சாலும் கோவிச்சுக்குவாராம்!"


– சீர்காழி வி. ரேவதி.

35 – ஆம் பக்க விடைகள் :


1. 9, 1, (எப்படி என்கிறீர்களா, எண்களை எழுத்தில் எழுதி, அகர வரிசைப்படுத்துங்கள்)

2. முழு டின்கள் ஏழில், ஆறு டின்களை ஆளுக்கு இரண்டாய் கொடுத்து விட்டு, ஏழாவது டின்னை இரண்டு காலி டின்களில் பாதி, பாதியாய் நிரப்புங்கள். இப்போது, ஏற்கெனவே உள்ள பாதி நிரம்பிய டின்கள் ஏழுடன் இந்த இரண்டும் சேர, பாதி நிரம்பிய டின்கள் ஒன்பது. இவற்றை ஆளுக்கு மூன்றாய்ப் பிரித்துக் கொடுங்கள். இப்போது, பழைய காலி டின்கள் ஏழில், பாதி நிரப்புவதற்காக எடுத்துக் கொண்ட இரண்டு போக, மீதி ஐந்து. இதனுடன், முதலில் காலி செய்த முழு டின் ஒன்றும் சேர, மொத்தம் ஆறு காலி டின்கள். இந்த ஆறு, ஆளுக்கு இரண்டாய்த் தரப்பட, எல்லோருக்கும் சமமாய் மொத்த 21 டின்கள். தலா ஏழு விதம் பிரிக்கப்படும்.

3. இரண்டு ஒன்பதரை அடி பலகைகளையும் இப்படி குறுக்கு, நெடுக்காகப் போட்டு, அகழியைக் கடக்கலாம்.



4. கேக்கின் மேற்பரப்பில், குறுக்கும் நெடுக்குமாய் இரண்டு வெட்டுகள். மூன்றாவது வெட்டை, கேக்கின் பாதி உயரத்தில் போட, கேக் எட்டு துண்டுகளாகி விடும்.



5. 35 முக்கோணங்கள்.

பட்டுப் புடைவை.

தேவி புளூ உடம்பும், மருனில் இள மஞ்சள் இழைந்த பார்டருமாய் அம்சமாய் இருந்தது.

'அடச்சீ... எப்பப் பார் புடைவை தானா...? உலகத்தில் வேறு பொருளா இல்லை!'

புடைவை கைவிட்டுப் போயிற்று.

கடைக்கு வந்த பெண் ஒருத்தி கார்மேகம் போல் கண்ணாடி அணிந்திருந்தாள்.

ஜெயந்திக்கும் அதுபோல் வாங்கினால் என்ன.

மறுகணமே கண்ணாடி கடைக்குள் நுழைந்தான்.

அவன் ஆசைப்பட்டது போலவே கண்ணாடி கிடைத்தது. விலை 325 ரூபாய்!

'நான் என்ன அடிக்கடி வெளியில் போகிறவளா. சாயந்தரமானால் கோயிலுக்குப் போவேன். அதுக்குக் கண்ணாடி எதுக்கு..?' என்பாளோ.

"வேண்டாம், சார்."

ஊர் வந்து சேர்ந்தான். அவரவர்களுக்கென வாங்கியதை ஜெயந்தியின் கையில் கொடுத்தே, விநியோகம் செய்தான்.

ச்ச்... ஏதோ ஒண்ணு.. ஜெயந்திக்கும் வாங்கி வந்திருக்கலாம். புதுமை... புதுமைன்னு கடைசியில் வெறுமை ஆகிடுச்சு.

"தப்பு பண்ணிட்டேன், ஜெயந்தி" முகம் கவிந்து முகவாயில் கண்டிக் கொண்டான், நந்தகோபால்.

"என்ன?" விழித்தாள், அவள்.

புதுடில்லியிலிருந்து சென்னை.... சென்னையிலிருந்து திருச்சி வரை அவளுக்காக அலைந்ததை விவரித்தான், அவன்.

"அத்தனை நேரமும் என்னைப் பற்றிய நினைவே உங்களுக்குப் பிரதானமாய் இருந்திருக்கிறது. எனக்கு அதுவே பெரிய திருப்திங்க... நீங்க எதுவும் வாங்காததும் நல்லதாப் போச்சு. எனக்குன்னு வைச்சிருந்த தொகையைக் குடுங்க - குழந்தைங்க டிக்ஷனரி வேணும்னு ஒரு மாசமா கேட்டுக்கிட்டிருக்காங்க. அதை வாங்கிடலாம்...

அவள் தெளிவாய்ப் பேசினாள்.

அவன் புன்னகையுடன் அவளை அணைத்தான்.

ஏன் கடவுளுக்கு நைவேத்தியம் காட்டி சாப்பிட வேண்டும்?



- ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஜீவனுண்டு. அதையறுத்து சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது. அவைகளை கடவுளுக்கு ஆராதனைசெய்து சாப்பிட்டால் அந்த தோஷம் நிவாரணையாகும்.
- யஞ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், சந்தோஷமடைந்து இஷ்ட்டமான போகங்களைக் கொடுப்பார்கள். ஆதலால் நீங்கள் சாப்பிடுவதற்குமுன் அன்னமும் பதார்த்தங்களும் கடவுளுக்கு காட்டி ஆராதனை செய்து அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும்.
- இந்திராதி தேவதைகளும் ஜனங்களுக்கு ஜீவனார்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்கு மழையைப் பெய்விக்கப் பகவானால் நியகிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அவர்களால் விளைவித்துக் கொடுக்கப்பட்ட பதார்த்தங்கவை மறுபடியும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்வதனால் அவர்களை சந்தோஷித்து மறுபடியும் பிரதி வருஷங்களிலும் மழையை விருத்து செய்து கொண்டே வருவார்கள். அதனால் ஜனங்கள் க்ஷேமமாய் விருத்தியடைவார்கள்.

ஆதாரம்: ஜீவப்ரஹ்மைத்ய வேதாந்த ரஹஸ்யம்

ஆகையால் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால் அப்பம் முதலியவை வழங்கப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு காந்தி நகர், அடையாறு

சென்னை-20 போன் : 412557

Ad-Ventures



இதுவரை பூட்டி வைத்திருந்த வானத்தைத் தனியார் விமான கம்பெனிகளுக்குத் திறந்து விட இந்திய அரசு சமீபத்தில் எடுத்த முடிவு, பல பயணிகள் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறது. இந்த 'ஓபன் ஸ்கை' கொள்கையினால், அரசுக்குச் சொந்தமான இந்தியன் ஏர்லைன்ஸை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலை அடியோடு மாறி விட்டது! இது, வர்த்தகத் துறைக்கும் ஒரு வரப்பிரசாதம் என்பதோடு வேலை வாய்ப்பு விஷயத்திலும் பலருக்கு வாயிலைத் திறந்து விட்டிருக்கிறது.

''வெளிநாடுகளில் எல்லாம் விமான கம்பெனிகள் நிறையவே உண்டு. அதனால் நிலவும் போட்டா போட்டியில், கனிவான சேவை, தனிநபர் கவனிப்பு என்பதெல்லாம் சர்வ சாதாரணம். நிறையப் பணம் கொடுத்து டிக்கட் வாங்கும் பயணிகளுக்கு, இவ்வளவு செலவு செய்தாலும் மரியாதையாக நடந்து கொள்கிறார்களே என்று ஒரு திருப்தி உண்டாகி விடும். இங்கேயும் அந்த நிலை உருவாகும் அறிகுறிகள் தெரிகின்றன'' என்கிறார் அயல்நாடுகளிலும் இந்தியாவிலும் அடிக்கடி பயணம் செய்யும் தனியார் நிறுவன அதிகாரி கோபால்.

நடுத்தர வர்க்கத்தினரான நமக்கும் மறைமுகமாக இந்த விமான சர்வீசுகள் உதவுகின்றன. தபால்கள் எடுத்துச் செல்லவும், கூரியர் சர்வீஸ் சேவைக்கும் விமானங்கள் அவசியம் தேவை. இவை தவிர, அத்தியாவசிய சரக்குப் போக்குவரத்துக்கும், சுற்றுலா வளர்ச்சிக்கும் விமான சேவை பெரிதும் உதவ முடியும்.

அயல்நாட்டில் வசிக்கும் வசதிபடைத்த சில இந்தியர்கள், அதிக முதலீடு தேவைப்படும் இத் துறையில் அக்கறையோடு நுழைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது கோபாலுடன் ஒத்துப் போகத் தோன்றுகிறது.

''எங்கள் நிறுவனத்தின் சேர்மன் பஹ்ரெயினில் இருக்கும் ஏ.டபிள்யூ. நசீர். அவருடைய சகோதரர் தயியுதீன் நிர்வாக இயக்குநராக இந்தியாவில் இருக்கிறார். இவர்களுடைய மூன்று சகோதரர்களும் நிதி மற்றும் செயல்பாடு பொறுப்புக்களை மேற்கொண்டிருக்கிறார்கள்!'' என்கிறார், சையது இக்பால் - ஈஸ்ட் வெஸ்ட் ஏர்லைன்ஸ் சென்னைக் கிளையின் அதிகாரி.

* நரேஷ் கோயல்



விண்ணைச் சாடும் தனியார் விமானங்கள்

எட்டு போயிங் விமானங்களும், இரண்டு ஃபாக்கர் ஃபிரண்ட்ஷிப் விமானங்களுமாக, இன்றைக்கு வளர்ந்து விட்ட ஈஸ்ட்வெஸ்ட், இன்னும் மூன்று 737-300 போயிங் விமானங்களை இந்த வருடமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.


''எண்பத்தேழே ஊழியர்களுடன் தொடங்கிய எங்கள் நிறுவனத்தில் இன்று இரண்டாயிரம் பேருக்கு மேல் வேலை பார்க்கிறார்கள். மிகச் சிறந்த விமானப் படை பைலட்டுகளும், அரசியலில் மிக உயர்ந்த பதவிகள் வகித்தவர்களுக்குச் சேவை செய்த வி.வி.ஐ.பி. பைலட்டுகளும் தவிர, இந்தியன் ஏர்லைன்ஸ் பைலட்டுகள் சிலரும் எங்களிடம் பணியாற்றுகிறார்கள். அந்தச் சேவைக்கு ஏற்ற சம்பளம் கொடுக்கிறோம்'' என்றார் மானேஜர் ஃபைஸல்.

''இந்தியன் ஏர்லைன்ஸ் பைலட்டுகளை இழுத்துக் கொள்ளுகிறீர்கள் என்று ஒரு குற்றச்சாட்டு சொல்லுகிறார்களே...?''

''நாங்கள் ஒன்றும் வலை வீசிப் பிடிப்பதில்லை. மொத்தமாக, இந்தத் துறையில் வழங்கப்படும் தொகையை, கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகளோடு வழங்க முன்வந்தோம். சேருவதும் சேராததும், தனிப்பட்ட பைலட்டின் முடிவுக்கும் விருப்பத்துக்கும் உட்பட்டது!''

அயல்நாட்டு விமான கம்பெனிகள் எதுவும் இதில் முதலீடு செய்யவில்லை என்கிறார் ஃபைஸல். ''அது மட்டுமல்ல, எங்கள் விமானங்களைப் பழுது பார்த்து, பறக்கும் நிலையில் வைக்க, பெங்களூரில் உள்ள இந்துஸ்தான் ஏர்கிராஃப்ட் (HAL) நிறுவனத்திடம்தான் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். அதனால் விமானங்களை வெளிநாட்டிலிருந்து வாடகைக்கு எடுத்துக் கொண்டாலும் பராமரிப்புச் செலவுக்காக ஒரு பைசா கூட அந்நியச் செலாவணி கொடுப்பதில்லை.''


● மாயா நரசிம்மன்


● ஈஸ்ட்வெஸ்ட் அலுவலகம்

விமானங்களை அயல்நாடுகளிலிருந்து குத்தகைக்கு எடுக்கும் முறைகளில், ஒன்றை ட்ரை-லீஸ் என்றும், இன்னொன்றை வெட்-லீஸ் என்றும் குறிப்பிடுகிறார்கள். ட்ரை-லீஸ் முறையில், அயல்நாட்டு விமானத்தோடு, அயல்நாட்டு விமானியையும் ஏற்க வேண்டும். வெட்-லீஸ் முறையில் அந்த நிர்ப்பந்தம் கிடையாது.

விமான நிலையத்தில், புறப்படும் முன் நடைபெறும் சடங்குகள் எல்லாம் கம்ப்யூட்டர் கட்டுப்பாட்டில் தாமதமில்லாமல் முடித்துவிட, விரைவிலேயே முயற்சிகள் மேற்கொள்ளவிருக்கிறார்கள். டிக்கெட்

● பைஸல்




● ராமகிருஷ்ணன்

டைக் காண்பித்த உடனே, போர்டிங் கார்டு அச்சிட்டுக் கைக்கு வந்து விடும்!

சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகத்தின் உறுப்பினராக இருப்பதாலும், அயல்நாட்டு விமான கம்பெனிகள் பலவற்றுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருப்பதாலும், அயல்நாட்டுப் பயணத்துக்கும், உள்நாட்டுப் பயணத்துக்கும் அதிக சிரமமின்றி இணைப்புப் பயணச் சீட்டுக்களை இவர்களால் ஏற்பாடு செய்ய முடிகிறது.

''முதலில் ஈஸ்ட் வெஸ்ட் டிராவல் ஏஜென்சிதான் ஆரம்பித்தோம். அதில் பெற்ற அநுபவம், இந்திய அரசின் புதிய தாராளக் கொள்கை அறிவிக்கப்பட்டவுடன், நாமே விமான சர்வீசைத் துவக்கினால் என்ன என்ற ஊக்கத்தைக் கொடுத்தது!'' என்கிறார் சையது இக்பால்.

டிசம்பர் - ஜனவரி மாதங்களில் எதிர்பாராத காரணங்களால் நிகழ்ந்த கால தாமதம் தவிர, வேறு பெரிய குறைகள் எதுவும் பயணிகள் தெரிவிக்கவில்லை என்கிறார் ஃபைசல்.

ஐந்து நட்சத்திர ஓட்டலிலிருந்து வரவழைக்கப்படும் ருசிகரமான உணவு தனியார் விமானப் பயணத்தின் போது வழங்கப்படுகிறது. ''உலகின் தலைசிறந்த விமானக் கம்பெனிகளால் வழங்கப்படும் உணவின் தரத்துக்கு அது இருக்கும். மதுபானம் வழங்குவதில்லை. அதிகபட்சம் இரண்டரை மணி நேரமே பயணம் இருக்கையில், மதுபானம் அருந்தி மயங்கிக் கிடப்பானேன்? அதே போல விமானப் பயணம் முழுக்க புகைபிடிக்கவும் அநுமதிப்பதில்லை!'' என்கிறார் ஃபைசல். மிகவும் துணிச்சலான முடிவுதான். வேறு தனியார் விமான கம்பெனிகள் அந்தச் 'சௌகரியங்களை' அளிக்கும் போது இப்படி வேறுபட்டு நின்று வெற்றியும் பெறுவது பெரிய காரியம்தானே!

''அயல்நாட்டு விமான நிலையங்களில் பணியாற்றிய அநுபவம் எங்களுக்கு நிறைய உண்டு. அதனால் சர்வதேசத் தரத்துக்கு ஏற்ற சேவையை எங்களால் வழங்க முடியும்!'' என்கிறார் ஜெட் ஏர்வேஸ் சென்னை பிராந்திய அதிகாரி ராமகிருஷ்ணன். இந் நிறுவன சேர்மன் நரேஷ் கோயல் ஒரு NRI.

ஹாங்காங் நிறுவனம் ஒன்றிலிருந்து குத்தகைக்குப் பெறப்பட்ட நான்கு போயிங் விமானங்களுடன், இந்திய வானில் பறக்கத் தொடங்கியிருக்கும் புதிய அமைப்பு ஜெட் ஏர்வேஸ்.

''இந்த ரக 737-300 விமானங்கள் அதிநவீன, புதிய தலைமுறை விமானங்கள். எரிபொருள் சிக்கனம், 737-200 ரக விமானங்களை விடக் குறைவான சப்தம் என்று இதன் பிளஸ் பாயின்ட்டுகள் நிறையவே இருக்கின்றன. பழைய விமானங்களைப் போல, பராமரிப்புக்காக அதிக நேரம் தரையிலேயே இருக்க வேண்டிய அவசியம் இல்லாதவை. அதனாலேயே பறக்கும் நேரம் அதிகபட்சமாகக் கிடைக்கிறது!'' என்கிறார் ராமகிருஷ்ணன்.

இந்த ஆண்டில் இன்னும் எட்டு போயிங் விமானங்களை வாங்க ஆர்டர் செய்திருக்கிறது ஜெட் ஏர்வேஸ்.

''இப்படி தனியார் விமான சர்வீசுகள் அங்கங்கே தொடங்கப்பட்டால், அவை தொடர்ந்து நஷ்டமின்றிச் செயல்பட சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்திருக்கிறீர்களா?''

''விமானப் பயணிகளின் எண்ணிக்கை, தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எங்கள் கணிப்புப்படி, நம் நாட்டில் 23 மிலியன் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டி உள்ளது. தேசிய நிறுவனத்தின் மூலம் 9 மிலியன் பயணிகளே பிரயாணம் செய்ய முடிகிறது. எனவே, இரண்டுக்கும் இடையேயான தேவையை, எங்களைப் போன்ற தனியார் விமான சர்வீசுகள் பூர்த்தி செய்ய முடியும்!'' என்கிறார் ராமகிருஷ்ணன்.

தொழில்நுட்பம், நிர்வாகம் என்று விமானப் போக்குவரத்துத் துறையில் பல வருடங்களாக அனுபவம் பெற்ற அதிகாரிகள் இவர்களிடம் பணியாற்றுகிறார்கள். ''பயணிகள் பாதுகாப்புக்கு நாங்கள் முதலிடம் தருகிறோம்!'' என்கிறார் இந்த அதிகாரி.

''அப்படியிருந்தும் கூட, சமீபத்தில் உங்கள் விமானம் ஒன்று பம்பாயிலிருந்து கோவை வந்த போது, பீளமேடு சிவில் விமான தளத்தில் இறங்காமல், சூலூரில் தரையிறங்கியதற்கு என்ன காரணம்?''

''கன்ட்ரோல் டவரிலுள்ளவர்கள்தான் தரையிறங்க வழிகாட்டுகிறார்கள். அதனால் முழுக் குற்றத்தையும் விமானி மீது சுமத்துவது நியாயமல்ல. மேலும், ஒரே திசையில் அமைந்திருக்கும் இரண்டு வெவ்வேறு இறங்கு-பாதைகளில், தவறாக ஏதாவது ஒன்றில் தரையிறங்குவது இது முதல் தடவை அல்ல. நம் இந்திய விமானிகளே கூட பம்பாயிலும் - ஏன், கோவையிலும் கூட - இத் தவறைச் செய்திருக்கிறார்கள்.

''அரசியலிலிருந்து விலகி சினிமா தயாரிக்கப் போறேன். படத்துக்குப் பேர் சொல்லுங்க!''

'' 'கட்-அவுட் கனவுகள்'னு வெச்சுடுவோம்!''

- என். முருகேஷ்



நான் இதை நியாயப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை... ஆனாலும், அந்தச் சிறிய ஓடு பாதையில் மிகப் பத்திரமாக இறங்கி, பின்னர் புறப்பட்டுச் சரியான தளத்தில் ஒழுங்காகத் தரையிறங்கினார் என்பதையும் கவனியுங்கள்!''

94 எகானமி வகுப்பு இருக்கைகளும், 20 பிஸினஸ் க்ளாஸ் இருக்கைகளும் ஜெட் ஏர்வேஸ் விமானங்களில் இருக்கின்றன. வசதியான பெரிய இருக்கைகள். காலை, உடம்பைக் குறுக்கிக் கொண்டு உட்கார அவசியமில்லாமல்!'' என்கிறார் ராம கிருஷ்ணன்.

ஜெட் ஏர்வேஸ் அலுவலகப் பணியாளர்கள் (அட்டைப்படம்) எல்லோருமே International Air Transport Association இன் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள். இவர்கள் 'பிரச்னை என்ற வார்த்தைக்கே இடம் அளிக்கக் கூடாது; எந்த சந்தர்ப்ப சூழலையும் சமாளிக்கத் தயாராய் இருக்க வேண்டும்' என்பதில் உறுதியாய் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் அரசுத் துறைக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம் காண முடியும்?

'**ஸி**டி லிங்க்' இந்தியாவின் கிழக்குப் பகுதி விமான சேவையில் புதிதாகப் பிரவேசித்திருக்கிறது. டில்லியிலிருந்து கல்கத்தா சென்ற இதன் முதல் பயணத்தை, கல்கத்தா விமான தளத்தில் ஆர்ப்பாட்டங்கள் செய்து, தனியார் விமான சர்வீசுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பி, கசப்பான வரவேற்பு நிகழ்ச்சியாகச் செய்தார்கள். ஆனாலும், பிறகு எதிர்ப்புக் குறைந்து ஸிடி லிங்க் சேவையைத் தொடர்கிறது.

புகழ்பெற்ற ஜெர்மன் விமான நிறுவனமான லுஃப்தான்ஸாவுடன் இணைந்து, எஸ்.கே. மோடி எனும் இந்தியத் தொழிலதிபர் 'மோடி லுஃப்த்' விமான சர்வீசைத் தொடங்கியிருக்கிறார்.

பர்வேஸ் தாமனியா என்னும் இளம் நிர்வாகி, பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்தின் தொழில்நுட்ப, பயிற்சி ஒப்பந்தத்துடன் 'தாமனியா ஏர்வேஸ்' தொடங்கியிருக்கிறார்.

எத்தனை தனியார் விமான நிறுவனங்கள் வந்தால் நமக்கென்ன; அதெல்லாம் பெரிய இடத்துச் சமாசாரம் என்று நடுத்தர வர்க்கத்தினரான நாம் அலட்சியமாய் இருந்து விட முடியாது. நமக்கும் மறைமுகமாக இந்த விமான சர்வீசுகள் உதவுகின்றன.

தபால்கள் எடுத்துச் செல்லவும், கூரியர் சர்வீஸ் சேவைக்கும் விமானங்கள் அவசியம் தேவை. இவை தவிர, அத்தியாவசிய சரக்குப் போக்குவரத்துக்கும், வெகு விரைவில் வாடி அல்லது அழுகிப் போகும் பூக்கள், பழ வகைகள் விரைவிலேயே விற்பனை இடத்தைச் சென்றடையவும் விமானங்கள்தாம் பெரும்பாலும் பயன்படுகின்றன. (காண்க, இவ்விதழின் மையப் பக்கக் கட்டுரை) சுற்றுலா வளர்ச்சிக்கும், அதன்



''அந்த போலீஸ்காரருக்குக் குழந்தை மாதிரி மனசுன்னு சொல்றியே... எப்படி?''
''மாமூல் தரலைன்னா 'ஓ'ன்னு அழுதுடுவார்!''
- ஆர். சி. மதிராஜ்

மூலம் பெறும் அந்நியச் செலாவணிக்கும் விமான சேவை பெரிதும் உதவ முடியும்.

மோசமான பயண அனுபவங்களால் பாதிக்கப்பட்ட பயணிகள் ஒன்று சேர்ந்து, விமானப் பயணிகள் சங்கம் துவக்கியது சென்னையில்தான். போட்டி போட ஆள் இல்லாமல் இருந்த போது, சேவையின் தரம் மோசமாக இருந்தது. விமானப் போக்குவரத்துத் துறையினர் ஒவ்வொரு காரணம் சொல்லி, ஒவ்வொரு பகுதியாக வேலை நிறுத்தம் செய்து, பயணிகளை வாட்டி வதைத்தார்கள். வர்த்தகம் பாதிக்கப் பட்டது; பொருளாதார இழப்புக்கள் கோடிக்கணக்கில்!

''தனியார் துறை விமான சர்வீசுகளில் குறை என்று பார்த்தால், தவிர்க்க முடியாத சில வேளைகளில் ஏற்படும் தாமதத்தை மட்டுமே குறிப்பிடலாம். அதிலும் எரிச்சலூட்டக்கூடிய அளவுக்கு அவை இருப்பதில்லை. தாமதத்துக்கு மெய்யாகவே வருந்தி, பயணிகளைக் கூடிய மட்டும் மகிழ்ச்சியான மனநிலையிலேயே வைத்திருக்கத் தனியார் துறையினர் ஆர்வம் காட்டுகிறார்கள்'' என்கிறார் மாயா நரசிம்மன். இவர், விமானப் பயணிகள் சங்கத்தின் நிர்வாக இயக்குநர்.

''விமான நிலையங்களில் இவர்களுக்குப் போதுமான அளவுக்கு கவுண்ட்டர் வசதிகள் இருக்கவில்லை. அப்போதைய அமைச்சர் மாதவராவ் சிந்தியா தலையிட்டினால் அந்தக் குறை அகன்றது.

''இந்தியன் ஏர்லைன்ஸ் கட்டணத்தை விடக் குறைவாக யாரும் வைக்கக் கூடாது என்ற சட்டம் இருந்தது. அதைக் கூட இப்போது ரத்து செய்து விட்டதாக அறிகிறேன்.

''சகட்டு மேனிக்குத் தனியார் விமானப் போக்குவரத்துக்கு அனுமதி கொடுக்காமல், பாதுகாப்புக்கும், பயணிகள் சௌகரியத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பட்சத்தில் இப்போதுள்ள புதிய விமான நிறுவனங்களின் சேவையை நாங்கள் மனதார வரவேற்கிறோம்!'' என்கிறார் மாயா.

பேட்டி, கட்டுரை : **சாருகேசி**
அட்டை வண்ணப்படம், படங்கள் : **கோபிநாத்**

ரஜினி பெயரில் புதிய கட்சி தொடங்கப்பட்டுள்ளதே?



* புதிய கட்சி?

● சி. சீனிவாசன், திருத்துறைப்பூண்டி.

? ஜெயலலிதாவின் வாரிசாகிற தகுதி அ.இ.அ.தி.மு.க வில் யாரிடம் உள்ளது?

! ஜெவின் செல்வத்துக்கா அல்லது கட்சிப் பணிக்கா என்பதை நீங்கள் குறிப்பிட வில்லை. ஜெவின் செல்வத்தைப் பொறுத்த மட்டில் அவர் யாருக்கு உயில் எழுதி வைக்கிறாரோ அவருக்குப் போய்ச் சேரும். கட்சியிலோ அவர் தமக்குப் பின் யார் என்று திட்டமிட்டுச் செயலாற்றவில்லை. அத னால் கட்சியையும் அதன் சொத்துக்களையும் அடைய அடிதடி சண்டை நடக்கும். ஜெ இல்லாத கட்சியை மக்கள் மதிக்க மாட்டார்கள். அது ஒன்றுமில்லாமல் போய் விடும் - நாளடைவில்.

● என். ஜவஹர்லால், மதுரை. ❑

? அரசியல்வாதிகள் பலர் எவ்வளவு கொள்ளை அடித்தாலும் டாக்டர் பட்டம் கொடுக்க முன்வரும் பல்கலைக் கழகங்கள், ஹர்ஷத் மேத்தாவுக்கு ஏன் டாக்டர் பட்டம் அளிக்கவில்லை?

! இந்தாங்க, பிடியுங்க பரிசை! விடுங்க ஆளை!

● கே. இரமேஷ், பள்ளிபாளையம்.

? கறுப்புப் பூனைகளைத் திருப்பி அனுப்புவோம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளதே?

* நடவடிக்கை பற்றி?



வாரிசு யார்?



! அடிக்கடி மத்திய அரசிடமிருந்து அவர்களைத் திரும்பப் பெற தாக்கீது வருவதாகவும் அதனால் ஜெ வெறுப்பு அடைந்திருப்பதாகவும் செய்தி. இதற்கு மத்திய அரசு தயவு எதற்கு? நமது ஸ்ரீபாலோ தேவாரமோ ஒரு முதல்தர கறுப்புப் பூனைப் படையை உருவாக்க முடியாதா என்ன?

● தெ. சு. திலீபன், வந்தராயிருப்பு.

? தேர்தல் கமிஷனருக்கு எதிராகக் கண்டனப் பொதுக் கூட்டம் நடத்த அ.தி.மு.க.வினருக்கு ஜெ கட்டளை பிறப்பித்துள்ளது பற்றி...?

! வழியே போகிற வம்பை விலைக்கு வாங்கி மடியில் கட்டிக் கொள்கிற கதைதான்.

● சு. அசோகன், சென்னை - 52.

? தெலுங்கு கங்கை திட்டம் போல் அல்லாது வீராணம் திட்டமாவது உடனே நிறைவேற சாத்தியக்கூறுகள் உண்டா?

! நிச்சயமாக ஜெ அறிவித்திருக்கும் ஓராண்டுக்குள் வேலை முடியாது. நிலத்தைக் கையகப்படுத்துவது போன்ற வேலைகள் தி.மு.க. ஆட்சியின்போதே நடந்து முடிந்து விட்டதாக மு.க. கூறியுள்ள போதிலும், உலகளாவிய டெண்டர் கோரி, பலரும் வந்து சர்வே செய்து டெண்டர் சமர்ப்பிக்கவே குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் தேவை. வேறு பல பிரச்னைகளும் இப்போதே தலை தூக்குகின்றன. எனவே வீராணம் திட்டம் வெற்றியடைந்தால் வாழப்பாடி அரசியலை விட்டு விலக வேண்டும் என்பது போன்ற (கண்ணப்பன்) சவால்கள் அர்த்தமற்றவை.

● அஷ்ரப் அலி, நக்கலை.


? தமிழ் தேச தன்னுரிமை முன்னணி நிறுவனர் ப. நெடுமாறனின் நடவடிக்கைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! நேரடியாக நல்லது செய்தும் நாலு பேர் கவனத்தைக் கவர முடியாத போது சிலர் இப்படித்தான் கோணல் வழியில் செல்கிறார்கள் - அரசியலில் நானும் இருக்கிறேன் என்று காட்டிக் கொள்ள. நெடுமாறனிடம் நாம் ரொம்ப மதிப்பு வைத்திருந்த காலம் ஒன்றுண்டு. இப்போது அவர் இலக்கும் ஆபத்தானது. செல்லும் மார்க்கமும் சறுக்கலானது.

● எஸ். என். ராகவன், பெல்லாரி.

? அண்மையில் மறைந்த தளபதி கரியப்பாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு பற்றி...?


! முதல் உலக யுத்தம் முடிந்த சமயம் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் சேர்ந்தவருக்குச் சீக்கிரமே (1920) மெஸபடோமியாவில் (இன்று ஈராக்) வேலை இருந்தது. பின்னர் படிப்படியாகப் பல பணிகள், பதவி உயர்வுகள். இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஈரான், ஈராக், ஸிரியா என்று பல நாடுகளிலும் தேசப் படைகளுடன் இந்திய ராணுவத்தை இணைத்துச் சிறப்பாகக் கடமையாற்றினார். பிரிட்டிஷ் அரசு அவருக்கு ''ஆர்டர் ஆஃப் பிரிட்டிஷ் எம்பயர்''



* கடமை வீரர்...



* குற்றம் சுமத்துகிறார்...



* ஆசை தோற்றது!

என்ற பட்டம் அளித்தது. அமெரிக்க அரசும் தன் பங்குக்கு விருது வழங்கியது. பாரதம் சுதந்திரம் பெற்ற பின் கரியப்பாவின் கடமையுடன் கண்ணியமும் வெளிப்பட்டது. இந்தியாவுக்கும் பாக்குக்கும் இடையில் ராணுவத்தைப் பங்கிடுவதில் தொடங்கி, காஷ்மீரிலும் ஹைதராபாத்திலும் அவரது வீரமும் ஆற்றலும் விகசித்தன. பிரிட்டிஷாரிடம் காட்டிய அதே விசுவாசம் சுதந்திர பாரத அரசிடமும் செயல்பட்டது. ஓய்வு பெற்ற பின் கட்டுப்பாடுடன் நடந்து கொண்டார். ஆஸ்திரேலியா நியூஸிலாந்தில் பாரதத்தின் தூதராகச் செயல்பட்டார். பாகிஸ்தானுக்குப் பல முறை நல்லெண்ணத் தூதராகச் சென்று வந்த போதிலும் அங்கு யுத்தக் கைதியாக இருந்து வந்த தமது மகனுக்கு விடுதலை கோரி அவர் ஒரு வார்த்தை கூடப் பேசவே யில்லை!

● மு. நெடுமாறன், வேலூர்.

? ரஜினி பெயரில் 'திராவிட மக்கள் முன்னேற்றக் கழகம்' என்ற புதிய கட்சி மதுரையில் துவக்கப்பட்டுள்ளது குறித்து?

! அடுத்த முதல்வர் ரஜினிதான் என்ற ஆசை ரஜினி ரசிகர்களுக்கு நீண்ட காலமாகவே உண்டு. அது அவ்வப்போது வெவ்வேறு வடிவங்களில் போஸ்டர்கள், கட்அவுட்கள் என்று வெளிப்படுகிறது. ஆனால் ரஜினி என்ன நினைக்கிறார் என்பதுதானே முக்கியம்! அவர் இவ் விஷயத்தில் தமது ஆற்றலின் எல்லைகளை உணராது போனால் தமிழகத்துக்கு மேலும் தலைவலி தான்!

● பி. ராஜன், தாராபுரம்.

? பாரதிய ஜனதா கட்சி ஆண்ட நான்கு மாநிலங்களிலும் இப்போதைக்குத் தேர்தல் இல்லை என்றாகி விட்டதே?

! தேர்தலுக்கு ஏற்ற அமைதிச் சூழல் இல்லை என்பது சப்பைக் கட்டு. ஒத்திப் போட்டு அவகாசம் பெறுவதால் காங்கிரஸின் பலம் அதிகரித்து விடப் போவதில்லை. ஆளுனர் ஆட்சி மூலம் சில சமுதாய நலத் திட்டங்களை நடத்தி வைத்தாலும் காங்கிரஸ் தன் செல்வாக்கை அப்படியொன்றும் பிரமாதமாக வளர்த்துக் கொண்டு விட முடியாது.

● எஸ். பாலாஜி, சென்னை.

? பேராசிரியர் கல்கி, வால்டர் ஸ்காட்டினுடைய தழுவல்களையே இலக்கியங்களாக்கியிருக்கிறார் என்று குற்றம்சாட்டுகிறாரே நா. காமராசன்?

! தாக்கம் என்பது வேறு தழுவல் என்பது வேறு. கம்ப ராமாயணம் தழுவல் இலக்கியம்; கல்கியுடையது தாக்கம். இங்கே நாவல் இலக்கியம் அரும்பு நிலையில் இருந்த போது மேல்நாட்டு நாவல்களால் தாக்கம் பெற்று மலர்ந்து மணம் பரப்பியவர் கல்கி. சூரிய ஒளி பட்டு தாமரை மலர்வது போல. காமராசன் நா எப்படியும் புரளும்.

● என். பாலு, கம்பரசம்பேட்டை.

? தூக்குத் தண்டனை கூடாது' என்ற கருத்து பற்றிப் பேசும் போது ராஜாஜி, 'குற்றவாளி குடும்பம் போல் கொலையுண்டவன் குடும்பத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டாமா?' என்று கேட்டார். நீங்களோ அன்பு வழி தெரியாமல் சமுதாயம் திசை கெட்டுப் போவதாக எழுதுகிறீர்கள்? (பிரேமதாசா தலையங்கம்)

! மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடாதீர்கள். திட்டமிட்டு ஒரு தனிமனிதன் படுகொலை செய்வது வேறு; அரசியல் கொள்கை ரீதியாக ஒரு சமுதாய மக்கள் நடத்தும் போராட்டம் வேறு. ராஜாஜியே காஷ்மீர் பிரச்னையில் என்ன எழுதினார், எதற்காக அவரைக் கைது செய்யக் கூட நினைத்தார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். ஈழத் தமிழர் பிரச்னையிலும் அவர் எழுதியிருப்பதைப் படித்துப் பாருங்கள். அன்புதான் ராஜாஜி கொள்கைகளின் ஆணிவேர் என்பது புரியும்.

● ஹெஜ்பிரியன், ரெட்ஹில்ஸ்.

? இந்த வாரம் தாங்கள் பிரமித்த விஷயம்?

! பாக் புதிய பிரதமர், நாளது வரை தமக்கு நரசிம்மராவ் வாழ்த்துத் தெரிவித்துப் பேசவோ எழுதவோ இல்லை என்று வருத்தியிருக்கிறார். நம் பிரதமரின் கறுகறுப்பு தெரிந்த கதைதான் என்றாலும் 'இந்த அளவுக்கா!' என்று பிரமிப்பு ஏற்படவே செய்கிறது!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
என். ஜவஹர்லால்,
"எஸ்பா"
யசோதா காம்ப்ளெக்ஸ்,
கே. கே. நகர், மதுரை - 625 020.

காவிரி டெல்டா பாலையாகி விடும்!

◆ வீராணம் திட்டத்தைப் புதுப்பித்துச் சென்னைக்குக் குடிநீர் கொணரும் திட்டத்தைத் தமிழக முதல்வர் அறிவித்திருப்பதைக் கேட்டு காவிரி டெல்டா விவசாயிகள் அதிர்ச்சி அடைந்து திடுக்கிட்டுத் திகைத்துப் போயுள்ளனர். ஏற்கெனவே காவிரி டெல்டா பகுதிக்கு, காவிரியில் போதுமான நீர் வரத்தின்மையால், விவசாயிகள் ஒரு போக சாகுபடிக்கே கஷ்டப்படுகிறார்கள். இந் நிலையில் காவிரியிலிருந்து வீராணம் ஏரிக்குச் செல்லும் நீரைச் சென்னைக்குக் கொண்டு சென்றால் காவிரி டெல்டா பாலை நிலமாகி விடும்.

திருபுவனம், வி.கே. பிள்ளை.

◆ தற்காப்புக்குக் கராத்தே அட்டைப்படக் கட்டுரை நிச்சயம் பெண்கள் மத்தியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி இருக்கும். இந்த அவசரமான, அபாயகரமான உலகத்தில் பெண்கள் பாதுகாப்புடன் வாழ கராத்தே அவசியமான கலை.

சேலம், எம். கே. சக்திவேல்.

◆ 'உடலில் ஊனம் இருக்கலாம்; மனத்தில் தான் இருக்கக் கூடாது' என்பதை உணர்த்திய உமா கல்யாணியின் சிறுகதை நெஞ்சை நெகிழ வைத்தது.

வேலூர் - 9, என். லட்சுமி.

◆ உம்மணாம் மூஞ்சிக்காரருக்குள்ளும் அற்புதமான நகைச்சுவை உணர்வு இருந்திருப்பதை "காந்திஜி பயணம் செய்வாரே; அந்த வகுப்பில் பி.ஏ. பாஸ் செய்திருந்தார்" என்ற வரிகள் காட்டிக்காட்டின. பிரதமரின் கதை இன்றைக்குப் பிரதமருக்கே கூடப் பொருந்தும்! தம்மைச் சுற்றி விருப்பவர்கள் அளிக்கும் தொல்லை எல்லா 'மக்கள் தலைவர்'களுக்கும் ஒரு பெரிய பிரச்னை. எதிர்பார்ப்பே இல்லாத மனப்பக்குவத்தைச் சீடர்களிடம் ஏற்படுத்தும் அளவுக்குத் தலைவர்கள் உன்னதர்களாகத் திகழ வேண்டுமே!

கீழ்நத்தம், இ. க. பாலசுப்பிரமணியன்.

◆ தொலைநோக்குடன் சிந்திப்பதில் நம் பிரதமர் படா கில்லாடிதான் ஸார்! முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, பிரதமர் பதவியில் 'தாம்' அமர்ந்திருக்கும் போது நிர்வாகம் எப்படியிருக்கும் என்பதை முன்கூட்டியே உணர்ந்திருக்கிறார் அவர், முக்காலமும் அறிந்தவர் என்பதற்கு "மாண்புமிகு அமைச்சரே" சான்று!

கும்பகோணம், கே. என். பாலகிருஷ்ணன்.

◆ என்னைப் போன்ற மாவட்டக்காரர்கள் மெட்ரோ பார்க்காததால் எதையும் இழக்கவில்லை என்பதை உங்கள் ஆசிரியிலிருந்து புரிந்து கொண்டேன்.

மொரட்டுப்பாளையம், இராஜேஸ்வரன்.

◆ 'தூர்தர்ஷனின் விளக்கம்' பகுதியில், உம்முடைய கேள்விகளுக்கு 'ஸ்கட்' என்று பெயர் சூட்டியது பிரமாதம்! ஆனால், உங்களது 'ஸ்கட்' கேள்விகளுக்கு 'சொதப்பல்' பதில் தந்த தூர்தர்ஷனின் பதில்களுக்கு 'பேட்ரியாட்' பெயர் சூட்டியிருப்பது அந்த 'பேட்ரியாட்'டுக்கே இழுக்கு!

சிதம்பரம், சிவ. கலாதரன்.

◆ காந்தி கண்ணதாசனைப் பற்றிய கட்டுரை, இன்றைய இளையதலைமுறையினரின் விரக்திப் புலம்பல்களைப் புறந்தள்ளி, புதிய புத்துணர்ச்சிப் பூக்களை பூக்கச் செய்யும்.

சேலம் - 9, இரவிச்சந்திரன்.

◆ மே-16 'கல்கி'யில் பழனி தேர்தல் சிறப்புக் கட்டுரை கண்டு சிரிப்பதா வேதனைப்படுவதா என்றே தெரியவில்லை. காங்கிரஸின் மொத்த வெற்றிக்குக் காரணம் இப்போது புரிந்து விட்டது. தேர்தல் ஏமாற்றமளித்தாலும் கல்கியின் ரிப்போர்ட் ஏமாற்றமளிக்காமல் உண்மை நிலையை உணர்த்தியது.

மருங்கூர், பால. கிருஷ்ணமூர்த்தி.

◆ கௌடர்களைப் பற்றிய எல்லா அரிய செய்திகளையும் தெளிவுபடுத்தி விட்டீர்கள். நன்றி. ஆனால், கௌடரைச் சமீபத்தில் உமக்கு ஞாபகப்படுத்திய முதல்வருக்கு நன்றி சொல்லி விட்டீர்களா?

பொன்மலை, துரை. நாகராஜன்.

◆ 'உலகில் அன்பென்னும் ஊற்று வற்றி விடுமோ?' என்று தாங்கள் தலையங்கத்தில் ஆதங்கப்பட்டுள்ள விதம் மிக அருமை. வன்முறை என்ற ராஜநாகத்தைப் 'பிரேமை' என்ற மகுடியை வாசித்துத்தான் அடக்க வேண்டும்.

தென்காசி, இ. சிவசுப்பிரமணியன்.

◆ முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்ற பழமொழிக்கேற்ப, பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தாலேயே ஒழிக்க வேண்டும். இந்திய அரசும், இலங்கை அரசும் விரைவாகச் செயல்பட்டு, பரவி வரும் பயங்கரவாதத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க முன்வர வேண்டும். இல்லையேல் இதுவே இந்த இரண்டு நாடுகளுக்கும் பெரிய கேள்விக்குறியாகி விடும்.

வலங்கைமான், பி. நூர்தீன்.

ராகிங் எனும் வழிப்பறிக் கொள்ளை!

◆ கல்லூரி திறக்கின்ற அன்றுதான் ராகிங் நடக்கும் என்று எண்ணியிருந்தீர்களானால் திருத்திக் கொள்ளுங்கள். இப்போதெல்லாம் அப்ளிகேஷன் ஃபாரம் வாங்கப் போகும் போதே நடக்கிறது. என்னைக் கேட்ட வார்த்தைகளால் திட்டி, விண்ணப்ப மனுவைப் பிடுங்கிக் கொண்டவர், ரூ 13:50க்கு ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கித் தந்து, ரூ 5 தண்டமும் சமர்ப்பித்த பிறகு, விடு திரும்ப ரூ 5 மட்டும் மிச்சம் வைத்து அனுப்பினர். ஒருசில கல்லூரிகள் தவிர மற்ற அனைத்திலும் இந்தக் கொடுமை நடக்கிறது. கேட்பாரில்லையா?

சென்னை - 83, ஆர். ஸ்ரீதர்.

சக்கரவர்த்தித் திருமகன்

38. அதோ, ராமனுடைய ஆசிரமம்!

மறுநாள் காலை முனிவர் ''இவ்விடத்திலிருந்து இரண்டரை யோசனை தூரத்தில் மந்தாகினி நதி ஓடுகிறது. அதன் கரையில் ஜன சஞ்சாரமற்ற பெரிய காடு இருக்கிறது. தெற்கே சித்திரகூட மலையிருக்கிறது. மலைக்குக் கீழ், வனத்தில் ஒரு பர்ணசாலையில் ராம லக்ஷ்மணர்களும் சீதையும் வசித்து வருகிறார்கள்'' என்று சொல்லி அங்கே போகும் வழியையும் விளக்கிச் சொன்னார்.

பிறகு பரத்வாஜரைத் தாய்மார்கள் மூவரும் வலம் செய்து வணங்கினார்கள். ''இவர்களை எனக்கு அறிமுகப்படுத்துவாய்'' என்று கேட்டார் ரிஷி.

பரதன் அவ்வாறே கோசலை, சுமித்திரை, கைகேயி இவர்களை ஒருவர் பின் ஒருவராகப் பெயர்கள் சொல்லி ரிஷியிடம் ஆசி பெறச் செய்தான்.

''இதோ, துக்கப்பட்டு, பட்டினி கிடந்து, இளைத்து நிற்கிறாள் மகாராஜாவின் பட்டமகிஷி கௌசல்யா தேவி. இந்திரனைப் பெற்ற அதிதிக்குச் சமானமான இவளே, சக்கரவர்த்தித் திருமகனைப் பெற்றவள். வலது புறத்தில், கோசலையைத் தாங்கிக் கொண்டு, வாடிய புஷ்பங்கள் நிறைந்த கொடியைப் போல் துக்கப்பட்டு நிற்பவள் அரசனுடைய இரண்டாவது பட்டமகிஷி, லக்ஷ்மண சத்ருக்னர்களைப் பெற்ற பாக்யவதி. இதோ நிற்கிறாள் எங்களுடைய துக்கத்துக்கெல்லாம் காரணமான என் தாய், ஆர்ய வடிவம் கொண்ட அனார்யை'' என்று கைகேயியைச் சுட்டிக் காட்டினான். அவளும் மற்றவர்களைப் போலவே ரிஷியை வலம் செய்து நமஸ்கரித்து விட்டு வெட்கம் படர்ந்த முகத்துடன் மகன் பரதன் பக்கத்தில் வந்து நின்றாள்.

அப்போது பரத்வாஜ ரிஷி பரதனுக்குச் சொன்னார்.

''தாயை அப்படிச் சொல்லாதே! உலகத்தின் நன்மைக்காகவே அனைத்தும் நடந்தன'' என்றார்.

தாய்மார்களைக் காட்டும் இந்த நிகழ்ச்சியைக் கம்பர் இடம் மாற்றி வெகு அழகாகக் குகப் படலத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார். குகன் பணிவுடன் விசாரிக்க பரதன் ஒவ்வொருவராகச் சொல்லிக் காட்டுகிறான். பரத்வாஜ ரிஷி ஆசிரமத்தில் நடந்ததாக வால்மீகி சொல்லும் நிகழ்ச்சியைக் கவிக் கண்ணால் பார்த்து அதன் சரியான இடம் எங்கே என்று கண்டு கொண்டு அமைத்துத் தம் அசாதாரணத் திறமையோடு கம்பர் பாடியிருக்கிறார்.

அதை இந்த இடத்திலேயே எடுத்துச் சொல்லுவது குற்றமாகாது.

சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற
  கோசலையைத் தொழுதுநோக்கி,
வெற்றித்தார்க் குரிசில், இவர் யாரென்று
  குகன்வினவ வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல்தேவி மூன்றுலகும்
  ஈன்றானை முன்ஈன்றானைப்
பெற்றத்தால் பெரும்செல்வம் யான்பிறத்த
  லால்துறந்த பெரியாள்' என்றான்.

''ராமன் என்கிற செல்வத்தைப் பெற்ற கோசலை, பரதன் என்று ஒரு மகன் நான் பிறந்ததால் அந்தச் செல்வத்தை இழந்தாள். அவளே இவள்'' என்று கூறினான் பரதன்.

அறந்தானே என்கின்ற அயல்நின்றாள்
  தனைநோக்கி, 'ஐய அன்பின்
நிறைந்தாளை உரை'யென்ன
  'நெறிதிறம்பாத்
  தன்மெய்யை நிற்பதாக்கி
இறந்தான்தன் இளந்தேவி யாவர்க்கும்
  தொழுகுலமாம் இராமன்பின்பு
பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான்
  தனைப்பயந்த பெரியாள்' என்றான்.

''நான் அடையாத பாக்கியத்தை லக்ஷ்மணன் பெற்றான். அந்த உண்மைத் தம்பியின் தாய் இவள்.''

ராஜாஜி



'படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்
செவிலியைத்தன் பாழ்த்தபாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்துதேய
உடரெலாம் உயிரிலா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடரிலா முகத்தாளை அறிந்திலையேல்
இந்நின்றாள் என்னையீன்றாள்.'

வால்மீகி ராமாயணத்தில் இருப்பது போலவே கம்பருடைய சித்திரத்திலும் பரதன் கைகேயியைக் கடுமையான மொழிகளைச் சொல்லித்தான் அறிமுகப்படுத்துகிறான்.


பரதனும் பெரும் பரிவாரமும் பரத்வாஜர் சொன்ன வழியைப் பிடித்துச் சென்றார்கள். சித்திர கூட மலையும் தெரிந்தது. ஓர் இடத்தில் இலேசாகப் புகை கிளம்புவதையும் கண்டார்கள். அதுவே சக்கரவர்த்தித் திருமகன் ஆசிரமம் என்று ஊகித்துக் கொண்டார்கள். உடனே பரிவாரத்தில் பெரிய மகிழ்ச்சி கோஷம் கிளம்பிற்று. அனைவரையும் அங்கேயே நிறுத்தி விட்டு சுமந்திரன், வசிஷ்டர், பரதன் மூவர் மட்டுமே புகை தெரிந்த இடம் நோக்கிச் சென்றார்கள்.

39. இளையவனுடைய ஆத்திரம்

நடந்து போன அனர்த்தங்களை எப்படியாவது நல்ல முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று பரதன், இவ்வாறு ஊரை விட்டு வனம் நோக்கிச் சென்று கொண்டிருந்த நாட்களில், சித்திரகூடத்தில் பர்ண சாலையில் ஒருவாறு சந்தோஷமாகவே காலங்கழிந்து வந்தது.

"லக்ஷ்மணனும் சீதையும் பக்கத்திலிருக்க எனக்கு என்ன குறை?" என்று எண்ணினான் ராமன்.

மலையின் கம்பீரமும், வனத்தின் அழகும், பக்ஷிகளின் மதுரமான பாட்டும் விளையாட்டும் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன. ஊரையும் உறவின



ரையும் விட்டுப் பிரிந்த துக்கத்தை மறந்தான்.

''சீதா, அதோ, பறவைகள் விளையாடுவதைப் பார்! மலைப் பாறைகளைப் பார்! அவற்றில் தாதுக்கள் நீலமும் மஞ்சளும் சிவப்புமாக எப்படி மின்னுகின்றன! வனத்தில் செடிகளையும் கொடிகளையும் பார். புஷ்பங்களைப் பார். நாம் என்னவோ எண்ணினோம், இந்த வனவாசம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! என்னைப் போன்ற பாக்கியவான் யார்? இந்த மகிழ்ச்சி ஒரு பக்கம், தந்தையின் ஆணையை நிறைவேற்றும் பெரிய லாபம் ஒரு பக்கம். தந்தைக்குச் செலுத்த வேண்டிய கடமையைச் செய்து தீர்ப்பதோடு தம்பி பரதனுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும் மகிழ்ச்சியையும் அடைந்தேன்.''

இவ்வாறு சொல்லிக் கொண்டு ராமன் தன் துக்கத்தை அகற்றியும், சீதைக்கு உற்சாகம் உண்டாக்கியும் பிரதிக்ஞையை நிறைவேற்றி வந்தான்.

மலையிலிருந்து சில சமயம் சீதையுடன் மந்தாகினி ஆற்றுக்குப் போவான். அங்கே இருவரும் ஸ்நானம் செய்வார்கள். நதியின் அழகை அநுபவிப்பார்கள். ''மணல் குன்றுகளைப் பார்! அன்னங்களும் பறவைகளும் தாமரைக் கொடிகளிடையில் விளையாடுவதைப் பார்! ஆற்றின் அழகு உன் அழகைப் போலவே இருக்கிறது, காதலி!'' என்பான் ராமன்.

''இந்த நதிக்கரை எவ்வளவு மனோகரமாக இருக்கிறது! மிருகங்கள் இறங்கி நீர் குடிக்கும் துறைகளில் ஜலம் சிவந்து எவ்வளவு அழகாக இருக்கிறது! இதற்குச் சமானம் குபேரனுடைய ஸௌகந்திக ஸரஸ்ஸும் இல்லை. அதோ, பார்! ரிஷிகள் நீராடுகிறார்கள். சிலர் சூரியனை உபாசித்து நிற்கிறார்கள். புஷ்பங்கள் மரக் கிளைகளிலின்று நீரில் விழுவதைப் பார். அதோ, முத்துக்களை வாரி எறிவது போல் மந்தாகினி துள்ளிக் குதித்து விளையாடி வரும் அழகைப் பார்! பட்டண வாசத்தைவிட இந்த வனவாசம் எவ்வளவோ இன்பமாக இருக்கிறது. இது நம்முடைய பாக்கியம். ரிஷிகளும் சித்தர்களும் இங்கே நதியில் தினமும் நீராடுகிறார்கள். இந்தக் காட்சி நமக்கு நகரத்தில் கிடைக்குமா? இந்த மலையே நம்முடைய அயோத்தி. கூட்டம் கூட்டமாகப் பறக்கும் இந்தப் பக்ஷிகளும் வனவிலங்குகளும் நம் பிரஜைகள். இந்த மந்தாகினியே நம்முடைய ஸரயூ நதி. லக்ஷ்மணனும் நீயும் என்னுடன் இருக்கும் போது வேறு என்ன வேண்டும்? ஆற்றில் மிருகங்கள் ஒன்றையொன்று பார்த்துப் பயமின்றி நீர் குடித்து வருவதைப் பார்த்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. இந்த நதியில் நீராடி இங்கே கிழங்கும் பழங்களும் புசித்து உன்னுடன் காடும் மலையும் சுற்றி மகிழ்ச்சியடையும் போது நான் அயோத்தியையாவது ராஜ பதவி

அடுத்த இதழில்...

●● பள்ளி திறக்கிறது; பணத்துக்கெங்கே போவது?

- கவர் ஸ்டோரி

●● வளர்ந்து வரும் பிளாக் டிக்கெட் விற்பனை!

- ஓர் அலசல்!

யையாவது ஏன் நினைக்க வேண்டும்?''

இவ்வாறு சக்கரவர்த்தித் திருமகன் ஜானகியுடனும் தம்பி லக்ஷ்மணனுடனும் ஆற்றங்கரையிலும் மலையிலும் வனத்திலும் சஞ்சரித்துக் கொண்டு சந்தோஷமாகக் காலங் கழித்து வந்தான்.

மலைச் சாரலில் ஓர் இடத்தில் நிம்மதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

திடீர் என்று தூரத்தில் தூசி கிளம்பி ஆகாயமளாவி நின்றது. அத்துடன் பெரிய ஜன சமுத்திரத்தின் கம்பீரப் பேரொலியும் கேட்டது. பரதனுடைய சேனை காட்டில் பிரவேசித்ததன் காரணமாகக் காட்டுப் பிராணிகள் பயந்து இங்கு மங்கும் கூட்டமாக அலைந்து கொண்டிருந்ததையும் ராமன் பார்த்தான்.

லக்ஷ்மணனைப் பார்த்துச் சொன்னான் ராமன் :

''தம்பி, கேள்! ஏதோ பெரிய கோஷம் கேட்கிறது. யானைகளும் காட்டெருமைகளும், மான்களும் நாலா பக்கமும் ஓடுகின்றன. என்ன விஷயம் என்று நன்றாகப் பார்! யாராவது அரச குலத்தார் வேட்டையாட வந்திருக்கிறார்களா அல்லது சிங்கம், புலி இவற்றின் காரியமா என்று பார்த்துச் சொல்வாய்'' என்றான்.

உடனே லக்ஷ்மணன் மிக உயர்ந்த ஒரு ஆச்சா மரத்தின் மேல் ஏறினான். நாலா பக்கமும் நன்றாகப் பார்த்தான். வட திசையில் பெரியதொரு சதுரங்க சேனை வந்து கொண்டிருந்ததைக் கண்டான். மரத்தின் மேலிருந்தே ராமனுக்கு எச்சரிக்கை செய்தான்.

''அண்ணா! ஒரு பெருஞ் சேனை துவஜங்களைப் பறக்க விட்டுக் கொண்டு, தேர்ப்படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட்படை எல்லாமாக வந்து கொண்டிருக்கிறது. அபாயம்! உடனே நெருப்பை அணைத்து விட்டு, சீதையை அழைத்துச் சென்று மலைக் குகையில் பத்திரமாக இருக்கச் செய்து விட்டு, கவசம் பூண்டு வில்லும் அம்பும் எடுத்து யுத்தத்துக்கு ஆயத்தமாவோம்!'' என்றான்.

''அப்பனே, நன்றாகப் பார்த்துச் சொல். இந்தப் படை எந்த அரசனுடையது என்று தேர்க் கொடியைக் கவனித்துப் பார்!'' என்றான் ராமன்.

அவ்வாறே பார்த்தான் லக்ஷ்மணன். பார்த்து விட்டு ஒரே கோபாவேசமாகி விட்டான்.

''அண்ணா! ராஜ்யத்தைப் பெற்றதோடு நிற்காமல் நம்மை எதிர்த்துக் கொல்லவும் வருகிறான் பரதன். தேரில் திருவாத்திக் கொடி காற்றில் ஆடுவது நன்றாகக் காணப்படுகிறது. இன்று கைகேயி மகன் என் கையில் அகப்பட்டு விட்டான். அவனை விடப் போவதில்லை. அற நெறியிலிருந்து விலகிய இவனைக் கொல்வதில் என்ன பாவம்? இந்தச் சேனையை இங்கிருந்து எதிர்க்கலாமா, அல்லது மலைமேல் ஏறி நின்று எதிர்ப்போமா? நமக்கு இவன் செய்த கொடுமைக்கு இன்று பழி வாங்கி விடலாம். நம்மைக் கொல்ல வரும் பகைவனைக் கொல்வதில் என்ன பாவம்? முதலில் இவனல்லவோ அதருமத்தில் இறங்குகிறான். அவனை எதிர்த்துக் கொல்வது தருமமேயாகும். இவனை வதம் செய்து விட்டுத் துராசையில் வீழ்ந்த இவன் தாயின் எண்ணத்தை இன்று முற்றிலும் அழித்துத் தீர்ப்போம். இந்த வனத்தில் ரத்த வெள்ளம் ஓடச் செய்யப் போகிறேன். யானை ஒடித்த பெரிய மரம் போல் இன்று பரதன் வீழ்வான். இந்தச் சேனையை நிர்மூலமாக்குவோம். இந்தக் காட்டிலுள்ள பிணம் தின்னும் மிருகங்களுக்கு நிறைய உணவு கொடுப்போம்.''

இவ்வாறு லக்ஷ்மணன் கோபத்தில் தன்னையும் மறந்து பேசினான்.

(தொடரும்)

• இரு கோடுகள்



'காந்தி கிராமம்' என்ற பெயரில் நாடகமாக எழுதப்பட்டு, பின்னர் திரைப்படமாகி, தேசிய விருது பெற்ற படம் : 'ஒரே ஒரு கிராமத்திலே' நாடக வடிவத்தில் நடிக்க முடியாமல் போனாலும் திரைப்பட வடிவத்தைப் பார்த்து, பரிசுக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது மிகவும் திருப்தியளித்தது. திறனாய்வுக் குழுவில் என்னுடன் இருந்த மற்றவர்களும் ஒரு மனதாக அப்படத்தைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

'காந்தி கிராமம்' நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பு நழுவிப் போனதோடு எனது நாடக மேடைத் தொடர்பும் அற்றுப் போயிற்று. ஒரு தெலுங்கு கலைக் குழுவுடன் 91 ஜூலையில் அமெரிக்கா

முத்திரைப் படம்; விசித்திர அனுபவம்!

சென்ற போது ஆறு வாரங்களில் 25 ஆயிரம் மைல் பயணம் செய்து 20 முக்கிய நகரங்களில் 'சமையல்காரர் தேவை' என்ற காமெடி நாடகத்திலும், 'தரம் சுந்தரம்' என்ற சீரியஸ் நாடகத்திலும் நடித்தது, அதைத் தொடர்ந்து ஹைதராபாத், பெங்களூர் போன்ற நகரங்களில் 'சமையல்காரர் தேவை' நாடகத்தை அரங்கேற்றியது - இப்படி விட்ட குறை தொட்ட குறையாக வாய்த்த ஒரு சில சந்தர்ப்பங்களோடு சரி.

'ஒரே ஒரு கிராமத்திலே' படத்தில் கலெக்டராக லட்சுமியைப் பார்த்த போது நான் கலெக்டராக நடித்த 'இரு கோடுகள்' படம் நினைவுக்கு வந்தது. அப்படத்தில் நடிக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்ததே ஒரு சுவையான நிகழ்ச்சி.

'இரு கோடுகள்' கதை நாடகமாகத்தான் முதலில் அரங்கேற்றப்பட்டது. நாடகத்தில் கலெக்டராக நடித்தவர் லீலா. எம். ஜி. ஆர். நடித்த பல திரைப்படங்களில் சிறு வேடங்களில் தோன்றியுள்ள லீலா, தற்போது ஆல் இந்தியா ரேடியோவின் மதுரை நிலைய இயக்குனராக இருந்து வருகிறார். 35 வருடங்களாக எனக்கு நெருக்கமான சிநேகிதியும் கூட.

'இரு கோடுகள்' நாடகத்தில் லீலாவின் நடிப்பு என்னை மெய் சிலிர்க்க வைத்தது. 'இப்படிக் கூட ஒரு அற்புதமான நாடகம் போட முடியுமா!' என்று பிரமித்துப் போனேன். அதே கதையைச் சினிமாவாக்கி, எனக்குக் கலெக்டர் பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்புத் தரப்பட்டால் எப்படி இருக்கும் என்ற கற்பனையில் மூழ்கிப் பூரித்தேன்.

சிறிது காலம் கழித்து, ஜோஸப் ஆனந்தனின் 'இரு கோடுகள்' கதையைக் கலாகேந்திரா நிறுவனமே திரைப்படம் ஆக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன்.

'கடவுளே! கலெக்டர் பாத்திரத்தில் நடிக்க எனக்கு வாய்ப்புக் கிடைக்க வேண்டுமே...!' என்று பிரார்த்தனை செய்தேன்.

சௌகார் ஜானகி

பாலசந்தர் எனக்கு நன்கு தெரிந்தவர்தான் என்றாலும் நானாகப் போய் வாய்ப்புக் கேட்கக் கூடாது என்ற எனது கொள்கையை நான் தளர்த்திக் கொள்ள விரும்பவில்லை. கே. பி. சாரே என்னை அந்தப் பாத்தி ரத்துக்குத் தேர்ந்தெடுத்த போது எனது மகிழ்ச்சி எத்தகையதாக இருந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்! அந்த உணர்வு எனக்கு இன்னமும் நினைவில் பசுமையாக இருக்கிறதேயொழிய அதை வர்ணிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை!

மெட்ரிகுலேஷன் வரை மட்டுமே படித் திருந்த எனக்குக் கலெக்டராக நடிக்க வாய்ப்புக் கிடைத்தது பெரிய அதிர்ஷ்டம் என்று நம்பினேன். என் ஆழ்மன ஏக்கங்களுக்கு அந்தப் பாத்திரம் ஒரு வடிகாலாக இருந்ததாலோ என்னவோ 'இரு கோடுகள்' படம் என் திரை வாழ்க்கையின் முத்திரைப் படமாக அமைந்து விட்டது.

''அந்தக் கலெக்டர் பாத்திரத்துக்குச் சௌகாரை விட மிகப் பொருத்தமான ஒருவர் இருக்க முடியாது...'' என்று பாலசந்தர் ஒரு முறை பாராட்டிய போது சந்தோஷத்தின் எல்லையையே தொட் டேன்.

மிடுக்கும் அதிகார தோரணையும் நிறைந்த தத்ரூபமான என் நடிப்புக்கு ஒருபுறம் எக்கச்சக்க பாராட்டுக் கிடைத் தாலும் மறுபக்கம் ஒரு விநோதமான பிரச்னை கிளம்பியது...

கலெக்டர் பாத்திரத்தின் மிடுக்கும் அதிகார தோரணையும் என்னை அறியா மல் என் நிஜ வாழ்க்கையிலும் ஊடுரு வின!

என் குழந்தைகளை நான் கண்டிப்பும் கட்டுப்பாடுமாய் வளர்த்தாலும் சுதந் திரமும் செல்லமும் கொடுக்கத் தவற வில்லை. அவர்களுடன் போதுமான அளவு நேரத்தைக் கழிக்க முடியவில்லை என்ற குற்ற உணர்வு என்னை எப்போதுமே உறுத்தும். அதனால் அவர்களுடன் இருக் கும் நேரத்தில் மிகவும் அன்பாக நடத்து வேன்.

ஒவ்வோர் இரவும் என் பக்கத்தில் படுத்துக் கொள்ள என் மூன்று குழந்தை களும் போட்டி போடுவார்கள். பல இரவு களில் மூத்தவர்கள் இருவரையும் இரண்டு பக்கங்களிலும் போட்டுக் கொண்டு கடைக் குட்டியை மடியில் படுக்க வைத்துத் தட்டித் தூங்க வைத்திருக்கிறேன். சில சமயம் நள்ளிரவில் எழுந்து உட்கார்ந்து கொண்டு, தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளை வாரி அணைத்துக் கண்ணீர் விடுவேன். தாயும் தந்தையுமாக நான் ஒருத்தியாகவே நின்று போராடிக் கொண்டிருக்க, அவர்க ளுக்குத் தர வேண்டும் என்று கற்பனை செய்து வைத்திருந்த நல்ல வாழ்க்கையை, என்னால் தர முடியுமா என்ற கேள்வியே அதற்குக் காரணம்.

பல நாட்கள், காலையில் அவர்கள் எழுவதற்கு முன்பே நான் ஷூட்டிங்குக்குக் கிளம்பிப் போயாக வேண்டும்; 'அம்மா எப்போ வருவாங்க?' என்று முடிவில் லாமல் கேட்டுக் கொண்டே இருப்பார் களாம் குழந்தைகள். மூத்த பெண் யக்ஞ பிரபாவை சர்ச் பார்க்கிலும், மகன் ரமணாவை டான் பாஸ்கோவிலும் கடைக் குட்டி சசியை குட்ஷெப்பர்ட் கான்வென் டிலும் படிக்க வைத்தேன். சிறந்த கல்வி, நல்ல உணவு, உபயோகமான புத்தகங்கள், அழகான உடைகள் என்று அவர்களின் விருப்பங்கள், தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்ய முடிந்தாலும், இந்தக் குறையை மட்டும் என்னால் தீர்த்து வைக்க முடியவில்லை.

அம்மாவிடமிருந்து அன்பு மழையை மட்டுமே பெற்றுப் பழகிப் போன அவர்கள், 'இரு கோடுகள்' கலெக்டர் பாத்திர பாதிப்பால் வீட்டிலும் நான் அதிகார தோரணையுடன் பேச ஆரம்பித்த போது குழம்பியும் மிரண்டும் போனார்கள். என் குரலிலும் நடவடிக்கையிலும் ஏற்பட்ட திடீர் மாற்றத்தை எப்படி அந்தக் குழந்தைகளால் ஏற்க முடியும்? எங்கள் உறவில் ஒரு தற்காலிக, சிறு தடுமாற்றம் ஏற்பட்டதை நான் தெய்வாதீனமாகச் சீக்கிரத்திலேயே உணர்ந்தேன்.

அதற்கான காரணத்தையும் யோசித்துப் புரிந்து கொண்டு சரியான தருணத்தில் என்னை நானே திருத்திக் கொண்டேன். என் உலகமே என் குழந்தைகள்தான் என்பதை இச்சம்பவம் முன்னெப்போதைக் காட்டி லும் வலுவாக எனக்கு உணர்த்தியது. அவர் களிடம் இன்னும் அதிகமாக அன்பும் அக்கறையும் காட்டலானேன்.

என் மூன்று குழந்தைகளும் இன்று வளர்ந்து தங்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு விட்டார்கள். அவர்கள் வாழ்க்கையிலும் சுகதுக்கங்கள் உண்டு. அவற்றின் பாதிப்பு எனக்கும் உண்டு!

(தொடரும்)

படம் உதவி :
ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்



அக்னி நட்சத்திரமா...

'அக்னி நட்சத்திரம்' என்றாலே 'நின்னுக்கோரி வர்ணம்' என்ற பாட்டைச் சிலர் முணு முணுப்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டிருக்கிற அக்னி நட்சத்திரம் என்பது என்ன?...

ஆண்டுக்கு ஒரு முறை கிருத்திகை நட்சத்திரத்தில் சூரியன் சஞ்சாரம் செய்கிறது. பதினான்கு நாட்கள் நீடிக்கும் இந்த சஞ்சாரத்தைத்தான் 'அக்னி நட்சத்திரம்' என்கிறார்கள். இந்த இரு வார காலமும் சூரியனுக்கு மிக அருகே பூமி இருக்கிறது. எனவே வெப்பமும் உச்சத்தில் இருக்கிறது.

சாதாரணமாக இந்தப் பதினான்கு நாட்களும் நல்ல காரியங்கள் (கல்யாணம் போன்றவை) செய்வதில்லை. இதற்குக் காரணம் கடும் வெயிலில் சிரமம் தவிர்க்கலாம் என்பதுதானே தவிர வேறு புராண, சம்பிரதாய பின்னணிகள் கிடையாது.

- இது பாலகிருஷ்ண சாஸ்திரிகள் மற்றும் கோடா வெங்கடேஸ்வர ராவ் போன்ற பௌராணிகர்களின் விளக்கம்.

அக்னி நட்சத்திரத்தின் போதுதான் சூரியனுக்கு மிக அருகே பூமி இருக்கிறது என்பதால் அந்தக் கால கட்டம்தானே அதிவெப்பமானதாக இருக்க வேண்டும். சில சமயங்களில் அதற்கு முன்னரும் பின் வரும் வெப்பத்தை அதிகமாக உணர்கிறோமே....

இதற்குக் காரணத்தை விளக்கினார் வானிலை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் எஸ்.கே. சுப்பிரமணியன் :

பொதுவாக மே மாதத்தில்தான் (அக்னி நட்சத்திர சமயத்தில்) வெப்பம் அதிகமாக இருக்கும். ஜூன் மாதத்தில், தென் மேற்குப் பருவ மழை தொடங்கும் சமயத்தில், வெப்பம் குறையும். ஆனால் கடலோர நகரங்களைப் பொறுத்தவரை தென் மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று, கடலிலிருந்து வீசும் குளிர் காற்றுக்கு இடையூறாக இருப்பதால் கடற்காற்றின் தொடக்கத்தைத் தாமதப் படுத்திவிடும். இதனால் வெப்பநிலை இலேசில் குறையாமல் வாட்டி எடுக்கும். மே மாதத்தில் உயர்ந்த அளவுக்கு ஜூன் மாதத்தில் பாதரசம் உயராவிட்டாலும் வெப்பம் நீடித்து நிலைப்பதால் சங்கடத்தை அதிகமாக உணர்கிறோம்.

- கலா மூர்த்தி

அது என்ன?



பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



அறிமுகப்படுத்துகிறோம்! gala
தமிழகமெங்கும்.
எத்தனை இன்பம்... இயற்கையின் சுவை!
பல விதக் கனிகளின் நறுமணம், சுவையுடன்.
ஜாம் :
• பைனாப்பிள் • ஸ்ட்ராபெர்ரி
• மாங்கனி • பல்வேறு கனிகள்
ஸ்க்வாஷ் :
• ஆரஞ்சு • மாங்கனி
• எலுமிச்சை
க்ரஷ்:
• பைனாப்பிள் • திராட்சை
• ஸ்ட்ராபெர்ரி
ஸாஸ்:
• தக்காளி • பூண்டு
• மிளகாய்
gala
TOMATO SAUCE
gala
gala
ORANGE SQUASH
gala
PINEAPPLE CRUSH
gala
கருத்துடன் தேர்ந்தெடுத்த
கனிகளின் அளிப்பு!
என்ன சுவை...... எத்தனை வகை.
தயாரிப்பாளர்கள் :
கர்னாடகா அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்
பெங்களூர் - 560 024.
விற்பனையாளர்கள் :
MSIL
மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட்,
பெங்களூர் - 560 052.
Ak Bg/KAIC/1 Tam.

REGISTERED No. M. 4392
Registered as Newspaper in Sri Lanka

"சொட்டு நீலத்துடன்"
வழங்கப்படும் இலவசப் பரிசுகள்
என்றுமே என்னைக் கவர்ந்தது இல்லை.



பொதுவாக ஒரு பொருளை நுகர்வோர் நிராகரிக்கும்போது, அதன் தயாரிப்பாளர் தனது விற்பனைக்கு கைகொடுக்க, பயன்படுபவையே இந்த இலவசப் பரிசுகள் :

ஆனால் 'உஜாலா'வின் சிறப்பே தனி

நமக்கு தேக்கரண்டி அளவுகள் தேவை யில்லை ?

உஜாலாவின் நான்கு "துளிகளே" போதும் ஒரு லிட்டர் நீருக்கு.

உபயோகிப்பவர்களுக்கு

உஜாலாவின் ஒவ்வொரு துளியும் துணிகளில் நிரந்தரமான வெண்மையை உண்டாக்கி மனதில் நிறைந்த திருப்தியை தருகிறது. நீரில் எளிதாக கரைந்து துணிகளின் இழைகளில் உடனடியாக உறிஞ்சப்பட்டு இன்டைன்ட் ஆக்ஷன் மூலம் ஒரே சீராக பரவும் தன்மையை உடையது. உடைகளின் அழுக்கை நீக்கி துணிகளுக்கு பளபளப்பான வெண்மையை தருகின்றது. ORAL TOXICITY TEST சோதனை மற்றும் SKIN IRITATION TEST சோதனையில் சருமத்திற்கு எந்த கெடுதலையும் உண்டாக்காது என்று சான்றிதழ் பெற்றது உஜாலா. இது ஜோதி லேபரட்டரியின் ஒரு சிறந்த தயாரிப்பு ஆகும்.



JYOTHY LABORATORIES
Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.
Regd. Office: Sreekrishna Nagar
Bombay-400 066.

உஜாலா